# தமிழரசு

அக்டோபர் 16-31, 1997 ரூ.3





# இந்த இதழில்...


சேப்பாக்கம் திருமயிலை
துரித ரயில் போக்குவரத்து துவக்கம்
இந்தியாவில் எலிசபெத் இராணியார்
மாப்பிள்ளைஊரணி நிகழ்ச்சியில்
முதல்வர் கலைஞர் உரை
சட்டப்பேரவையில் முதல்வர் உரை
சூரியக் குழந்தைகள்
இசைஞானி இளையராஜா
பாடுபொருள் ஆகாத சுதந்திரப் போர்த் தியாகிகள்
திரு. கிருஷ்ணசாமி பாரதி
ஜேம்ஸ் டீனும் செண்பகராமன்புதூர்க்காரரும்
மா. அரங்கநாதன்
கடலூர் மாவட்ட சுதந்திரப்போராட்ட வீரர்கள்
நல்ல தமிழ் அறிந்திடுவோம்!
எங்கள் ஊர் பிரச்சினை
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்
முனைவர் நா. செயப்பிரகாசு
இதய நோயாளிகளுக்கு....
டாக்டர் சு. அர்த்தநாரி

2
3
5
10
17
22
26
29
32
36
41
46




**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2028
புரட்டாசி - ஐப்பசி
(அக்டோபர் 16-31, 1997)
மலர் : 28 இதழ் : 8
விலை ரூ.3


பத்மவாசன்







# சேப்பாக்கம் - திருமயிலை துரித ரயில் போக்குவரத்து துவக்கம்

திருமயிலையிலிருந்து சேப்பாக்கம் வரை இயக்கப்படும் துரித ரயில் போக்குவரத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தொடங்கிவைத்து, விழாப் பேருரையாற்றினார். மாண்புமிகு மத்திய ரயில்வே அமைச்சர் திரு.ராம் விலாஸ் பஸ்வான் துவக்கிவைத்தார். 19.10.97 அன்று, சென்னையில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு மத்தியத் தொழில்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்- தென்னக ரயில்வே பொதுமேலாளர் திரு.கீர்த்திவாசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாண்புமிகு மத்திய பெட்ரோலிய மற்றும் நிலவாயுத்துறை இணையமைச்சர் திரு.டி.ஆர். பாலு, மாண்புமிகு மத்தியப் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு.என்.வி.என்.சோமு, மாண்புமிகு மத்திய ஓய்வூதியம் மற்றும் மக்கள் குறைதீர்ப்பு இணையமைச்சர் திரு.எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.கி.மனோகரன், மாண்புமிகு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு என்.வீராசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி முதலான அமைச்சர் பெருமக்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

MAP OF MRTS




**MRTS – சிறப்பம்சங்கள் – துரித இரயில் போக்குவரத்து – முதல் கட்டம் – சென்னை பீச் முதல் திருமயிலை வரை**

| | |
|---|---|
| நீளம் | : 8.97 கி.மீ. |
| செலவு | : ரூ.260 கோடி |
| மொத்த இரயில் நிலையங்கள் | : 8 |
| இரயில் பயண நேரம் | : 20 நிமிடங்கள் |

# இந்தியாவில் எலிசபெத் இராணியார்

நம் இந்திய நாட்டிற்கு மட்டுமல்ல; அண்டை நாடான பாகிஸ்தானுக்கும் இது சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டுதான்.

இதனையொட்டி, இங்கிலாந்து இராணி இரண்டாம் எலிசபெத் இந்தியாவிற்கு, 36 ஆண்டுகளுக்குப் பின், வருகை தந்து சிறப்பித்தார்; ஒரு வார காலம் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு 12.10.97 அன்று இரவு நம் தலைநகராம் டில்லி மாநகருக்கு வந்து சேர்ந்தார். இந்தப் பயணத்தில், அவரது கணவர் எடின்பரோ கோமகனும் உடன் வந்தார்.

அங்கே அவர் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன், மாண்புமிகு பிரதமர் திரு. ஐ.கே. குஜ்ரால் ஆகியோரைச் சந்தித்து அளவளாவினார்.

பின்னர் அவர் காந்தியடிகள் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்; இந்திய பிரிட்டிஷ் உறவைச் சித்திரிக்கும் தேசிய அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்தார்; ஜாலியன்வாலாபாக் சென்று, 1919ல் அங்கே உயிரிழந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினார்; அமிர்தசரஸ் பொற்கோயிலைச் சுற்றிப்பார்த்தார்.



### சென்னையில் இராணியார்

அங்கே இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்ட அவர்கள் 15.10.97 அன்றிரவு நமது சென்னை மாநகருக்கு வந்துசேர்ந்தார்கள். மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் வரவேற்றனர்.

மறுநாள் காலையில் சென்னைத் தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில், நடிகர் கமல்ஹாசன் ஏற்பாடு செய்திருந்த படப்பிடிப்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பார்த்து ரசித்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கேமிராவை இயக்கி வைக்க, த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் கிளாப் அடிக்க இந்தப் படப்பிடிப்பு நடைபெற்றது.

பின்னர், இராணி எலிசபெத் திருவான்மியூரில் உள்ள கலாசேத்ராவுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தார். ருக்மணி

அருண்டேல் துவக்கிய இந்த நாட்டியப் பள்ளியில் அவரை இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வரவேற்றார்.

அன்று மாலையில் காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு இராணி எலிசபெத் சென்று பார்வையிட்டார். அங்கே அவரை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வெ. இறையன்பு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, ஊராட்சி ஒன்றியத் தலைவர் உறுப்பினர்கள் ஆகியோர் பூச்செண்டு கொடுத்தும் பொன்னாடை வழங்கியும் வரவேற்றார்கள்.

கோயில் வரலாறு அதன் வரலாற்றுச் சிறப்பு போன்றவற்றை மாண்புமிகு தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இராணியாருக்கு விளக்கினார். அதோடு, அங்கு நடைபெற்ற சிற்பம் செதுக்கும் பணியையும் இராணியார் பார்வையிட்டார்.

கோயிலுக்குள்ளேயே காஞ்சிபுரம் பட்டு நெசவுத் தொழிலை விளக்கிடும் வகையில் அங்கே வைக்கப்பட்டிருந்த தறிகளையும் இராணியார் பார்வையிட்டார். முன்னதாக அங்கே அவரை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்கள் வரவேற்றார்.

### திருப்பெரும்புதூரில்...

அங்கிருந்து சென்னை திரும்பும் வழியில், திருப்பெரும்புதூரில் உள்ள முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நினைவிடத்திற்குச் சென்ற எலிசபெத் இராணியார், அங்கு மறைந்த பிரதமருக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

### 'குறளோவியம்' பரிசு

அன்றிரவு 8.30 மணியளவில் சென்னையில் உள்ள தாஜ் ஓட்டலில் மேதகு ஆளுநர் அவர்களால் அளிக்கப்பட்ட விருந்திற்கு இராணியார் வருகை தந்தார். அவரை மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர், த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் இவ்விருந்தில் கலந்துகொண்டார்கள்.

தானெழுதிய 'குறளோவியம்' நூலின் ஆங்கிலப் பதிப்பை இராணியாருக்கு வழங்கி, திருக்குறள் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கிச் சொன்னார்; வள்ளுவர் கோட்டம் மாதிரி வடிவம் ஒன்றையும் அப்போது அவர் நினைவுப் பரிசாக இராணி எலிசபெத் அவர்களுக்கு அளித்தார்.

மேதகு ஆளுநர் அவர்கள், இராணியாருக்கு அழகிய மாதிரி வீணையொன்றினை அன்பளிப்பாக வழங்கினார். நாட்டிய நிகழ்ச்சிகளைக் கண்டு களித்த இராணியார், நடனப்பயிற்சி பெறும் மாணவ மாணவியருடன் அளவளாவினார்.

### கொச்சிக்குப் பயணம்

17.10.97 அன்று காலையில் இராணி எலிசபெத்தும், அவர் கணவரும் சென்னையிலிருந்து விமானம் மூலம் கொச்சிக்குப் பயணமானார்கள்.

அங்குள்ள 1503ல் கட்டப்பட்ட புனித பிரான்சிஸ் தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் அவர் பங்கேற்றார்.

பின்னர், சர்வதேச மிளகுச்சந்தை போன்ற பல இடங்களையும் அங்கே சுற்றிப் பார்த்து விட்டு இராணியார் அன்று மாலையே சென்னை திரும்பினார்.

### இலண்டன் பயணம்

18.10.97 அன்று காலையில் அவர்கள் திருவான்மியூரில் உள்ள 'செஷைர்' ஊனமுற்றோர் இல்லத்திற்குச் சென்று பார்வையிட்டனர். 9 வயது முதல் 85 வயதுடையோர் வரை உள்ள நலிவடைந்தோருக்காக சர் லியோனார்ட் செஷைர் என்பவர் தொடங்கிய இவ்வில்லத்தின் தலைவராக இப்போது திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்கள் உள்ளார்.

இங்கிலாந்து இராணி எலிசபெத்தும், அவர் கணவர் எடின்பரோ கோமகனும் 18.10.97 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் தங்களது ஏழு நாள் இந்தியச் சுற்றுப் பயணத்தை இனிதே முடித்து இலண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இராணியாரும், அவர் கணவரும் இலண்டனுக்குப் பயணமானபோது - மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் விமான நிலையத்திற்கு வந்து அன்போடு வழியனுப்பி வைத்தார்கள். ★



# “உங்களுக்காக ஓயாது உழைத்திட அதற்காக எந்தத் தியாகம் செய்யவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்!”

## மாப்பிள்ளை ஊரணி நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் உரை

தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்து நகரில் மாப்பிள்ளை ஊரணி ஊராட்சியில் நடைபெறுகின்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், இந்தத் தொடக்கவிழாவில் பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற கிராமப்புற மக்களாகிய உங்களை எல்லாம் காண்பதில் மட்டற்ற பெருமிதமும் கொள்கின்றேன்.

இந்தியா சுதந்திரம் பெற்றுப் பொன்விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றோம். ஐம்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் இன்னமும் இந்தியாவை விட்டு ஏழ்மை முழுமையாக நீக்கப்படவில்லை; வறுமை விரட்டப்படவில்லை. இந்தியாவில் தமிழகமும் இருக்கிற காரணத்தால் தமிழகத்தையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த ஆட்சியில் “அண்ணா மறுமலர்ச்சித் திட்ட”த்தை - ஒரு சட்டமன்றத் தொகுதியிலே உதாரணமாக இன்றைக்கு தம்பி பெரியசாமியின் சட்டமன்றத் தொகுதியில் மாப்பிள்ளை ஊரணியில் நடத்துகிறோம் என்றால் இந்தத் தொகுதியில் அடுத்த ஆண்டுதான் இன்னொரு ஊரை எடுத்துக்கொண்டு இந்தத்திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியும். இப்படி ஓராண்டில் 234 சட்டமன்றத் தொகுதியிலும் உள்ள 234 பெரிய கிராமங்கள் எடுத்துக் கொள்ளப் படவிருக்கின்றன.

### அடிப்படை வசதி

அதற்குப் பிறகு அடுத்த ஆண்டில் இன்னொரு 234 என்று இப்படியே போய், கொண்டிருந்தால் எத்தனை ஆண்டு காலமாகும் என்ற கேள்வி பிறக்காமல் இல்லை. வேறு வழியில்லை. ஆனால் “அண்ணா மறுமலர்ச்சி”த்திட்டம் சார்பாக இந்த காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அதே கால கட்டத்தில் “நமக்கு நாமே” திட்டத்தின் மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் இந்தப் பணிகள் நடைபெற வழி வகைகள் செய்யப்பட்டு இந்த அளவிற்குப் பெருமளவில் இல்லாவிட்டாலும் கூட ஆங்காங்கு அந்தந்தக் கிராமங்களுக்கு ஏற்றவாறு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கின்ற மும்முரமான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல; நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்திய அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற-ஒரு கோடி ரூபாய்க்கு அவர்கள் குறிப்பிடுகின்றத் திட்டங்களை மாநிலத்தில் உள்ள அதிகாரிகள் முறைப்படி நிறைவேற்றிக் கொடுக்கின்ற அந்தப் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டமும் ஒருபுறத்திலே நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவர்களுடைய தொகுதியிலே இருபத்தைந்து இலட்ச ரூபாய் செலவழித்துக் கொள்ளலாம் என்று ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்கும் இருபத்தைந்து இலட்ச ரூபாய் இந்த ஆட்சி பணம் ஒதுக்கியிருக்கிறது. 234 தொகுதிகளில் இருபத்தைந்து இலட்ச ரூபாயில் அவர்கள் தங்களுக்கு விருப்பமானத் திட்டங்களை, தாங்கள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றத் திட்டங்களை-மக்களுக்கு தேவைப்படுகிறத் திட்டங்களை-அதிகாரிகளின் துணையோடு முறைப்படி அவர்களே நிறைவேற்றுகின்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கின்றது.

### இருக்கின்ற சூழ்நிலைகள்

எனவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒருபுறம், நமக்கு நாமே திட்டம் ஒருபுறம். எம்.பி.க்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற ஒரு கோடி ரூபாய் திட்டத்தின் மூலமாக நடைபெறுகின்ற வேலைகள் மற்றொருபுறம். தமிழக அரசு வழங்குகின்ற எம்.எல்.ஏ.க்களுக்கு 25 இலட்ச ரூபாய் மூலம் நடைபெறுகின்றத் திட்டங்கள் மற்றொருபுறம் என்ற வகையிலே இந்தத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலே அல்லது குறிப்பாக தமிழகத்திலே குறிப்பிட்ட உடனடியான முன்னேற்றம் ஏன் வரவில்லை என்று ஆதங்கப்படும்போது அந்த உணர்வை நாம் மதிக்க வேண்டும் என்றாலும்கூட இருக்கிற சூழ்நிலைகளை மறந்துவிடக்கூடாது.

இந்தியாவை விட சிறிய நாடுகள் எல்லாம் எவ்வளவோ வளமாக வாழ்கின்றன. நாம் அப்போது, பெரிய நாடு, சிறிய நாடு என்பதை மட்டும் பார்க்கிறோம். இந்தியாவை விட சிறிய நாடு சிங்கப்பூர் என்று எடுத்துக்கொண்டால், மலேசியாவை எடுத்துக்கொண்டால் அங்கெல்லாம் மக்கள் மிகச்

சிறப்பாக வளமாக வாழ்கிறார்கள். காரணம் அங்கே மக்கள் தொகை குறைவு. நாம் அப்படி அல்ல. இந்தியாவிலே பாரதி பாடியபோது இந்தியாவின் மக்கள் தொகை முப்பது கோடி "முப்பது கோடி மக்கள் நாம்" என்று சுப்பிரமணிய பாரதி அன்றைக்குப் பாடினார் விடுதலைப் பாட்டு.

**மக்கள் தொகைப் பெருக்கத்தால் திட்டங்கள் பயன் குறைகிறது**

இன்றைக்கு இந்தியாவின் மக்கள் தொகை 90 கோடி எனவே முப்பது கோடி மக்களுக்காக தீட்டப்பட்ட திட்டங்கள் 90 கோடி மக்களுக்கு இன்றைக்குப் போதுமானவைகளாக இருக்க முடியுமா என்றால் இருக்க முடியாது.

அதுமாத்திரமல்ல பாரதி பாடியபோது இருந்த முப்பது கோடி மக்கள் இந்தியாவிலே எங்கெங்கே இருந்தார்கள் தெரியுமா? இன்றைய பாகிஸ்தான் உட்பட, இன்றைய பங்களாதேஷ் உட்பட் இன்றைய இலங்கை நாடு உட்பட, இன்றைய பர்மா உட்பட, இவ்வளவும் சேர்ந்ததுதான் அன்றைக்கு இந்தியா. இவ்வளவு நாடுகளையும் சேர்த்து முப்பது கோடி மக்கள் அன்றைக்கு.


இன்றைக்கு, பாகிஸ்தான் இல்லை. பங்களாதேஷ் இல்லை. இலங்கை நம்மோடு ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. பர்மா என்றைக்கோ வெட்டிக்கொண்டு போய்விட்டது. இருந்தாலும் மீதமுள்ள இந்த இந்திய பூபாகத்திலே இன்றைக்கு 90 கோடி மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் நூறு கோடியாக ஆகிவிடும். சதம் போடக்கூடிய அளவிற்கு இந்திய நாட்டு மக்கள் தங்களுடைய முயற்சியை வேகவேகமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிறந்து கொண்டே இருக்கிறார்கள்.

எனவேதான் ஒரு திட்டத்தை தீட்டும்போது - ஒரு பொருளை வீட்டுக்கு ஐந்து பேருக்காக வாங்கிக்கொண்டு வருகிற நேரத்தில், ஐந்து பேருக்குப் பதிலாக ஏழுபேர் இருந்தால் அந்த ஐந்து பேருக்காக வாங்கிக்கொண்டு வந்த பொருளைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது அவரவருக்குப் பங்கு குறையத்தான் செய்யும். அதைப்போலத்தான் இன்றைக்கு மக்கள் பெருக்கம் அதிகமாக அதிகமாக ஒரு ஆட்சி நிறைவேற்றுகின்ற திட்டங்களுடைய பயனையும் அதிகமாக பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அந்தப் பயன் குறைவாகிறது. இருந்தாலும்கூட அதையும் ஒருபுறத்திலே மனதிலே வைத்துக்கொண்டு மக்களுக்காக ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்ற அரசாங்கம் தான் உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தன்னுடைய கடமையைச் செய்து வருகின்ற இந்த அரசு.

**ரூ.21.92 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள்**

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்றால் இந்தத் திட்டத்தின்படி இன்றைய தினம் இந்தத் தூத்துக்குடி மாவட்டத்தில் மாப்பிள்ளை ஊரணி கிராமத்தில் 21.92 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டுள்ளது. நாற்பது தொகுப்பு வீடுகளுக்கு 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். பொது விநியோகக் கட்டிடத்திற்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்.

நியாயவிலைக்கடை இங்கே திறக்கப்படுவதற்காக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டிடம். இரண்டு புதிய தார்ச் சாலைகள் 1.6 கிலோ மீட்டர் நீளமுள்ளவை அமைக்க 4 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய். ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரு புதிய தார்ச் சாலை அமைக்க ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய். 2.6 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை மேம்படுத்த-பழுதுபார்க்க மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். இரண்டு புதிய சிறிய பாலங்களை அமைக்க 59 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது இந்த மாப்பிள்ளை ஊரணி கிராமத்திற்கு மாத்திரம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் சார்பாக.



இந்தத் திட்டத்தின் நோக்கமே அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஒரு கிராமத்திலே ஒன்றுகூட பாக்கியில்லாமல் செய்து தரவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம். பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, பள்ளிக்கூட வசதி, சாலை வசதி, மின்சார விளக்கு வசதி, இவைகளை எல்லாம் செய்து தரவேண்டும். இந்த அடிப்படை வசதிகள் முழுமையாகச்செய்து தரப்பட்ட கிராமங்கள்தான். அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமம் என்ற பெயரைச் சூட்டிக் கொள்ளப்பொருத்தமான கிராமமாகும்.

நமக்கு நாமே திட்டத்தில் முழுமையான எல்லா வேலைகளும் நடைபெற்று முடியாவிட்டாலும் மிக முக்கியமான தேவைகள் எல்லாம் அங்கே நிறைவு செய்யப்படவேண்டும் என்ற முறையிலே நமக்கு நாமே திட்டத்தை இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

## 198 பணிகளுக்கு அடிக்கல்

ஆறு கோடியே 59 இலட்ச ரூபாய் செலவில் 198 பணிகளுக்கு இந்த விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக 38 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் தூத்துக்குடி தலைமை மருத்துவமனையில் 32 படுக்கைகள், ஒரு அறுவை சிகிச்சை அறை மற்றும் கண் சிகிச்சைப் பிரிவிற்கான கட்டிடம் ஆகியவற்றிற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வேப்பலோடையில் ஆறு இலட்ச ரூபாய் செலவில் ஆரம்பச் சுகாதா நிலையம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஏழு இலட்ச ரூபாய் செலவில் முல்லைக்காட்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஏழு இலட்ச ரூபாய் செலவில் சாலைப் புதூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

காவல்துறையைப் பொருத்து 83 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் நாலாட்டின் புதூர், முறப்பநாடு, சேரக்குளம், புதுக்கோட்டை மற்றும் மசார்பட்டி ஆகிய ஊர்களில் மாதிரி காவல் நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக ஒரு கோடியே 85 இலட்ச ரூபாய் செலவில் தூத்துக்குடி, பாரதி நகர் மற்றும் ஆறு குடியிருப்புகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 95.6 இலட்ச ரூபாய் செலவில் குலசேகரன்பட்டினம் மற்றும் மணப்பாடு கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

## சைவபுரத்தில் சமத்துவபுரத்திட்டம்

திருவைகுண்டம் வட்டம் சைவபுரம் கிராமத்தில் சமத்துவபுரம் திட்டத்தை அமல்படுத்த முதல்கட்டமாக 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் நூறு குடியிருப்புகளைக் கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

சமத்துவபுரம் என்பது உத்தமர் காந்தியடிகளுடைய-தந்தை பெரியாருடைய, அண்ணல் அம்பேத்கருடைய, பேரறிஞர் அண்ணா



திருநெல்வேலியில் குற்றவியல் நீதிமன்ற முதல்மாடி திறப்புவிழா, அரசு சட்டக்கல்லூரிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இரண்டும் 5-10-97ல் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்**, மாண்புமிகு மத்திய-மாநில அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நீதிபதிகள் கலந்துகொண்டார்கள்.

ஒரு பொருளை வீட்டுக்கு ஐந்து பேருக்காக வாங்கிக்கொண்டு வருகிற நேரத்தில், ஐந்து பேருக்குப் பதிலாக ஏழுபேர் இருந்தால் அந்த ஐந்து பேருக்காக வாங்கிக்கொண்டு வந்த பொருளைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது அவரவருக்குப் பங்கு குறையத்தான் செய்யும். அதைப்போலத்தான் இன்றைக்கு மக்கள் பெருக்கம் அதிகமாக அதிகமாக ஒரு ஆட்சி நிறைவேற்றுகின்ற திட்டங்களுடைய பயனையும் அதிகமாக பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அந்தப் பயன் குறைவாகிறது. இருந்தாலும்கூட அதையும் ஒருபுறத்திலே மனதிலே வைத்துக்கொண்டு மக்களுக்காக ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்ற அரசாங்கம் தான் உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தன்னுடைய கடமையைச் செய்து வருகின்ற இந்த அரசு.

- மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுடைய கருத்துக்களை-ஜாதி மத பேதங்கள் கூடாது, சமத்துவம் செழிக்க வேண்டும், சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற அந்த உறுதியோடு நிறைவேற்றுவதற்காக ஆதிதிராவிடர் ஆனாலும், அய்யர் ஆனாலும், செட்டியார் ஆனாலும் எந்த வகுப்பைச் சேர்ந்தவரானாலும் அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் ஒரே பகுதியில் வாழ்ந்து சமத்துவ நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு இந்த ஆண்டு ஒரு புதிய அறிவிப்பைச் செய்து அந்த அறிவிப்பின் அடிப்படையிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டப்படுகின்றன.

இந்தச் சமத்துவபுரங்களைக் கட்டுவதற்கான முயற்சிக்காக இந்த மாவட்டத்தில் சைவபுரம் என்ற கிராமத்தில் திருவைகுண்டம் வட்டத்தில் 41 இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் செலவில் நூறு குடியிருப்புகள் கட்ட நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. விரைவிலே இந்தப் பணி ஆரம்பமாகும்.

வணிக வளாகம்

தூத்துக்குடி சங்கர ராமேஸ்வரர் திருக்கோயில் இடத்தில் ஒரு கோடியே ஐந்து இலட்ச ரூபாய் செலவில் எண்பது கடைகள் கொண்ட வணிகவளாகம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

கோயில் வருமானத்தைப் பெருக்குவதற்காக இது செய்யப்படுகிறது.

கோயில்பட்டி நகரில் பூவநாதசாமி திருக்கோயிலுக்கு ரூபாய் 90 இலட்சம் செலவில் ராஜகோபுரம் கட்டுவதற்காக இன்றைக்குத் திட்டமிடப்பட்டு அந்தத் தொடக்கமும் இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கிறது.

36 இலட்ச ரூபாய் செலவில் சவத்தையாபுரம், கச்சேரி தலையாயபுரம், பசுவந்தலை, வில்லிச்சேரி காயாமொழி மற்றும் கழுகுமலை கிராமங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஆரம்பச் சுகாதார நிலைய கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. தாளமுத்து நகரில் புதிய நியாயவிலைக்கடை இன்றைக்குத் திறந்து வைக்கப்படுகிறது.

போக்குவரத்துத்துறை பற்றி இங்கே அமைச்சர் தம்பி பொன்முடி குறிப்பிட்டார். காரைக்குடியில் நேற்றைய தினம் விடப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கையையும் நாளைய தினம் நெல்லை நகரத்திலே விடப்பட இருக்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு இங்கே இன்றைக்கு நூறு புதிய பேருந்துகளை விடுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

போக்குவரத்து வசதி சுகமானதாகவும், விரைவானதாகவும் அமைந்திடவும் அதே நேரத்தில் மற்ற மாநிலங்களைவிட மலிவான கட்டணமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களிலும் 22 காசு ஒரு கிலோ மீட்டருக்கு, 23 காசு, 25 காசு என்றெல்லாம் இருக்கின்ற இந்த நேரத்தில் இருபது காசுக்கு மேல் உயர்த்தக்கூடாது என்று இந்தப் பேருந்துக் கட்டணத்தை இந்த அரசு நிறைவேற்றுகின்ற அரசாக அமைந்திருக்கிறது.



மனத்தில் மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம் - ஆகியவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நாடு முன்னேறும்!

- அறிஞர் அண்ணா

**வாங்குகிற சக்தி**

ஒன்றைக் கவனிக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள், எத்தனையோ சங்கடங்கள், சங்கங்கள் மூலமாக தீர்க்கப்படுகின்ற பிரச்சினைகள் பல. பல்வேறு தொழிலாளர்கள் அலுவலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் மனதிலே கைவைத்துப் பார்க்க வேண்டும் பரிபூரணமாக, திருப்தியாக இருக்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன்.

ஒரு கட்டிடத் தொழிலாளி பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு நாளைக்கு வாங்கிய சம்பளம் எவ்வளவு? இன்றைக்கு அதே கட்டிடத் தொழிலாளி வாங்குகின்ற சம்பளம் எவ்வளவு என்று எண்ணிப்பார்த்தால் ஆண்டுக்கு ஆண்டு வாழ்க்கைத் தரம் உயர்கிறது. அப்படி உயர்கிற நேரத்திலே வாங்குகிற சக்தியையும் ஓரளவுக்கு மக்கள் பெருக்கிக்கொண்டு போகிறார்கள். இருந்தாலும் அந்த வாங்குகிற சக்தி ஏறுகிற விலைவாசியைப் போய் பிடிக்கக்கூடிய அளவிற்கு இல்லை என்ற உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன்.

காரணம் நம்முடைய நாடு பெரிய நாடு. இது ஜனநாயக நாடு என்றாலும்கூட ஜனநாயக நாடு மாத்திரமல்ல ஜனங்கள் நிரம்பி வழிகின்ற நாடாகவும் இது இருக்கின்ற காரணத்தால் இங்கு போடுகிற திட்டங்கள் எல்லா மக்களையும் எட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவேதான் அது எப்படியும் எட்ட வேண்டும்; பயன்கள் ஏழை எளியோருக்குக் கிட்ட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்த அரசு இன்றைக்கு ஓயாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறது.

கிராமப் பகுதியில் ஒரு கண்மாய் அதை அகலப்படுத்தி ஆழப்படுத்தி அந்த ஊர் மக்களுக்குப் பயன் கிடைக்கவேண்டும் என்பதற்காக ஏறத்தாழ ஐந்து இலட்ச ரூபாய் அங்கே செலவு செய்யப்படுகிறது. அந்த வேலை இன்றைக்கு ஆரம்பமாகி இருக்கின்றது. அது நமக்கு நாமே திட்டம். நம்முடைய காரியங்களை, நம்முடைய வேலைகளை நாமே செய்துகொள்ள வேண்டும். அரசாங்கம் அதற்காகப் பணம் ஒதுக்கினாலும் நம்முடைய உடல் உழைப்பை நம்மால் இயன்ற உதவியை நாமும் செய்யவேண்டும் என்ற எண்ணம் எல்லா மக்களுடைய உள்ளத்திலும் பதியவேண்டும் என்பதற்காகத்தான்.

நமக்கு நாமே என்பதால் நூறு மனிதர்கள் சேர்ந்து நமக்கு நாமே திட்டத்தின்படி ஒரு பேருந்தைக் கட்டினால், நாளைக்கு அந்தப் பேருந்தைக் கொளுத்த மனம் வராது. நாமே கட்டிய பேருந்தாயிற்றே என்ற அந்த எண்ணம் தலைதூக்கும். அந்த எண்ணம் பேருந்தைக் கட்டினால்தான் தலைதூக்கவேண்டும் என்றில்லை; இப்பொழுதே தூக்க வேண்டும்.

மக்களின் வரிப்பணத்தால் உருவாக்கப்பட்ட சொத்து பொதுச் சொத்து. அந்தப் பொதுச் சொத்துக்குச்சேதாரம் வந்தால் அது மக்களைத்தான் பாதிக்கும். ஆனால் நம்முடைய நாட்டிலே உள்ள மக்கள் அறியா மக்கள், விசயம் புரியா மக்கள். விஷமிகளால் தூண்டிவிடப்படுகிற மக்கள். அவர்கள் வாலிபர்களாக இருக்கலாம்; சிறியவர்களாக இருக்கலாம், ஏன் முதியோர்களாகக்கூட இருக்கலாம். அவர்கள் தங்களை அறியாமலேயே தங்களுடைய சொத்துக்களை அழித்துக் கொண்டிருக்கிறார்களே அந்த நிலை மாறவேண்டும். அப்படி மாறுவதற்கேற்ற வகையிலே கிராமப்புறத்திலே இருக்கிற பெரியவர்கள், நகர்ப்புறத்திலே இருக்கிற பெரியவர்கள் அறிவுரைகளை வழங்க வேண்டும்.

சமத்துவபுரம் என்று ஒரு ஊரை அமைத்தால் மாத்திரம் போதாது. அங்கே வாழ்கிறவர்கள் எல்லாம் சமத்துவ எண்ணத்தை கைக்கொள்ள வேண்டும்.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதி பாடினான். "இருட்டறையில் உள்ளதடா உலகம், ஜாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். அந்தக் கருத்துக்களை எல்லாம் செயல்படுத்த, உருவகப்படுத்த ஒவ்வொருவரும் உறுதிமொழி ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொள்கிற வகையிலே உங்களுக்காக என்றென்றும் நாளும் பாடுபட, ஓயாது உழைத்திட நானும் என்னுடைய அமைச்சர்களும் இந்த அரசும் உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ★

## "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"

- இது ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஒவ்வொரு ஆண்டிலும், ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து, அவ்வூராட்சியில் அடங்கி உள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும் எல்லா அடிப்படை வசதிகளையும் கொண்ட நவீன கிராமமாக உருவாக்கும் திட்டம்.
- இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஊராட்சி, அந்தந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருடன் கலந்தாலோசித்து தேர்ந்தெடுக்கப்படும்.
- குடிநீர், தொடக்கக் கல்வி, பொதுச் சுகாதாரம், ஊட்டச்சத்து, குடியிருப்பு, கிராமச் சாலைகள் மற்றும் அவற்றின் இணைப்புச் சாலைகள், நியாய விலைக் கடைகள் ஆகிய குறைந்தபட்ச வசதிகள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் - தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தின் ஒவ்வொரு குடியிருப்புக்குப் ஒருங்கிணைத்து வழங்கப்படும்.
- இத்திட்டம் நிறைவேறியதும், அந்த கிராமங்கள் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகத் திகழும்.
- ஒவ்வொரு ஆண்டும் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் 234 ஊராட்சிகள் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால்' பயன்பெறும்.



# 'சமத்துவத்திற்கும் சமதர்மத்திற்கும் மாறான காரியங்களை மாற்றிடும் அணுகுமுறை தேவை!'

**துணைமதிப்பீடுகள் விவாதத்திற்குப் பதிலளித்து, சட்டப்பேரவையில் உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் வேண்டுகோள்!**

**17.10.97 அன்று, 1997-98ஆம் ஆண்டிற்கான ரூ.953 கோடி மதிப்பிலான துணைமானியக் கோரிக்கையின் மீதான விவாதங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பதிலுரை:-**

1997-98ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் குறித்து நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களும், லத்தீப் அவர்களும், பழனிச்சாமி அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், வேலாயுதம் அவர்களும், வல்லரசு அவர்களும், தாமரைக்கனி அவர்களும், ஐகணேசன் அவர்களும், டிமணி அவர்களும், சிடிதண்டபாணி அவர்களும், ஞானசேகரன் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்து கோரிக்கைகள் சிலவற்றையும் முன்நிறுத்தி இந்த விவாதத்திலே சுவையும் இடையிடையே சூடும் உருவாக்கி இருக்கின்றார்கள்.

### ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை திறக்கப்பட வேண்டுமென்பதில் அரசுக்கு அதிக அக்கறை உண்டு

நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் நானும் விரைவிலேயே ஒவ்வொன்றாகத் தொட்டுக்காட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதுதான் முறையாக இருக்கும் என்று நான் சொல்கிறேன்.

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டியது என்பதிலே இந்த மாமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள் மிக நன்றாக அறிவார்கள். 1989-90ஆம் ஆண்டில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் திறக்கப்படுவதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவரான நண்பர் கோபு அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டபோது, அவருடைய கோரிக்கையை ஏற்று, நிதி உதவிகூட அந்தத் தொழிற்சாலைக்காக அன்றைக்குச் செய்யப்பட்டதும், அந்தத்தொழிற்சாலை திறக்கப்படவேண்டுமென்பதிலே இந்த அரசு அக்கறையுடையதாக இருந்தது என்பதும் எடுத்துக் காட்டக்கூடிய மிக முக்கியமான சான்றாகும்.

அதற்குப் பிறகு பல நேரங்களில் என்னைத் தொழிற்சங்கத் தலைவர்கள் பலரும் சந்தித்து, குறிப்பாக நண்பர் பாண்டியன் போன்ற தொழிற்சங்கத்தலைவர்கள் சந்தித்து இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்தத் தொழிலதிபர்கள் முன்வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டபோது, நான் உறுதியாக அதை ஏற்றுக்கொள்வேன் என்று குறிப்பிட்டேன். ஆனால், பிறகு யாரும் வரவில்லை. அவரும் அழைத்து வந்ததாகத் தகவல் இல்லை.

ஆனால், இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெரிய தொழிலதிபர்களை அழைத்து நடத்தச் சொன்னால் நடத்துவார்கள் என்று குறிப்பிட்டார்கள். சொன்னால், தானே அழைத்துவருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அவருடைய உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, அப்படி ஒரு பெரிய தொழிலதிபரை ஸ்டாண்டர்டு தொழிற்சாலை நடத்துவதற்கு அழைத்து வருவாரேயானால் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், இடையிலே வில்லங்கங்கள் ஏதாவது இருந்தால் அவைகளை அகற்றுவதற்குக்கூட இந்த அரசு முயற்சி மேற்கொண்டு அந்தத்தொழிற்சாலையைத்தொடர்ந்துநடத்துவதற்கு முன்வரும் என்ற உறுதியை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சாதிக் கலவரங்களையொட்டிப் போடப்பட்ட வழக்குகளில் அப்பாவி மக்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தால், தீர விசாரித்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். 35 பேர் குற்றமற்ற இளைஞர்கள் மீது-அவர்கள் இன்றைக்கு ஜாமீனில் வந்திருந்தாலும்கூட, அவர்கள் மீதுள்ள வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் உடனடியாக அதற்கான பதிலை அளிக்க முடியாவிட்டாலும் பாதகமான நிலை எதையும் எடுக்கமாட்டேன்.

### ஏற்ற முடிவெடுப்போம்

இந்த அரசு எடுக்காது என்று உறுதியை அவருக்குத் தெரிவித்து அந்த வழக்கு பற்றிய பரிசீலனை நிச்சயமாக நடைபெற்று நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை அவருக்கு மாத்திரமல்ல; அப்பாவி மக்கள் சில பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். வல்லரசு அவர்கள் எப்போதும் 100,200 என்று சொல்ல மாட்டார். பல்லாயிரம், பல இலட்சம் என்றுதான் சொல்வார்; பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இருப்பதாகச் சொன்னார். அப்படி பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை. பல வழக்குகள் என்று

சொல்லியிருப்பாரேயானால், அதிலே உண்மை இருக்கக்கூடும்.

எனவே, அப்படிப்பட்ட வழக்குகள், அது வல்லரசு சொல்வதாக இருந்தாலும், டாக்டர் கிருஷ்ணசாமி சொல்வதாக இருந்தாலும், அவைகளையெல்லாம் தீர விசாரித்து, அதிலே அப்பாவி மக்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்களேயானால் நிச்சயமாக அவர்கள் வழக்கிலேயிருந்து விடுபடுவதற்கு ஏற்ற முடிவுகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு விலையுடன் 35 ரூபாய் மாநில அரசால் ஏற்றித்தரப்பட்டு, குறுவை நெல் 350 கொள்முதல் நிலையங்கள் மூலமாக ஏறத்தாழ 5 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், இன்றைக்கு பத்திரிகையிலே பரபரப்பாகப் படங்களோடு வெளியிடப்பட்டிருக்கின்ற குறுவை நெல் கொள்முதலைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இது அத்தியாவசியமான ஒன்று என்பதால் நான் அதுபற்றி நேரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் முதலிலேயே குறிப்பிட வேண்டுமென்று கருதுகிறேன்.

கொள்முதல் என்பது இரண்டு நிலை; ஒன்று கட்டாயக் கொள்முதல். மற்றொன்று இருநிலைகளில் கொள்முதல் செய்வது; வியாபாரிகள் ஒருபுறத்திலே கொள்முதல் செய்வது; அரசாங்கம் இன்னொரு புறத்திலே கொள்முதல் செய்வது என்று இருநிலை.

கட்டாயக் கொள்முதல் என்னும்போது, அரசுக்கே நெல் கிடைக்காத ஒரு சூழ்நிலையில் நியாயவிலைக் கடைகளில் வழங்கக்கூடிய அரிசிக்குத் தேவையான நெல் இல்லாத சூழ்நிலையில் சில பகுதிகளில் கட்டாயக் கொள்முதல் செய்வது அவசியமாகி, அப்படிக் கட்டாயக் கொள்முதல் செய்கிற நேரத்திலே விவசாயிகள் கேட்கின்ற, அவர்கள் வைக்கின்ற கோரிக்கை அனைத்தையும் ஏற்று நல்ல விலை கொடுத்து அந்த நெல்லை வாங்குவது; அப்படி வாங்கியிருக்கிறது இந்த அரசு. இது உங்களுக்கு எல்லாம் தெரியும்.

இன்றைக்கு உள்ள சூழ்நிலை என்னவென்றால் அமோகமான விளைச்சல் குறுவையிலே ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அந்த் நெல்லை வாங்குங்கள் என்கிறார்கள். வியாபாரிகள் வாங்க முன்வரவில்லை. அவர்கள் வாங்காவிட்டாலும் நாங்கள் வாங்க வேண்டும் என்கிறார்கள். வாங்கச் சென்றாலும் அதிக விலை கொடுத்து வாங்குங்கள் என்கிறார்கள். அப்படி வாங்கும் போது தரக்கட்டுப்பாட்டிலே இவ்வளவு சதவீதம்தான் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இவ்வளவையும் ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு ஏற்கனவே ஏற்றியிருக்கின்ற விலையுடன் 35 ரூபாய் மாநில அரசு சார்பாக தந்துதரக்கட்டுப்பாட்டிலே விவசாயிகள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு கிட்டத்தட்ட 350க்கு மேற்பட்ட

***தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் பல்வேறு நலத்திட்டப் பணிகளைத் துவக்கிவைப்பதற்காக 4.10.97 முதல் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் செய்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் இளம்புவனத்தில் 'நமக்கு நாமே' திட்டத்தைத் துவக்கிவைத்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி ஆகியோர் உடன்உள்ளனர்.***



கொள்முதல் நிலையங்கள் அந்தப்பகுதியிலே திறந்து, இன்றுவரையிலே ஏறத்தாழ 5 இலட்சம் டன் நெல்லை இந்த அரசு கொள்முதல் செய்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன்.

ஆனால் நெல்லைக் கொள்முதல் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு, அந்த விவசாயிகளுடைய கோரிக்கைகள் வருகிற நேரத்திலே அதைப் பெரிதாக வெளியிடுகிற பத்திரிகைகள், கொள்முதல் செய்த நெல்லை வைப்பதற்கே ஏன் இடமில்லை என்று கேட்பது என்பது வேடிக்கையான விமர்சனமாகும்.

நான் இன்று அல்ல; நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் பல நேரங்களில் பார்த்திருக்கலாம். தஞ்சை போன்ற மாவட்டங்களிலே திருச்சி போன்ற மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை சாலைகளில் பெரிய பெரிய துணிகள் போட்டு மூடி வைக்கப்பட்ட காட்சிகளையெல்லாம் பல நேரங்களிலே பார்த்திருக்கலாம். இருந்தாலும்கூட, நான் உணவுத்துறை

நான் சொல்கிறேன் முளைத்தாலும்கூட, அது உண்மையாக இருந்தாலும் கூட வேறு என்ன செய்ய முடியும் என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

நெல்லை வாங்குவது என்பது ஒன்றும் கட்டாயம் இல்லை அரசுக்கு. ஏன் வாங்குகிறோம் என்றால் விவசாயிகளுடைய வேதனையைப் போக்குவதற்காக, அவர்களுக்கு அந்தக் கொள்முதலுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் நெல்லை வாங்குகிறது. அப்படி வாங்குகிற நேரத்திலேகூட, அதை நீங்கள் சரியாக வைக்கவில்லை என்று சொன்னால் அதற்கு விவசாயிகள் வருத்தப்படத் தேவையில்லை. வாங்கி, புசிப்பவர்கள்தான் வருத்தப்படவேண்டும் ஆனால் விவசாயிகளுக்காக இன்றைக்கு - வேதனை, கண்ணீர் வடித்துக்கொண்டு, வாங்கிய நெல்லை ஒழுங்காக வைக்கவில்லை என்று பேசுகின்ற பேச்சும் எழுதுகின்ற எழுத்துக்களும் அவசரப்பட்டு அது ஏதோ

## "நமக்கு நாமே" திட்டத்திற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு!

அமைச்சர் அவர்களிடத்திலும், மற்றுமுள்ள அதிகாரிகளிடத்திலும் குறிப்பிட்டுச்சொல்லி, இப்படி கொள்முதல் செய்யப்படுகின்ற தானியங்களை உடனடியாக - வைப்பதற்கு தேவைப்பட்டால் ஆலயங்களைக்கூட பயன்படுத்திக்கொள்ளலாம்; பல சிறைச்சாலைகளிலே இன்றைக்கு மிகுந்த இடங்கள் இருக்கின்றன. அவைகளைக் கூடப் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்னும் பல இடங்களில் பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. அவைகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னாலும், இருக்கிற பிரச்சினை என்னவென்றால் எடுத்துச் செல்வதற்கான வண்டி வாகனங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை. சில வண்டிகளை நிறுத்தி வாகனங்களை நிறுத்தி நெல்லை எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னால் அதற்கும் கோபித்துக் கொள்கிறார்கள்; எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது; எடுத்துச் செல்ல முடியாது என்று சொல்கிறார்கள். அவர்களையெல்லாம் சமாதானப்படுத்தி அவர்களுக்குத் தரவேண்டிய கூலியைத் தந்து அதன்பிறகு எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

இருந்தாலும் ஏறத்தாழ 5 இலட்சம் டன் இன்றைக்குக் கொள்முதல் இருநிலைகளிலே கொள்முதல்-வியாபாரிகளும் வாங்கிக்கொள்ளலாம். அரசும் வாங்கிக் கொள்ளலாம் என்ற இருநிலையில் இன்றைக்கு கொள்முதல் செய்யப்பட்டு, குறுவை நெல் இன்றைக்கு இந்த விளைச்சலில் விவசாயிகளுக்கு எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் ஏற்பாடுகள் நடைபெற்று இருக்கின்றன.

பத்திரிக்கைகளிலே ஏதோ இரண்டு மூன்று படங்களை எடுத்துப் போட்டுவிட்டு நெல் எல்லாம் முளைத்துவிட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள்.

ஆர்வக்கோளாறின் காரணமாகச் செய்யப்படுகின்ற பிரச்சாரமே தவிர வேறில்லை.

அதற்காக இந்த அரசு வாளா இருந்துவிடவில்லை. நம்முடைய உணவு அமைச்சர்-மங்கநல்லூரிலே இப்படிப்பட்ட தானியங்கள் குவிக்கப்பட்டு இன்னும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்ற செய்தி கிடைத்தவுடன் நான் உடனடியாக உணவு அமைச்சர் நேருவுக்கு, திருச்சிக்குத் தகவல் சொல்லி-இந்தச் செய்தி அந்த ஊர் பத்திரிகையிலே வராத காரணத்தால் - தகவல் சொல்லி உடனடியாக அவர் மங்கநல்லூருக்குச் சென்று அங்கே குவிக்கப்பட்ட நெல்லையெல்லாம் வேறு இடத்திற்கு மாற்றி இருக்கின்றார்.

முதல் நாள் சென்னையிலே பத்திரிக்கையிலே செய்தி வந்தது. மங்கநல்லூர்க்காரர் கடிதம் எழுதியிருந்தார். இப்படி நெல் குவிக்கப்பட்டு இருக்கிறது; முளைத்துக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் எழுதியிருந்தார். மறுநாள் அதே நண்பர் அதே பத்திரிக்கைக்குக் கடிதம் எழுதி, "நான் எழுதி பத்திரிக்கையிலே செய்தி வெளியிட்ட உடன், மறுநாளே நெல்லை எடுத்து விட்டார்கள். இதைப் பாராட்டுகிறேன். நன்றி" என்று கடிதம் எழுதினார் அதே பத்திரிகைக்கு. அதை அந்த பத்திரிகைகளில் பிரசுரிக்கவில்லை. அந்தக் கடித நகல் என்னிடத்திலேதான் இருக்கிறது. எனவே, உடனடியாக எந்தக் கோரிக்கை வைக்கப்பட்டாலும், எந்தக் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டாலும் நடிவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதற்கு இதைவிட வேறு சான்றுகளை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

## ரூ.953 கோடியில், துணை மானியக்கோரிக்கை

துணை மானியக்கோரிக்கை 953 கோடி ரூபாய்க்கு உங்களிடத்திலே உங்களுடைய ஒப்புதலைக் கேட்டு இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. 953 கோடி ரூபாய் துணை மானியக் கோரிக்கை என்பது பெரும் தொகையாகத் தெரியக்கூடும். ஆனால், இந்த 953 கோடி ரூபாயில் மின்சார வாரியத்திலே இருந்து அரசுக்குச் சேரவேண்டிய கடன் 448.28 கோடி ரூபாய் ஆகும். அந்த 448 கோடி ரூபாயை மாநில அரசினுடைய மூலதனமாக வைத்துக்கொள்வது என்று அரசு ஆணை பிறப்பித்துவிட்ட காரணத்தாலேதான் அந்த 953 உடன் இந்த 448-ம் அடங்கி இருக்கிறது. இதைக் கழித்து விட்டால் 505 கோடி ரூபாய்க்குத்தான் இந்தத் துணை மானிய மதிப்பீடு இருக்கிறது என்பதை உறுப்பினர்கள் புரிந்துகொள்ள முடியும்.

ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்குக் கோரப்படுகின்ற இந்த துணை மானியக் கோரிக்கையில், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 58 கோடியே 75 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 25 இலட்ச ரூபாய் போதுமானதல்ல என்று நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே வாதிட்டார். வெட்டுப் பிரேரணையில்கூட அவர் குறிப்பிட்டு இருக்கின்றார் அவர், மிகமிக முக்கியமாகக் கருதுகிற காரணத்தால்தான், வெட்டுப் பிரேரணையிலே குறிப்பிட்டு அதைப்பற்றி இங்கு விரிவாகப் பேசி இருக்கின்றார்.

ஒன்றை மறந்துவிடக்கூடாது. ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 25 இலட்ச ரூபாய் என்றால் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்குக் கணக்குப்பார்த்தால் 1.5 கோடி ரூபாய் என்பதை ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு மத்திய அரசு தருகிற தொகை 1 கோடி ரூபாய். நாம் தருகிற தொகை 1.5 கோடி ரூபாய் என்பதை ஞாபகத்திலே வைத்துக்கொண்டால், ஞானசேகரன் மேலும் பணம் வேண்டும் என்று கேட்கமாட்டார் என்று கருதுகிறேன். ஒருவேளை மத்திய அரசு இன்னும் அதிக நிதி ஒதுக்குமேயானால், அப்பொழுது மாநில அரசும் அதைப்பற்றிச் சிந்திக்கும் என்ற அந்த உறுதியை மாத்திரம் இந்த மாமன்றத்திலே நான் வைக்க விரும்புகின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தைப் பற்றிப் பேசும்போது நம்முடைய பழனிச்சாமி ஒன்றைச் சொன்னார்கள். இந்த திட்டத்திற்காக இன்றைக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறுகின்ற நிலையில் படிப்படியாகத்தான் செலவாக முடியும். அவர் சொன்னார். சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தை அதிகாரிகள் ஒதுக்குவது இல்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள்; அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்ற பொழுது அந்தக் கூட்டத்தினுடைய முடிவுகள் என்னென்ன என்று பத்திரிகைகளிலே விவரமாக வெளியிடப்பட்டு இருக்கிறது. அதிலே ஒன்று, இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பிக் கேட்கின்ற அந்தப் பகுதியிலேதான் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தை நடத்தவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது என்பதை அப்பொழுதே வெளியிட்டு இருக்கின்றோம். இருந்தாலும் மறந்து இருப்பார், மறந்துவிட்ட பழனிச்சாமி அவர்கள் அதை இங்கு ஞாபகப்படுத்தி இருக்கிறார் என்று நான் கருதுகின்றேன்.

நமக்கு நாமே திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதைக்கூட இந்த அவையிலே பேசி, உறுப்பினர்கள் சில பேர் மத்திய அரசு ஒதுக்குகின்ற பணத்தை எல்லாம் இப்படி நாம் இந்த திட்டங்களுக்காகச்செலவழிக்கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டது என்னுடைய கவனத்திற்கு வந்தது. இந்த 5 கோடி மாத்திரமல்ல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 கோடி மாத்திரமல்ல; மத்திய அரசின் சார்பாகத் தொகை ஒதுக்கப்படவில்லை என்று நான் கூறமாட்டேன்; அந்தத் தொகையையும் சேர்த்துத்தான் நாம் மக்களுக்காகச் செலவிடுகின்றோம். இதிலே மத்திய அரசு பணம், மாநில அரசு பணம் என்றெல்லாம் பிரித்துப் பார்த்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஒரு கணக்குக்காக, விவரத்திற்காக வேண்டுமானால் இதிலே மாநில அரசுப்பணம் இவ்வளவு, மத்திய அரசுப்பணம் இவ்வளவு என்று பார்க்கலாம். மத்திய அரசுப்பணம் என்றாலும், மாநில அரசு தருகின்ற பணம் என்றாலும் மக்கள் தருகின்ற வரிப்பணம்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. அப்படி ஒதுக்கப்படுகிற அந்தப் பணத்திலேகூட இந்தத் திட்டத்தையும், மத்திய அரசினுடைய திட்டங்களையும் யாரும் மறைக்கவும் இல்லை, அதை மறுக்கவும் இல்லை.

குறிப்பாக இந்திரா வீடு கட்டும்திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கின்றது. அதற்காகத் தரப்படுகின்ற தொகை மத்திய அரசிலேயிருந்தும் தரப்படுகிறது, மாநில அரசும் ஓரளவுக்குத் தொகையைச் செலவழிக்கிறது. அப்படிச் செலவழிக்கின்ற நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்படுகின்ற அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு, 'இந்திரா வீடு கட்டும் திட்டம்' என்ற பெயர்தான். அது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் வந்தாலும், நமக்கு நாமே திட்டத்தில் வந்தாலும், அந்தப் பெயர்தான் இப்போதும் சூட்டப்படுகின்றது. அதை யாரும் மாற்றிடவில்லை. ஆனால் வரலாற்றை நீங்கள் பார்ப்பீர்களேயானால், இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதிதிராவிடர்களுக்கு இலவசக் கான்கிரீட் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைத் தொடங்கியது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அந்தத் திட்டம் நேர்த்தியான திட்டம் என்பதை உணர்ந்த அகில இந்தியாவில் உள்ள மத்திய அரசு, அந்தத் திட்டத்தைத் தன்னகப்படுத்திக்




*6.10.97 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மதுரை-கோச்சடையில் மண்ணெண்ணெய் விநியோகத் திட்டத்தைத் துவக்கி வைத்த ர்; இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, திரு.துரைமுருகன், திரு.சமயநல்லூர் செல்வராஜ், வணக்கத்திற்குரிய மதுரை மேயர் திரு.குழந்தைவேலு ஆகியோரும் கலந்துகொண்டனர், மேலும் ஆரப்பாளையத்தில் தட்டுப் பாலத்தைத் திறந்துவைத்தார்.*

கொண்டு அதை இந்தியா முழுவதும் இன்றைக்கு விரிவாக்கியிருக்கிறது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பெயரைப் பற்றி முக்கியம் இல்லை. அது தமிழக அரசின் திட்டமாக இருந்தாலும், மத்திய அரசுத் திட்டமாக இருந்தாலும் அது மக்களுக்கான திட்டம்-அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திட்டம் என்றமுறையில் அதை நாம் வரவேற்கிறோம்.

## ரூ.89 கோடியில், பொங்கல் திருநாளுக்கு ஏழைகளுக்கு இலவச வேட்டி-சேலை

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உதவித் திட்டத்திற்கு - ஏற்கெனவே செலவழிக்கப்படுகின்ற தொகையைவிடக் கூடுதலாக 21 கோடிய 15 இலட்சம் ரூபாய் இந்தத் துணை மானிய மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி-சேலை வழங்குவதற்கு, கூடுதலாக 24 கோடி ரூபாய் இந்த மதிப்பீட்டில் கோரப்பட்டிருக்கின்றது. இந்த இலவச வேட்டி-சேலைகளை, பொங்கலன்று வழங்குவதற்கு ஆகின்ற செலவு மொத்தம் 89 கோடி ரூபாய். இந்த 89 கோடி ரூபாயிலே கூடுதலாக இந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிற 24 கோடி ரூபாயும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, கடந்த கால ஆட்சியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு 1992-93லிருந்து 1995-96 வரையிலான கால அளவிற்கு உரிய நிகரச் செலவு மானியத்தொகையை வழங்கவே இல்லை. அப்படி வழங்காமல் தேங்கிய தொகை 13 கோடியே 70 இலட்சம் ரூபாய். கடந்த ஆட்சியில் 1992-93ல் இருந்து 1995-96 வரையில் கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு வழங்க வேண்டிய தொகை 13 கோடியே 70 இலட்சம் ரூபாய். அதுவும் நம்முடைய தலையில்தான் இன்றைக்கு விழுந்திருக்கிறது. அந்தக் காரணத்தால் இந்தத் துணை மதிப்பீட்டிலே அந்தத் தொகையும் இடம்பெற்றிருக்கின்றது.

சேலம், நெல்லை, திருச்சியில் காவல்துறை ஆணையாளர்கள் அலுவலகங்களைப் புதிதாகத் தொடங்க 14 கோடியே 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. காவல்துறையினுடைய பல்வேறு பிரிவுகளுக்குப் புதிய மோட்டார் வண்டிகளை வாங்குவதற்கு 3 கோடி ரூபாய் முன்பணமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. காவல்துறைப் பணியாளர்களுக்கு உணவுக் கட்டணங்களை உயர்த்திய வகையில் 2 கோடியே 73 இலட்ச ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

## "சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பிக்கேட்கும் பகுதியில்தான் இனி 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்!'

### 15 பல்கலைக்கழகங்களில், தலைவர்கள் பெயரால் 28 அறக்கட்டளைகள்

மாவட்டங்களுக்கும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை எல்லாம் எடுத்துவிட்ட காரணத்தால்-ஏதோ அவைகளை எடுப்பதற்கு முனைந்தவர்கள், அந்த யோசனைகளைச் சொன்னவர்கள் எல்லாம் நாட்டுப்பற்று இல்லாதவர்கள், தலைவர்களை மதிக்காதவர்கள் என்றெல்லாம் இங்கே அ.தி.மு.க.சார்பிலே எடுத்துக் கூறப்பட்டது. நான் ஒருவனாக அல்லது சிலராக இந்த முடிவை எடுத்துவிடவில்லை. 40,50 பேர் கொண்ட அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, ஒருமுறைக்கு இருமுறை கூட்டி, அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் மாவட்டங்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களுடைய பெயர்களை எடுத்துவிட்டு, 15 பல்கலைக்கழகங்களில் அந்தத் தலைவர்களுடைய பெயரால் 28 அறக்கட்டளைகளை ஏற்படுத்த முடிவு செய்து, அதற்காக 7 கோடி ரூபாய் இந்தத் துணை மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசு மருத்துவமனைகள், ஆரம்ப-சுகாதார மையங்கள் ஆகியவற்றுக்கு அவசர சிகிச்சை வாகனங்கள் (ஆம்புலன்ஸ்) வாங்குவதற்கு 9 கோடியே 91 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்களுக்கு, சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 4,000 வீடுகள் கட்டுவதற்குக் கூடுதலாக 10 கோடியே 80 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

### பெண்குழந்தைகள் பாதுகாப்புக்குத் திருத்தப்பட்ட புதிய திட்டம்

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தைத் திருத்தியமைக்க, கூடுதலாக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் ஏற்கெனவேகடந்த கால ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டு ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும்கூட அதில் பல சிக்கல்கள் இருந்தன. அந்தக் குழந்தையின் பெயரால் ரூ.5000 போடுவதாகச் சொன்னார்களே தவிர, அதற்கான சான்று அந்தக் குழந்தைகளுக்குத் தரப்படவில்லை. அரசு போட்டு வைக்கும். 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த குழந்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றுதான் இருந்தது. 20 ஆண்டுகளுக்கு பிறகு எந்த அரசு வருவது? எந்த அதிகாரி இருப்பது? எந்தச் சான்றிதழை யாரிடத்திலே போய்க்காட்டி அந்தப் பணத்தைப் பெறுவதற்கான விபரங்களும் இல்லை; அதற்கான வழிமுறைகளும் இல்லை. அதனால்தான் ஒரு குழந்தைக்கு, ஒரு பெண் குழந்தை என்றால் 3,000, 2 பெண் குழந்தைகள் என்றால் அவர்கள் கருத்தடை செய்து கொள்ள வேண்டும். தலா 1500,1500 என்று 3,000 ரூபாய் அவர்களுக்கு போக்குவரத்துக் கழக நிறுவனத்திலேயுள்ள நிதி நிறுவனத்திலே அந்தப் பணத்தை அரசாங்கம் உடனடியாகப் போட்டு அதற்கான சான்றிதழை அந்தப் பெற்றோரினுடைய கையிலே கொடுத்துவிடுகிற திட்டத்தை இப்போது நாம் உருவாக்கி இருக்கின்றோம்.

அந்தச் சான்றிதழ் அவர்களுடைய கையிலே இருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் போய், சான்றிதழைக் காட்டி, இது எங்களுக்கான பணம், அன்றைக்கே எங்கள் பெயரில் போடப்பட்ட பணம் என்று வாங்கிக் கொள்ளக்கூடிய அந்த உறுதியும், உத்திரவாதமும் இந்தத் திட்டத்தின்படி இன்றைக்கிருக்கிறது. அதற்காக இப்பொழுது கூடுதலாக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் இன்றைக்கு இந்த மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### ஏழைகள் அனைவருக்கும் பொருளாதார அடிப்படையில் மனை ஒதுக்கீடு

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்ற ஏழைமக்களுக்கு ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் மனைகள் ஒதுக்கப்பட்டன. இப்போது ஏழைகள் அனைவருக்கும், பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அதுமாத்திரமல்லாமல் முன்னேறிய வகுப்பினருக்கும், ஏழைகளாக இருந்தால், அவர்களுக்காக வீட்டுமனை வழங்க 16 கோடி ரூபாய் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே இடம் பெற்றுள்ளது.

குடிசை மாற்று வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. அந்த வீடுகளெல்லாம் நீண்டநாட்களாகவே பழுது பார்க்கப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். பராமரிக்கப்படவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். அந்தப் பழுது பார்க்கும் பணிகளையும், பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்ள 9 கோடியே 50 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

காவிரி கழிமுகப் பகுதிகளில்; காவிரிப் பிரச்சினையைப் பற்றி நாம் பேசுகிறோம். ஆனால் காவிரிப் பிரச்சினை தீர்ந்தாலும்கூட காவிரித் தண்ணீர் தஞ்சை மாவட்டத்திலுள்ள கடைக்கோடிப் பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் (டெயில் எண்ட்) வாய்க்கால்களெல்லாம் தூர் விழுந்து மேடுகட்டி வகைப்படுத்தாத ஒரு சூழ்நிலை இருந்தது. அதைத்

## அட்டைப்பட விளக்கம்

**முதல் பக்க அட்டை:**

இங்கிலாந்து இராணியார் சென்னைக்கு வருகை தந்தபோது, அவரை மேதகு தமிழக ஆளுநர் - மாண்புமிகு தமிழக முதல்வர் ஆகியோர் சென்னை விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றார்கள் (15.10.97)

**இரண்டாம் பக்க அட்டை:**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வாகைக்குளத்தில், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், பெண்கள் தாங்களாகவே வருவாய் ஈட்டிட அவர்களே உருவாக்கிய செழிப்பான காய்கறித்தோட்டம்.

**கடைசிப்பக்க அட்டை:**

சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி - மத நல்லிணக்கம் வேண்டியும், தீண்டாமையை எதிர்த்தும், 'சாதிகளற்ற சமுதாயம் அமைப்போம்' - எனச் சூளுரைத்து - திருநெல்வேலி நீதிமன்றத்திலிருந்து ரயில்வே சந்திப்பு வரை மாணவ மாணவிகள் அமைத்திருந்த மனிதச் சங்கிலியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார் (5.10.97).

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். அதற்காக ஒரு 10 கோடி ரூபாய் அளவில் அந்தக் கால்வாய்களையெல்லாம் தூர் எடுக்கவும், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளையெல்லாம் அகற்றுவதற்கும் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் செலவிலே பொதுப்பணித்துறைக்கும், வேளாண்துறைக்கும் அதன் சார்பிலே செலவிடப்பட்டு அதற்கு அனுமதிக்கப்பட்ட தொகையும் இந்த மதிப்பீட்டிலே இடம் பெற்றிருக்கின்றது.

### 50 இடங்களில் சமத்துவபுரம் அமைக்க ரூ.5 கோடி ஒதுக்கீடு

இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி 50 இடங்களிலே சமத்துவபுரம் என்று அறிவிக்கப்பட்டு முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப வேலைகளுக்காகத்தான் அந்த 5 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமத்துவபுரம் என்பது 50 இடங்களில் 100 வீடுகளைக் கொண்டு அமைக்கப்படுகின்ற புதிய இடங்களாகும். அதிலே எல்லா சமூக மக்களும் அங்கே கூடி வாழ வேண்டும். சமத்துவத்தை அந்த வகையிலே நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத்தான் சமத்துவபுரம் என்ற திட்டம் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

5 கோடி ரூபாயிலே என்ன செய்ய முடியும் என்ற கேள்வி நியாயமான கேள்வியாக இருந்தாலும், நிலத்தை ஆர்ஜிதப்படுத்தவும் தொடர்ந்து அந்த இடத்திலே சமத்துவபுரத்தை அமைப்பதும் நம்முடைய இரண்டு கட்டப்பணிகள் என்பதால், ஆரம்பப் பணிகளுக்காக இந்த 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஊராட்சி மன்றத்தினுடைய அதிகாரங்களைப் பற்றியெல்லாம் நேற்றும் இன்றும் உறுப்பினர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே பெரும்பான்மையான அதிகாரங்கள் ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன. அதற்கான பட்டியல் என்னிடத்திலே இருந்தாலும்கூட படித்துக்காட்ட நேரம் இல்லை. இருந்தாலும், இருக்கின்ற குறைகளை அகற்றி, இன்னும் சில அதிகாரங்கள் தேவை என்று எழுந்துள்ள குரலை மதித்து நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்ட அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அதிலே இன்னும் ஒரு 4,5 கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய உறுப்பினர்களின் பெயர்கள் தான் எங்களுக்கு வந்து சேரவில்லை. மற்ற எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய பெயர்களும் எங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டன. இன்னும் அனுப்பிவைக்காத கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஊராட்சி அதிகாரங்கள் குறித்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அதிக அதிகாரங்கள் அளிக்கப்படும்

இது தொடங்கி அறிவித்து ஏறத்தாழ 2 அல்லது இரண்டரை மாதங்கள் ஆகின்றன. இந்த இரண்டரை மாத காலமாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றும்கூட நேற்றைக்கோ அல்லது போன வாரத்திலேதான் முக்கியமான கட்சிகள் எல்லாம் கூட தங்களுடைய பெயர்களை, யார், யாரை இந்தக் குழுவிலே அமைக்கலாம் என்கின்ற பெயர்களை அனுப்பி

**"சமத்துவபுரம் ஆரம்பப்பணிகளுக்கான முதல் கட்டத் தொகை ரூ.15 கோடி!"**



(தொடர்ச்சி 33ஆம் பக்கம்)

# 'ஞானக் குழந்தையா'



**இசைஞானி இளையராஜா**

இந்த உலகின் ஏதோ ஓர் மூலையில் இருந்த அந்த அமைதியான தனிமைப் பிரதேசத்தில், அமைதியைக் கிழித்துக் கொண்டு, அப்போதுதான் பிறக்கின்ற குழந்தை ஒன்றின் அழுகுரல் சத்தம் கேட்டது.

பிறந்தது ஆண் என்றார்கள்!
பிரசவம் பார்த்தவர்களின்
கவனிப்புகள்!
பெற்றவளின் ஒய்ந்து போன
முனகல்கள்!
சுற்றாத்தாரின் சந்தோஷ
உரையாடல்கள்!
அப்பாவைப் போல ஜாடை.

அந்தக் குழந்தை என்னவாக வரப்போகிறது? இப்போது அது என்ன?.....! என்னவாக இருக்கட்டும்! அது ஓர் குழந்தை, ஒருமாதத்தில்,

முகம் பார்த்துச் சிரித்தது!
நாலைந்து மாதத்தில் தவழ்ந்தது!
ஆறாவது மாதத்தில் பல் முளைத்தது!
ஏழாவது மாதத்தில் எழுந்து நடக்க முயற்சித்தது!
ஒரு வருடத்தில் படுசுட்டிக்குழந்தை எனப்
பேரெடுத்துவிட்டது! பெயர் வைக்கப்பட்டது!

பெயர் சொல்லி அழைத்தால் சிரிக்கிறது! அப்பா, அம்மா, தாத்தாவென மழலை உதிர்க்கிறது! வருடங்கள் சென்றன. குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பினார்கள். பள்ளியில் புதிய அறிமுகங்கள்...

ஆசிரியர்கள்
நண்பர்கள்
அ....ஆ....A.B.C......

பாடல்கள், பாடங்கள், எல்லாவற்றிலும் உற்சாகம், கற்பதில் கவனம். வெளி உலகைப் புரிந்து கொள்வதிலும் ஆர்வம்! வகுப்புகள் மாறி மாறி-ப்ளஸ் டுவாகியது. பக்கத்து வீடுகளில் நடந்த மரணம் பிறப்பு இறப்பைப் பற்றி யோசிக்க வைத்தது. மாலை நேரங்களின் இனிமையில் தனியாக இருக்க விரும்பியது. கற்றவைகளின் விஷயங்களை அசைபோட்டு அசைபோட்டு,கவிதை எழுதும் (ஆர்வம்-திறன்) தன்னாலேயே வந்தது. அந்தக் குழந்தையின் எந்தக் கற்பனையும் கவிதையாகவே வந்தது. இருப்பினும் எந்த ஒரு நிகழ்விலும் அது குழந்தையாகவே இருந்து வருவதை உணர்ந்தது.

தவழ்ந்து தவழ்ந்து நகர்ந்து சென்ற நேரத்தில் எழுந்து நடக்க-நடை வண்டியைப் பெற்றோர் குழந்தைகள் வாங்கி வந்த நேரத்தில் அது கண்டு அது சிரித்த சிரிப்புக்கும் இப்போது இதன் கவிதையைப் பாராட்டும் - இதன் குழந்தை நண்பர்களின் பாராட்டு மொழிகளைக் கேட்டு அது சிரிக்கின்ற சிரிப்புக்கும் அதனிடம் எந்த வித்தியாசத்தையும் அது உணரவே இல்லை!

அதேபோல்-ஒவ்வொரு பள்ளித்தேர்விலும் வெற்றிபெறும் போதும் விளையாட்டுப் போட்டிகளில் முன்னில் வரும்போதும் கவிதைபாடும் கவியரங்கங்கள் அதிர்ந்து போகும் போதும் குழந்தைத்தனமாகவே அதை ஏற்றுக்கொண்டது.

அந்தக் குழந்தை முதன் முதலாக நடைவண்டியின் உதவி இல்லாது நான்கு எட்டு வைத்தபோது அதற்காகக்கைதட்டிக்கூச்சல் போட்டு ஆரவாரம் செய்த அதன் பெற்றோா சுற்றத்தார்களின் பாராட்டுதல்களைப் பெற்று-கைதட்டி அவர்களின் மகிழ்ச்சியைப் பிரதிபலிப்பதைப் போலத்தான் இதையும் எடுத்துக்கொண்டது.

ஒரு விதத்தில் அந்தக் குழந்தை பைத்தியக்காரனைப்போல் இவர்கள் ஏன் நடந்து கொள்கிறார்கள்! என அதிசயித்தது! என்னிடம் என்ன விசேஷத்தை இவர்கள் காண்கிறார்கள் என்று கேள்விக் குறிகளை எழுப்பி-பதில் தெரியாது தவித்தது. ஒரு குருவி குருவியாகவும் அருவி அருவியாகவும் இருப்பதில் என்ன விசேஷத்தை இவர்கள் உணர்கிறார்கள்? ஒரு குழந்தை குழந்தைத்தனமாக இருப்பதில் இவர்களுக்கென்ன ஆச்சர்யம்?

இதன் கவிதைகள் ஒரு காதலியைக் கொண்டு வந்தது! அதுவும் என்னைப் போலக் குழந்தைதானே? குழந்தைக்குக் குழந்தை நண்பர்கள்தானே! அந்தக் காதலிக் குழந்தைக்கு இதன் கவிதைகளின் மேல் அத்தனை மோகம்.

இவன் ஒரு பெரிய வரகவி என்பது அதன் கணிப்பு. கவிக்குழந்தைக்கு இருக்கும் அறிவு-தனக்கு இல்லையென்று அதன் அடிமனதில் ஒரு தாழ்வு மனப்பான்மை!

அறிவுபூர்வமாகக் கவிக்குழந்தை எழுதுவதை யெல்லாம் புரிந்துகொண்டு ஆச்சர்யப்பட்டுப் போகும் காதலிக்குழந்தை-அதன் அறிவை அதிசயித்துத் தன்னை அதனுடன் ஒப்பிட்டுக் கூனிக் குறுகிப் போவது அடிக்கடி நிகழ்வதுண்டு. அப்போதெல்லாம் கவிக் குழந்தை இதற்கிருக்கும் அறிவு அங்கே இல்லை என்ற தேவையற்ற கற்பனை ஏன்? /

அறியாமை அறிவை அடையாளம் கண்டு கொள்ளும். அறிவும் அறியாமையை அறியும். அறிவைச் சுட்டிக்காட்டும் அறியாமையும் அறியாமையைச் சுட்டிக்காட்டும் அறிவும் ஒன்றுதானே! அறிவை அறிவென்று கண்டு கொள்ளும் ஒன்று, எப்படி அறியாமையாக இருக்க முடியும்? இப்படியெல்லாம் - பேசுவதற்கு - இந்தக் குழந்தையால் எப்படி முடிகிறது? என்று-அது யோசித்தது.

யோசனையின் ஆழத்தில் அமைதி! ஏன் அமைதியாகிவிட்டாய் என்ற காதலிக் குழந்தையின் வினாவுக்கு, - பேசுகின்ற தவறுக்கு மௌனமாயிருத்தலே அபராதம் என்றது! - அந்தக் குழந்தைகளை மௌனம் கவ்விக்கொண்டது!

காலம் கடந்தது.

மாலை நேர வானில்-மேகங்கள் வேகமாய் காற்று வீசிய திசையில் நகர்ந்தன. ஒரு கணம் காதலிக் குழந்தையின் மௌனம் கலைந்து மனதில் கேள்விகள் சத்தம் போட்டன!

இந்த மேகம் அப்படி எங்கே போகிறது? மனதுக்குள் ஒலித்த கேள்விச் சத்தத்திற்குக் கவிக்குழந்தை-இந்த மனிதக் குழந்தைகள் எங்கே போகின்றன? எதைத் தேடிப் போகின்றன?

பதில் தெரியாததால்-பதிலைக் கண்டுபிடிக்க முயன்றதால் ஆழ்ந்து போன மனம்-முகத்தில் கேள்வி அடையாளம் போட்டது!

எதையெதையோ நினைப்பதும், ஒய்ந்து போவதுமாக மாறி மாறித் தொடர்ந்து நிகழ்ந்து சலிப்படைந்த-மனம்-

நினைப்பதும் - மனம்
ஒய்ந்து போவதும் - மனம்
சலிப்படைவதும் - மனம்

அடேயப்பா-இந்த மனம் தன்னையே வேடிக்கை பார்க்கிறதே!

பார்க்க அதனால் முடிகிறதே! எனச் சிந்தித்தது.

சிந்தனையில் - கேள்விகள்
கேள்வி - பதிலைத் தேட
ஆரவாரம்-அமைதியைத் தேட
அமைதி - அன்பைத்தேட
அன்பு - அறிவைத்தேட
அறிவு-அறியாமையைத் தேட-
அடேயப்பா!

தேடிய-எதற்கும்-எதுவும் கிடைக்கவில்லை! கவிக்குழந்தை- நீ என்னிடம் தேடியது உன்னையல்லவா? தன்னைத்தானே தேடுவது விந்தையல்லவா?என்றது!

காதலிக் குழந்தை - ஒத்துக்கொண்டது
என்னைத்தேடி நானலைந்த
நாட்கள் உண்மைதான்
தொலைந்துபோன நாட்கள்!

தொலைந்துபோன நாட்கள் திரும்ப மீண்டும் வருமா? கலைந்துபோன கனவைக் கையில் கொண்டு தருமா? தூரத்தில் - சுடுகாட்டில் - பிணம் ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அதனருகில் ஒரு வெட்டியான் - தடிகொண்டு - சரிசெய்து கொண்டிருந்தான்.

வாழ்வின் வெறுமையை உணர்ந்த கவிக்குழந்தை தாங்க முடியாத மனச்சுமையைப்



"பிணஞ்சுடு தடியே-என் மனஞ்சுடுவாயா?"என்ற முனகலில் இறக்கி வைத்து.

வாழ்வின் முடிவைக்கண்ட குழந்தைகள் தொடக்கத்தை எண்ணிப் பார்த்தன!

தளிருது
துளிருது
மிளிருது
வளருது
உதிருது!

எல்லாப் பொருள்களுமே மாறிக்கொண்டே இருப்பதுதான் இயற்கையின் நியதி! நீயும் நானும் மாறுவோமா?

நீ-நான்-என்றாயே-அது என்ன பொருள்? இந்த உடலா? ஏனிந்த வேண்டாத கேள்விகள்? கவிக்குழந்தை தொடர்ந்தது. நீ இதனிடம் உள்ள

- சேர்ந்து விளையாடினோம்
- சேர்ந்து படித்தோம்
- சேர்ந்து நடந்தோம்
- சேர்ந்து புரிந்து கொண்டோம்.

சேர்ந்தே வாழ்வோம்!-திருமணச் சடங்கு நடக்க வேண்டுமா என்ன?

கவிக்குழந்தை நாடு போற்றும் - தத்துவக் கல்வி-என அடையாளம் காடடப்பட்டது. எழுதும் கருத்துகளை விவாதிக்க - மேடைகள் - ஏற்றுக்கொள்ளும் - இளைஞர் கூட்டம் மறுக்கும் - அறிவு ஜீவிகள் - பத்திரிகைகள் - நூல்வெளியிடும் பிரசுரங்கள்.

உலகம் தோன்றி-மனித குலம் தோன்றிய நாள் முதலாக-சொலலி வந்து எழுதி வந்து புரிந்து கொண்டு தொடர்ந்து...

வருகின்ற கருத்துகளுக்கும்- பழக்கங்களுக்கும்



கவித்திறனால் ஈர்க்கப்பட்டு வந்தாயா?அல்லது இந்த உடலின் வனப்பினால் வளைக்கப்பட்டு வந்தாயா? கவித்திறனால் என்றால் இதைவிட அற்புதமாகக் கவிபாடுபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்!

வனப்பினால் என்றால் இதைவிட இன்னும் அழகான தோற்றம் கொண்ட எத்தனையோ பேர் இறங்கியிருக்கிறார்கள்!

ஏன்

ஏன்-இது இதை விரும்பியது! தெரியாது! இதைத் தவிர ஓர் உண்மையான காரணம் இருக்க முடியுமா? இருந்தால் அது பதிலில்லை-வெறும் சமாதானமே.

இரண்டு குழந்தைகளும் ஒன்றையொன்று மனப்பூர்வமாக விரும்பின. அவைகளைப் பொருத்தவரையில் அது குழந்தைப் பருவ விளையாட்டில் - காட்டிய ஆர்வம் போலத்தான் இதுவும்.

நம்பிக்கைகளுக்கும்-ஓர் அளவே இல்லை-

அப்படியென்ன-இது புதிதாகச் சொல்லப்பட்ட விஷயம்? எனக் கவிக்குழந்தை- அங்கலாய்த்தது!

பிறப்பு
இளமை
அழகு

அறிவு - இவைகளையெல்லாம் தந்தது காலம் என்றால் அதை அந்தக் காலமே எடுத்துக் கொள்ளும்.

மலைபோல் நிலைத்திருக்கும் என நினைத்திருந்தவையெல்லாம் அலைபோல் கலைந்து செல்பவை என இவர்கள் உணரவில்லையே! கலையும் கனவுபோல் இளமை குலையும் எதுவும் நிலை இல்லாது அலையும், தொலையும் எனும் உண்மை உலகின் நிலையாமையை இவர்களுக்கு உணர்த்த வில்லையா?

இந்த அண்டத்தின் எல்லையற்ற விரிந்த தன்மையை உணர்ந்த ஓர் உள்ளத்தால் அடைந்து கிடக்கும் அறைக்குள் எப்படி இருக்க முடியும்? இந்த உலகில் அடைத்து வைக்கப்பட்ட அறைக்குள் இருக்கும் ஒருவன் போல் இருக்கும் இம்மனிதர்கள்-(அகண்ட வெளியொன்று இருப்பதை உணராது) அந்த அறையையே - அண்டம் என நினைத்து மகிழ்வதை ஏற்றுக் கொள்ள இயலவில்லையே!

துணைவிக் குழந்தை ஆறுதல் சொன்னது-

(பக்கத்தில்-இருவருக்கும் பிறந்த மூன்று குழந்தைகள்-)

இருள் சூழ்ந்த இடத்தில் தோன்றிய சூரியன் போல் இவர்களுக்கு நீங்கள் - உங்களால் அந்தக் குழந்தைகளுக்கு வெளிச்சம் வரட்டும்! நான் சூரியன் என்றால் அவர்களும் சூரியன்தானே? இல்லை-தான் சூரியன் என அறியாத சூரியர்கள்!

அப்படியா?-இந்தச் சூரியன் மட்டும் தன்னைச் சூரியன் என்று உணரும்படியும் மற்ற சூரியன்கள்-வேறு ஏதோ ஒன்று என உணரும்படியும் செய்து வைத்தது யார்?

இதைச் சூரியன் எனச் சுட்டிக் காட்டுவது எது? கவிக்குழந்தை பித்துப் பிடித்தது போல் ஓடியது வெளியே.

ஓடிய அந்த ஓட்டத்தில் - மண் பின்னால் ஓடியது - காலம் முன்னால் ஓடியது. கவிக்குழந்தையோ ஒரே இடத்தில் ஓடிக்கொண்டிருப்பவனைப் போல உணர்ந்தது.

கவிக்குழந்தைக்கும்-அதன் துணைக்கும்-பேரக் குழந்தைகள் தோன்றும் அளவு-மாற்றங்கள் நடந்துபோயின.

இந்தக்கவி-பித்துப் பிடித்தது போல் சுற்றியது. போன இடமெல்லாம்-அவனைத் தெய்வமாகப் பார்த்தது இந்த உலகம். அந்தக் குழந்தையோ - மனதால் எந்த மாற்றமும் இல்லாமல் தோற்றத்தில் மட்டும் மாற்றம் கொண்டு-குழந்தைச் சேட்டைகளை விடாமல் செய்து தொடர்ந்து ஆனந்தத்தில் மிதந்தது.

அதைத் தொட்டால் புண்ணியம் அதன் பார்வை பட்டால் பாவம் தொலையும்- அதற்குப் பணிவிடை செய்தால் - பிறவிப் பயன் கிட்டும் என்ற நம்பிக்கை மக்களிடையே-

இவர்களுக்காக வருந்தி- பரிதாபப்பட்டுப் பழகிபோய்- அதையும் நிறுத்திவிட்டது-எதையும் லட்சியம் செய்யாது இருந்து வந்தது. அப்போது ஸ்வாமியின் காதலிக் குழந்தை-பேரக்குழந்தை சகிதமாக அவரை அழைத்துப்போகும் எண்ணத்தோடு அங்கே வந்தது. திரும்பிப்பார்த்த சூரியக்குழந்தையின் பார்வையில் எந்த மாறுதலும் இல்லை.

வாருங்கள் போகலாம்!
எங்கே?
வீட்டுக்கு,
இது என்னவாம்? இதுவும் வீடுதான்!

என்று உடம்பைத் தொட்டுக்காட்டிச் சிரித்தது! அருகில் நின்றிருந்த பேரக்குழந்தைகள் சிரித்தன- தாத்தா தாத்தா எனச் சுற்றி வந்தன. தன்னைச் சுற்றும் பூமிபோல நீ உன்னைச் சுற்று.

கண்மணி...எல்லா இடமும் இதோட உடைமைதான். இங்கே இது தனியா இருக்குன்னுதானே நெனைக்கிறே - இது எல்லா இடத்திலும் வியாபிச்சிருக்கு. குடத்துக்குள்ளே இருக்கும் ஆகாசம் குடத்துக்குள்ளே கட்டுப்பட்டதா? இது எங்கேயும் வராது-எங்கேயும் போகாது. இங்கே-அங்கே என்ற பேச்சே இங்கே இல்லை என நெஞ்சைத் தொட்டுக் காட்டியது- குழந்தையின் குடும்பம் வருந்திச் செல்வதைக்கூட்டம் கவனித்தது.

ஸ்வாமி-நீங்கள் ஓர் சூரியன்!

அப்படியா?-இல்லையே!-யார் சொன்னா?

நாங்கதான் ஸ்வாமி-

நான் சூரியனா இருந்தா-நீங்க எரிஞ்சு போயிருக்கணுமே? ஏன் எரிஞ்சு போகல?...

தெரியாது ஸ்வாமி.

நீங்களும் சூரியன்தான்-

அதனாலதான் எரிஞ்சு போகல!

புரியுதா?

அது இரவு நேரம்.

- ராத்திரியிலே சூரியன் எங்கிருக்கும்? சந்திரன்தான் வரும். மேலே பார். அங்கே முழுமதி-பட்டப் பகலாய்- இரவைக் காட்ட கவிக் குழந்தை பாடியது - கூட்டம் கூடியது. கூடியதில் நிறையக்கல்லூரி மாணவக் குழந்தைகள், பாட்டு ஒலித்தது. சூரியன் ஏற்றி வைத்த சந்திர விளக்கே சூரியனை ஏற்றி வைத்த சூரியன் யார்? காரியம் நடத்தி வைக்கும் காரணமே காரணம் கடந்து நிற்கும் பூரணன் யார்?

அங்கே தவித்துக்கிடந்த இள, நெஞ்சங்களில் "குபீர்குபீர்" என ஞானத் தீ பரவியது. எதனால்-எதற்காக? இந்தக் காரிய காரணங்களுக்கங்கே இடமே இல்லை -ஞானத் தீ பற்றியதென்றால் பற்றியதுதான்!

தாகம் கொண்டு தவித்துக் கிடந்த உள்ளங்களுக்கு-ஞான ஊற்றுப் பீறிட்டு-தாகத்தைத் தணித்தது.

குழந்தைச் சூரியன் கேட்டது தீப்பிடித்ததா? தாகம் தணிந்ததா?...தீ அணைந்ததா? சுற்றி நின்ற இளங்குழந்தைகள்- எதனாலோ பிணைக்கப்பட்டது போலானர்கள்? அந்தப் பிணைப்பு-பிணைப்பாக இல்லாமல்-விடுதலையாக இருந்ததுதான் அதன் விசேஷம். இனி என்ன செய்யப் போகிறீர்கள்? எங்களால் என்ன செய்ய முடியும்? என்ன செய்ய முடியாது?

ஏதாவது சொல்லுங்கள் இதுவரை என்ன செய்தீர்கள்? வழிகாட்ட யாரும் இன்றி மனம்போன போக்கில்

பாடங்கள்
பாடல்கள்
ஆடல்கள்

தேடல்கள்-சூறாவளியில் சிக்கிய சருகுபோல் சினிமா-டிவி-யில் மூழ்கி நாயக-நாயகியரின் மோகத்தில்- சுற்றிச்சுற்றித் தொலைந்த நாட்கள்-கல்லூரி வாசல்களில்-கதைத்த கதைகளில்-நகைச்சுவைத் துணுக்குகளில் தொலைந்த நேரங்கள்-அனுபவம் என்ற பெயரில்-எதை எதையோ தேடி மனதைப் புதைத்துத் திரும்ப எடுக்க முடியாமல் தொய்ந்து போன தோல்விகள்-இதுதான் நாங்கள். சாதித்தது-என்று ஒத்துக் கொண்ட இளைஞர் கூட்டத்தை-அன்போடு பார்த்து-நெஞ்சம் நெகிழ்ந்ததோ-இல்லையோ-அன்பு கனிந்தது.

கவிக்குழந்தை-

கண்ணீர்மல்க வானத்தைப் பார்த்தது- மேகமே இல்லாது-வெண்மதி விளையாடிக் கொண்டிருந்த வானத்தில் திடீரென்று மேகங்கள் தோன்றி-

மழை பொழிய ஆரம்பித்த இளங்குழந்தைகள் இது எதனால் நிகழ்கிறது? அன்பாலா? இவருக்கிருக்கும் வல்லமையாலா?

அன்பால் என்றால் மழையை ஸ்வாமி வேண்டவே இல்லை. வல்லமையால் என்றால்-அதை வரவழைக்க வேண்டிய அவசியம் இப்போது ஸ்வாமிக்கு இல்லை.

பின் எதனால் இது நிகழ்கிறது?

எனப் பலவாறு புத்தியால் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தது. புத்தியவுடு மடையா-என்று கத்திவிட்டு-மௌனமாகி அடுத்த கணம் பொழிகின்ற மழை அத்தனையையும்-குழந்தைச் சூரியனே வாங்கிக் கொள்வது போல் - அது வானத்தைப் பார்த்தபடி முகத்தை மேலே தூக்கி - கண்களை மூடி அமைதியாக நின்றிருந்து.

ஸ்வாமி ஏதாவது சொல்லுங்கள்!

சொல்வேன்!

பிறக்காதீர்கள்!

பிறந்தால் இறக்காதீர்கள்!

பிறக்கத்தான் வேண்டுமென்றால்
ஒவ்வொரு கணமும் பிறவுங்கள்-

பின் எங்கே இறக்கப் போகிறீர்கள்? குழந்தைச் சூரியனுக்கு இன்னும் கண்கள் மூடியவாறு தான் இருந்தன! இந்த உடல் உங்கள் ஸ்வாமி அல்ல! இது போகும் வரும்.

இதற்குள் இருப்பதோ-போவதும் இல்லை வருவதும் இல்லை!

உனக்குள் எனக்குள் இருப்பதுதான் எங்கும் இருப்பது.

அது-

அது-இதுவென இடைவெளி இல்லாதது உனக்குள் இருந்து கேட்டுக் கொள்வதும் இதற்குள் இருந்து சொல்லிக் கொள்வதும் அதுவே-

அதற்கும்-இதற்கும்-இடைவெளி இல்லை. அமைதியாக ஆழ்ந்து நோக்குங்கள் என்றவுடன்-அனைவரின் மனமும் அவரவர்களுக்குள் மூழ்கியது.

இந்த மனம் எதனால் இப்படி அமைதியில் மூழ்கியது என்பதும் அவர்களுக்கு விளங்கவில்லை. மௌனத்தில் ஆழ்ந்த மனங்கள்-அங்கே-நிரம்பி வழிய-அனைவரின் கண்களும்-தாமாக மூடின-நேரம் கடந்தது.

அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது! அனைவரின் கண்களும் ஒரே நேரத்தில் திறந்தன -

சூரியக் குழந்தை சிரித்தது!

அதன் முகத்தின்-சூரியப் பிரகாசத்தின்-

ஒளி
பொலிவு
அமைதி
சாந்தம்
கருணை
அம்மம்மா?

சத்தம் போட்டுச் சிரித்தது!...

மேலே இருந்து மழையைக் கொட்டிக் கொண்டிருந்த சூரியக் குழந்தையின் உடல்-நீர்த்துளிகளாக மாறி-மேலே கிளம்பியது.

இளைஞர் கூட்டம்-என்ன நடக்கிறது என்று உணர்வதற்குள்-அந்த உருவம் மேல் நோக்கிப் பறந்து மழைத்துளிகளாகி அரூபமாகி-வானோடு வானாக...விரிந்து படர்ந்தது!!!

கீழே நின்ற குழந்தைகள் ஒவ்வொன்றும் ஒரு சூரியக் குழந்தையாகத் தன்னை உணர்ந்தன!

இளைஞர்களைக் காணாத பெற்றோர்கூட்டம் அங்கே தேடி வந்தது. மழையில் சொட்டச் சொட்ட நனைந்திருந்தவர்களைப் பார்த்து ஒன்றும் புரியாது திகைத்தது.

என்ன இங்கே மட்டும் ஒரே தண்ணீராக இருக்கிறதே எல்லோரும் நனைந்திருக்கிறீர்களே? என்று-கேள்விகள்!!!

பல கேள்விகள்! கேள்வி மேல் கேள்விகள்!!

ஊஹூம் ஒன்றுக்கும் பதிலில்லை!

"இயற்கையைக் கேள்வி கேட்க யாருக்கும் அதிகாரம் இல்லை. நாங்கள் இயற்கை!" என்பது போலிருந்தது அவர்களின் மௌனம்.

-'தமிழரசு' இலக்கிய மலரிலிருந்து

# பாடுபொருள் ஆகாத சுதந்திரப் போர்த் தியாகிகள்

- கிருஷ்ணசாமி பாரதி

இளைய தலைமுறைக்கு நம் சுதந்திரப் போராட்டம் என்பது, தேச சரித்திரத்தின் ஒளிவீசும் மிகுந்த மனவலிமையோடு, அடிமைப்பட்ட நாட்டை ஆதிக்கம் செலுத்திய காலனி அதிகாரத்திற்கு எதிராக நடத்தி, வெற்றியும் கண்டது. இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டில், அதிர்ஷ்டவசமாக நம்மிடையே இருக்கும் சில தனிமனிதர்களின் - அவர்கள் கண்ட விடுதலைக் கனவு நனவானதையும் தெரிந்து கொள்வோம். அந்த வாழும் வழிகாட்டிகளின் அனுபவத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர்வோம். நாம் இன்று சுவாசிக்கும் இந்தச் சுதந்திரக் காற்றுக்காகத் தியாகம் செய்த, பாடுபொருள் ஆகாமல் பாடுபட்ட வீரர்கள், வீராங்கனைகளைப் பற்றி இப்போது பார்க்கலாம். இளமையை இழந்து, இன்பமான வாழ்க்கையை இழந்து, காலனி ஆதிக்கத்தை எதிர்த்து அவர்கள் வாங்கிக் கொடுத்த சுதந்திரத்தினால் தான், இன்றைய தலைமுறை சுதந்திரக் குடிமகனாக, நல்ல வாழ்க்கையை அடைந்து, சூரிய ஒளியின் கீழ் நிம்மதியாக வாழ்கிறது. பொன்விழா ஆண்டில், பொன் எழுத்துக்களால் தங்கள் புகழ் பொறிக்கப்படாத வீரர்களின், விடுதலை இயக்க வேட்கையை அறிந்துகொள்வோம்.

அது சுதந்திரப் போராட்டம் உச்ச நிலையில் இருந்த நேரம். ஒரு இளமையான வேகம் நிறைந்த வாலிபன், ஆங்கில அரசை எதிர்த்து, மறியலில் ஈடுபட்டு அடிமேல் அடி வாங்கினான். அவன் மேல் விழுந்த 'அடிமழை' தொடர்ந்து பெய்தது. ஆனால் அந்த வாலிபன், அந்த இடத்தை விட்டு ஒரு அடி கூட நகரவில்லை. தன் எதிர்ப்பைத் தெரிவித்து, அடுத்த நாளும் அடிவாங்கத் தயாராக வந்தான். மேற்குறிப்பிட்ட வாலிபன் மதுரை நகருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன். சரித்திரப் பக்கங்களில் காணாமல் போன அவன், பாடு பொருள் ஆகாமல் மறைந்து போன பாமரன். ஆனால் அவன் வீர தீரம் செறிந்த, கவனிக்காமல் விடப்பட்ட கதாநாயகன்.



## வேள்வி நடத்திய வீராங்கனை

இதேபோல், *1928*-ம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கருகில் பத்மாஷிணி அம்மாள் என்பவர் இருந்தார். அவர், சீனிவாச வரதன் என்னும் முன்னணி விடுதலைப்போராட்ட வீரரின் மனைவி. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து அந்த அம்மாள் மைல் கணக்கில் பாதயாத்திரை நடத்தி விடுதலை வேட்கையை மக்களுக்கு ஊட்டினார். அதுவும் எப்பேர்பட்ட நிலையில் அவர் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார் தெரியுமா? கர்ப்ப நிலையில், குழந்தை இன்னும் ஒரிரு மாதங்களில் பிறந்துவிடும் சூழ்நிலையில், விடுதலை வேள்வி நடத்தினார்.

அந்நிலையிலும் இருமுறை சிறைப்பட்டார். அந்த அம்மாளுக்கு அழகான குழந்தையும் பிறந்தது. ஆனால் போதிய கவனிப்பு இல்லாததினால் பிஞ்சுப் பருவத்திலேயே அது இறந்தது. இந்திய விடுதலைக்காக மலர்ந்த பத்மாஷிணி அம்மாள் என்ற மலர் யாராலும் கவனிக்கப் படாமலேயே உதிர்ந்தது. பாடு பொருளாகப் பாடப் படவில்லை.

சுயநலமற்ற இத்தகையோருக்குத் தூண்டுகோலாக இருந்தவர் மகாத்மா காந்தி தான். தங்கள் வேலைகளை வியாபாரங்களை மறந்து ஆயிரக் கணக்கானவர்கள் விடுதலை வேள்வியில் ஈடுபட்டனர். அவர்களில் கோவையைச் சேர்ந்த சுப்ரி, சேலத்தைச் சேர்ந்த

பவானிசிங், திருநெல்வேலியைச் சேர்ந்த சோமயாஜுலு முதலியோர் பல நாட்கள் பாதயாத்திரை செய்து தங்கள் பணிகளைச் செய்தனர். இவர்கள் இதயத்தில் விடுதலைத் தீயை ஏற்றி வைத்தவர்கள் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா மற்றும் சுப்பிரமணிய பாரதி ஆகியோர்.



இப்பேர்ப்பட்ட கதாநாயக, நாயகியர் காந்தியடிகளோடு தோளோடு தோள் நின்று, ஆங்கில அரசை எதிர்த்து அகிம்சை முறையில் சத்தியாகிரகம் செய்தனர். அவர்களிடத்தில் எந்த வேற்றுமையும் இல்லை. ஏழையோ, பணக்காரனோ, இந்துவோ, முஸ்லீமோ, கிறித்துவனோ, ஜெயினோ, சீக்கியனோ, பார்ஸி இனத்தவனோ, புத்தமதத்தைச் சேர்ந்தவனோ என்ற பாரபட்சம் எதுவும் கிடையாது. எல்லோரும் ஒன்றிணைந்து, ஒரே தலைவனின் கீழ் உலகம் இதுவரை சந்தித்திராத போராட்டத்தை வெறுங்கையோடு வெள்ளையர்களை எதிர்த்து நடத்தினர். தங்களிடம் இருப்பதை எல்லாம் இழந்து ''சுயராஜ்யம்'' என்னும் ஒரே குறிக்கோளை அடைய தங்கள் இதயங்களைத் தயார்படுத்தினர்.

### மாறுதலுக்கான வழிகாட்டி

தேசத்திற்கு, காந்தியடிகளின் வருகை, சுதந்திரப் போராட்டத்தை, மக்கள் இயக்கமாக, கிராம மற்றும் படிப்பறிவில்லாத பாமரர்களை உள்ளடக்கிய போராட்டமாக மாற்றியது. சுயராஜ்யத்தை அடைவதற்காகச் சாதாரணமக்களுக்கு அடிமைத் தனத்தை உணர்த்தி, அதிலிருந்து விடுபடும் வேகத்தை உருவாக்கினார்.

அக்கால கட்டத்தில் காந்தியடிகளின் வாக்கே, வேதவாக்கு. இந்திய மக்களுக்கு அவர் காங்கிரசின் அடையாளம். மக்கள், காந்தியடிகளின் அகிம்சையையும், உண்மையையும் உணர்ந்தார்கள். மறியலில் ஈடுபட்ட தொண்டர்கள் கட்டுப்பாடான ஒழுங்கோடு செயல்பட்டார்கள். மதுரை மாநகரத்தில் கள்ளுக்கடை மறியலும், அந்நியத் துணி விற்கும் கடைகளை எதிர்த்து மறியல் செய்வதும் அன்றாட வாடிக்கையானது. போலீசாரின் தடியடியும், துப்பாக்கிச் சூடும் தினசரி நிகழ்ச்சியானது. ஆனால் மறியலில் ஈடுபட்ட தொண்டர்கள் ஒரு போதும் தடியடிக்குப் பயந்து ஓடியதில்லை. அடிபடும்போது ஆரவாரமோ அழுகுரலோ கூடக் கேட்டதில்லை. சாலமன் மற்றும் பிச்சையம்மாள் போன்ற தொண்டர்கள் விழும் அடியைப் பொறுத்துக் கொண்டு, வீறுகொண்டு ''வந்தே மாதரம்'' என்றே கூவினர்.

### தேசியப் போராட்டத்தில் மாணவர்கள்

ஆயிரக்கணக்கான மாணவர்கள் காந்தீயச் சக்தியினால் கவரப்பட்டு, தங்கள் படிப்பைக் கைவிட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில், தன் படிப்பைக் கைவிட்டுச் சேர்ந்தவர் ஏ.என்.சிவராமன். இவரே பின்னாளில் ''தினமணி'யின் ஆசிரியரானார். குடும்பத்தார் எவ்வளவோ தடுத்த போதும் தன் கொள்கையில் ஒரே பிடியாக இருந்தார். அப்போது அவர் நெல்லை மாவட்டத்தில் உள்ள கல்லிடைக் குறிச்சியில் சுதேசிப் பள்ளி ஒன்றின் ஆசிரியராக வேலை பார்த்தார். மாலை நேரங்களில் நாட்டுப்பற்று மிக்க பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

1925-ஆம் ஆண்டு சென்னை மெரீனா கடற்கரையில் மகாத்மா காந்தி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அப்போது மாணவராக இருந்தவர்தான் தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரர் டி.செங்கல்வராயன். அப்போது பள்ளியின் முழு ஆண்டுத் தேர்வு நெருங்கியிருந்த சமயம். தன் தாய், தந்தையரை தொடர்ந்து வற்புறுத்தி பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். ஆங்கில அரசில் அப்போது அவருடைய தகப்பனார் அதிகாரியாக இருந்தார். இளைஞனான செங்கல்வராயன் பெற்றோரிடம் பத்து ரூபாயை வாங்கி கதர்சட்டையும் வேட்டியும் வாங்கி கட்டிக்கொண்டார். கடைசிவரை அதே மாதிரி ஆடையையே அணிந்து வந்தார்.

1920-ஆம் ஆண்டு காந்தியடிகளை நான் முதன்முதலாக என் மாமனார் சோமசுந்தரபாரதி வீட்டில் சந்தித்தேன். அப்போது எனக்கு வயது 17. நானும் என் மனைவியும் காந்தியடிகளின் காலில் விழுந்து வணங்கினோம். அன்றிலிருந்து, சுதந்திரப் போராட்டத்தில் என்னைத் தீவிரமாக இணைத்துக் கொண்டேன். பலமுறை என் குடும்பத்தாரோடு சிறையும் சென்றிருக்கிறேன்.

## தேச உணர்வு ஊட்டப்பட்டது

பெற்றோர்களின் ஆதரவும், ஊக்கமும் இருந்ததினால் என் போன்ற நிறைய இளைஞர்கள் சுதந்திரப் போராட்டத்தில் துணிந்து ஈடுபட்டார்கள்.



செல்லப்பா என்ற இளைஞர் நாட்டுப்பற்றைத் தன் தந்தையார் சுப்பிரமணியம் மூலம் பெற்றார். தந்தை, தன் தனயனைத் தேசப்பற்று மிக்க பொதுக் கூட்டங்களுக்கு ஏழு, எட்டு வயதிருக்கும் போதே அழைத்துச் சென்றார். செல்லப்பாவின் அப்பா ஆங்கில அரசில் பணிபுரிந்தாலும், காதி உடை அணிவதைத் துணிவோடு செய்தார். ஆட்சி யாளர்கள் கோபத்திற்கு இதனால் தான் ஆளாக நேரிடுமே என்று துளிகூடக் கவலைப்படவில்லை.

அந்தப் போராட்டக் காலங்களில், வீதிகளில் தொண்டர்கள் தேசபக்திப் பாடல்களைப் பாடியபடியே கதர் ஆடைகளை விற்றார்கள். ஆனால் பெருவாரியான மக்கள் ஆட்சியாளர்களின் அதிகாரத்துக்குப் பயந்து ஆடைகளை வாங்கவில்லை. தேச விடுதலையைப் பற்றிப் பேசுவதே குற்றம். அந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரை கடுஞ்சிறைத் தண்டனை. பொதுக்கூட்டங்களும் ஊர்வலங்களும் தடை செய்யப்பட்டன.

இந்த மிரட்டல்களுக்கெல்லாம் பயந்து எந்தத் தலைவர்களும், தொண்டர்களும் விடுதலைப் போராட்டத்தைக் கைவிடவில்லை. இப்படிப்பட்ட - நெருக்கடியான சூழ்நிலையே, அவர்களுக்கு தேசபக்தியை மேலும் மேலும் வளர்த்தது. ஒருமுறை சென்னையில், ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களால் 'சைமன் கமிஷனை' எதிர்த்து ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலம் சட்டக்கல்லூரியை நெருங்கும் போது, ஊர்வலம் இன்னும் தொடர்ந்தால் சுட்டுத் தள்ளுவோம் என்று போலீசார் எச்சரித்தனர்.

பயப்படாத பிரகாசம், தன் சட்டையைக் கழற்றி மார்பை நிமிர்த்தி 'எங்கே சுடுங்கள் பார்ப்போம்' என்றார். போலீசார்தான் பின் வாங்கினர்.


## சிறை வாழ்க்கை

சிறை வாழ்க்கை அப்போது கொடுமை யானதாகவும், மனிதத்தன்மை அற்றும் இருந்தது. மோசமான உணவுகளே பரிமாறப்பட்டாலும் அதில் புழுக்களும், பூச்சிகளும் நெளிந்தன. சிறைப்பட்டோர் கடினமான வேலைகளையும் கழிப்பறையை சுத்தம் செய்யவும் பணிக்கப்பட்டனர். நாட்டு விடுதலை உணர்வே மேலோங்கி இருந்த அந்தப் போராட்ட வீரர்கள் அத்துன்பங்களைத் தாங்கிக்கொண்டு, எப்போதும் உற்சாகத்துடனேயே காணப்பட்டனர்.

சிறைச்சாலை, அவர்களுக்கு நாட்டின் பல மாநிலத் தலைவர்களையுமே, தொண்டர்களையும் சந்திக்க வழியேற்படுத்தியது. இன்னும் சொல்லப்போனால் அந்த வீரமிக்க இளைஞர்களுக்குச் சிறைவாழ்க்கை புதிய பாடத்தை அறிமுகப்படுத்தியது. சிறைவாழ்க்கை, தண்டனை அல்ல. தங்கள் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்திக்கொள்ள அது ஓர் அனுபவம் என்றுதான் காந்தியடிகள் அவர்களுக்கு உணர்த்தியிருந்தார்.


தேச விடுதலைப் போராட்டக் காலத்திய சில சம்பவங்கள்தான் மேலே சொல்லப்பட்டன. சுதந்திரம் பெற்று 50 ஆண்டு முடியும் இந்த நேரத்தில் இந்திய விடுதலைக்காகக் கனவு கண்ட, பாடுபொருள் ஆகாமல் மறைந்து போன அவ்வீரர்களுக்கு, மௌமான நம் வீர வணக்கத்தைச் செலுத்துவோம். ★

# வாசகர் இதயம்



**அ**ன்னை தெரசா, நேரு, பி.சி.ராய் போன்றவர்களுக்குப் புகழாரம் சூட்டித் 'தமிழரசு' பாராட்டியிருந்தது என் நெஞ்சைத் தொட்டது.

- ப.அருணாசல சண்முகம்,
வீரளூர்.




**சு**தந்திரதின இதழில் - உடுமலை நாராயணகவி எழுதி, இதுவரை வெளிவராத பாடல் ஒன்றை வெளியிட்டிருந்தீர்கள்; பிரமாதம்.

- பூபாளம் ப. முருகேச பாண்டியன்,
கரப்பாடி.

**'த**மிழரசு' இதழ் (செப்டம்பர் 1-30) ஒவ்வொரு பக்கமும் தேசப்பற்றின் நேர்த்தி கூட்டுவதாகவும், மிகச் சிறந்த கருத்துகளோடு மனதுக்கு இதமளிப்பதாகவும் இருந்தது.

-க.நா.ராஜசேகர்,
மங்களபுரம்.




**ம**துரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டிற்குப் போய்வர முடியாத என் குறையைத் 'தமிழரசு' தீர்த்து வைத்தது; மிக்க நன்றி.

- ருக்மணி குழந்தைவேல்,
மேட்டுத்திருக்காம்புலியூர்.

**பெ**ரியாரின் வைக்கம் போராட்டம் பற்றிய கட்டுரையில், திருவிதாங்கூர் மன்னர் மறைந்தபின், ஆட்சிப் பொறுப்பேற்ற அவர் 2வது மனைவி சேதுலட்சுமிபாய், அப்போராட்ட வீரர்களுக்குப் பொதுவிடுதலையளித்தார்; எல்லாச் சமூக மக்களும் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளில் நடக்க உரிமையளித்தார் என்பதையும் குறிப்பிட்டிருக்கலாம்.

-டாக்டர் எஸ்.பத்மநாபன்,
ஈரோடு.



**சு**தந்திரப் போராட்ட காலத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பற்றிய செய்திகள் - அதபற்றிக் கலைஞர் கொடுத்திருந்த விளக்கம் எல்லாமே அருமையாக இருந்தது.

- மு.செல்வம்,
கீரப்பாளையம்.

**ம**ருத்துவம் பகுதியில் வெளியிட்டிருந்த 'இரத்தக் கொதிப்பு' பற்றிய கட்டுரை மக்களுப் பயனுள்ள செய்திகள் பலவற்றைத் தருவதாக இருந்தது. இப்படிப்பட்ட கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடவும்.

- வெ.சென்றாயன்,
கருப்பூர், சேலம்-12.

# ஜேம்ஸ் மூனும் செண்பகராமன் புதூர்க்காரரும்

– மா. அரங்கநாதன்

தமிழ்ப் படங்கள் பிரபலமாகி வந்த காலத்தில் அங்கே செண்பகராமன்புதூரில் அஞ்சலகம், பள்ளிக்கூடம் எதுவும் இருக்கவில்லை. படம் பார்க்க ஏழெட்டு மைல் நடக்கவேண்டும். மோட்டார் வண்டி ஓடும் சாலையை அடையவே நாலைந்து மைல். ஏறக்குறைய ஒருநாள் முழுவதும் ஆயத்தம் செய்யப்படும். இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்தாற்போல் கிளம்புவதுதான் வழக்கம். காலையிலேயே சிறுவர்கள் துணி துவைத்துக் காயப்போட்டு விடுவார்கள். அன்று மாலை செல்லப்போகிற மகோன்னத இடம் பற்றிய விவரங்களை மற்றவருக்குப் பறைசாற்றுவதில் நேரம் போகும். பெரும்பாலும் அது அறுவடை முடிந்த மாதமாகவிருக்கும்.

இரவில் அங்கு சாதாரணமாக சோறு பொங்குவது கிடையாது. தண்ணீர் ஊற்றிய மதியச்சோறுதான். பெண்டுகள் வேறு வேலைகளைக் கவனித்து விட்டுக் கிளம்புவார்கள். கிழவிகள் வருவதில்லை. அப்படி அவர்கள் வருவதாகயிருந்தாலோ, புதுமணமக்கள் யாராவதிருந்தாலோ, வில்வண்டி அமர்த்தப்படும். சிறுவர்கள் ராஜநடை போட்டு முன்னால் நடக்க, பெண்கள் பேசிக்கொண்டே தொடர்வார்கள். செண்பகராமன்புதூர் நாச்சியாரம்மாளின் மூத்த மகளை கோட்டாறு மயிலேறும் பெருமாள் பிள்ளையின் மகனுக்குத்தான் கொடுத் திருக்கிறது. அவன்தான் டிக்கெட் கொடுப்பது. அங்கே நின்று பேசி விசாரித்து, “அத்தைட்ட ஏதாம் சொல்லணுமா ?” என்று கேட்டு விட்டுத்தான் உள்ளே செல்வார்கள். படம் ஆரம்பித்திருக்கும். சிறுவர்கள் பெரும்பாலும் நின்றுகொண்டே தான் படம் பார்ப்பது. வண்டியில் சென்றால், வண்டிக்காரருக்கும் டிக்கெட் வாங்கிக் கொடுப்பார்கள். அவர் உள்ளே போனதுமே துண்டைத் தரையில் விரித்துவிடுவார்கள். பெண்களுக்கும் தரைதான். ஆனால் தனியிடம் சாமிகள் தோன்றும் போதும் தீபாராதனை காட்டப்பெறும் போதும் திரை அவர்களால் கும்பிடப்படுவதுண்டு. அப்போது அரங்கில் நிசப்தம் நிலவும். மற்ற காட்சிகளில், தாங்கள் விட்டுப்போன ஊர் சங்கதிகளைப் பேசுவார்கள். அசுவத்தமாவும், பாகவதரும் பின்னர் கண்ணாம்பாவும் பேசப்பட்டனர். இளைஞர் சிலர் சின்னப்பா, பாலையா பற்றித் தெரிந்து வைத்திருந்தனர்.

சுதந்திரம் வந்த பின்னரும் நிலைமை மாறிவிடவில்லை. ஓர் அஞ்சலகம் ஏற்பட்டது. சிறுவர்கள் படிக்க ஆரம்பித்திருந்தனர். சிலர் உயர் படிப்பிற்கு பக்கத்து டவுண் சென்றனர். அந்த ஊரை விட்டுப் போனவர்களும் அங்கு திரும்பி வராமலிருந்தவர்களும் உண்டு.

அதிசயம் - அந்த ஊரிலும் விவசாய நாகரீகம் மாறிவிட்டது. பாருங்கள்!

❑❑❑

ஆண்டிப்பிள்ளை சினிமா பார்த்தது கிடையாது. செண்பகராமன்புதூரிலுள்ள சிறு கோவிலை கவனித்துக் கொண்டார். நேராகக் கைலாசத்திலிருந்து இறங்கிவந்தது போலப் பேசுவதுண்டு.

சில திருமணங்களை நடத்தி வைத்துள்ளார். காசு எதுவும் வாங்குவதில்லை. சாப்பாட்டுக்கு நெல்வந்தது. பையன் வயலையும் தோப்பையும் கவனித்துக் கொள்கிறான். இனி சும்மாயிருப்பதே சுகம் என்று சொல்லிக்கொண்டிருந்தவருக்கு கிராமத்து அஞ்சலக அதிகாரி பொறுப்பு வந்தது. வீட்டிலிருந்து கொண்டே அதைக் கவனித்துக்கொள்ளலாம். அவர் வீடுதான் அஞ்சலகம். விட்டுவிட மனதில்லை. நேரமும் நன்றாகப் போகும். நாலு காசும் உண்டாக்கலாம். இந்த வயதில் வேறு என்ன கிடைக்கும். ஏற்றுக் கொண்டார். ஊருக்கு வரும் ஏழெட்டுக் கடிதங்களை அவர் வீட்டுக்கு வந்துதான் பெற்றுக்கொண்டார்கள். மணியார்டர், எப்போதாவது அஞ்சலட்டை விற்பதோடு எழுதியும் தர வேண்டியது அவசியம். படித்துக் காட்ட வேண்டியது இன்றியமையாத காரியம். செண்பகராமன்புதூர் இசக்கிமுத்துப் பிள்ளையும் வெள்ளமடத்திலிருக்கும் அவர் மைத்துனரும் அஞ்சலட்டை மூலம் நடத்திக் கொண்ட சண்டையில் ஆண்டிப் பிள்ளையின் பங்கு சிறிதுதான். ஆனால் பெரிதுபடுத்தப்பட்டது. சமாதானம் பண்ணிவைக்கப் பார்த்தார். நடக்கவில்லை. வெள்ள மடத்துக்காரர் செண்பகராமன்புதூர் வந்து தெருவில் நின்று, ஒரு குறிப்பிட்ட விலங்கின் பெயர் சொல்லி, அதற்குப் பிறந்தவனே என்று நாலு பேர் அறிய கேட்டபின் எதுவும் ஏலாது போயிற்று. ஆண்டிப்பிள்ளை இனி யாருக்கும் கடிதம் எழுதித் தரமாட்டேன் என்று முடிவெடுத்தார்.

ஐம்பதுகளின் மத்தியில் அவர் பெயரைத் தட்டச்சு செய்து வந்தது ஒரு கடிதம். செண்பகராமன்புதூரைப் பொறுத்தவரை அது அசாதாரணம். அது அமெரிக்க நாட்டிலிருந்து வந்திருப்பது இன்னொரு விசேடம். மிகவும் பதவிசாக ஊர்ப்பெயர் போட்டு, தென் இந்தியா என்றும் குறிப்பிடப்பட்ட அந்த முகவரி ஆண்டிப்பிள்ளைக்குத்தான்.

கடிதத்தைப் பிரிக்காது நெடுநேரம் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார் பிள்ளை. தட்டச்சில் அவரது பெயர் பளபளத்தது. பிரிப்பதற்கு முன்னரே நாலைந்து பேரிடம் காட்டியாயிற்று. பிரிப்பதிலும் ஒரு தயக்கம் உண்டு. எப்படியும் கடிதம் ஆங்கிலத்தில் தானிருக்கும். நாலுபேர் முன்பு பார்த்தால், இசகு பிசகான கேள்விகளைத் தவிர்க்க முடியாது. ஆங்கிலத்தில் பெயர்ச் சொற்களை தவிர மற்றவை சிரமத்தைக் கொடுக்கின்றன. மாலையில் டவுன் போகப் போகிறோமே அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்துவிட்டார்.

அந்தக் கடிதம் “அன்புள்ள ஐயா” என விளித்து மிக அழகாகத் தட்டச்சில் பொறிக்கப்பெற்று விளங்கியது. டவுன் நண்பர் முழுமையாகப் படித்துக் காட்டினார்.



ஆறேழு பக்கங்கள் கொண்ட அக்கடிதம் சற்றேறக்குறைய பின்வருமாறு மொழிபெயர்க்கப்படலாம்.

"எனது பெயர் ஹாப்மன். இங்கே கலிபோர்னிய மாநிலத்து ஓஜாய் பள்ளத்தாக்குப் பகுதியைச் சார்ந்தவன். முகவரியை மேலே காண்பீர்கள். வார்னர் பிரதர்ஸ் படத்தயாரிப்பு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எங்கள் ஊரான ஓஜாய் கிராமத்துக்கு வாரந்தோறும் செல்வதுண்டு. அங்கே உங்கள் பகுதியைச் சார்ந்த ஸென்புத்த சமயத்துறவி ஒருவர் (அவரை அப்படித்தான் நான் கருதுகிறேன்) தங்கி பிரசங்கங்கள் புரிவார். அதைக் கேட்க அமெரிக்கர்களோடு உங்கள் நாட்டைச் சார்ந்த பலரும் கூடுவார்கள். அந்த இடத்தில் அப்படி வந்தவர்களில் ஒருவரை நான் சந்தித்திருக்காவிட்டால் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதியிருக்க முடியாது.

அவர் பெயர் சிவசங்கரன் முத்துக்கறுப்பன். தங்களது ஊரைச் சேர்ந்தவர். செண்பகராமன் புதூரின் இயற்கை அமைப்பு பற்றியும் குணாதியசங்கள் பற்றியும் நிறையவே கூறியிருக்கிறார் (தங்களது ஊரின் பெயரைச் சரியாக உச்சரிக்கக்கூட நான் தகுதியற்றவன். பம்பாய், ஆக்ரா, டில்லி போன்ற பெயர்கள் போன்றதல்ல அது).

மலையும் வயலும் சார்ந்த உங்கள் பிரதேசத்தில் விவசாய அறிவுத்திறன் கொண்டோர் மிக அதிகம் என்றாலும், எழுதப் படிக்கத் தெரிந்தவராக தங்களைப் போன்ற இரண்டொருவர்தாம் உண்டு என்றும் கூறியுள்ளார். அப்படிப்பட்ட ஊரில் இருந்து வந்த திரு.முத்துக்கறுப்பன் தான் எனக்கு பிரஞ்சுமொழி கற்பித்தார். என் பிள்ளைகளுக்கு அவர்தாம் ஆசிரியர். அவ்வாறு பலருக்கும் அவர் ஆசிரியராக ஆனபோது, எனது வீட்டின் அறையொன்றை ஏற்பாடு செய்து கொடுத்தேன்.

முத்துக்கறுப்பன் செண்பகராமன்புதூரிலிருந்து பாண்டிச்சேரி என்ற பிரெஞ்சுப் பகுதிக்கு வந்து அங்கே தனது இளமைக் காலத்தை கல்வியில் கழித்ததாகத் தெரிகிறது. பிரஞ்சு மொழியை மிகவும் சரளமாகக் கையாளுபவர். அங்கிருந்து பாரிஸ் செல்ல அவருக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்து இரண்டு வருடங்கள் அங்கே தங்கி பின்னர் இங்கே வந்திருக்கிறார். தங்களுக்கு இது தெரிய நியாயமில்லை என்று கருதுகிறேன்.

உங்கள் நாட்டைச் சார்ந்த ஸென் துறவியைப் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா ? அவரது பிரசங்கங்களிடையே சந்தித்தபோது, முத்துக்கறுப்பன் அந்தத் துறவியிடம் கேட்ட கேள்விகளையும், பதில்களை உள்ளடக்கிக்கிக் கொண்ட எதிர்க் கேள்விகளையும் குறித்து நெடுநாள் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். பின்னாளில் அந்தப் பிரசங்கங்கட்குச் செல்வதை முத்துக்கறுப்பன் நிறுத்திவிட்டாலும், என்னுடன் பேசுவதைத் தவிர்க்கவில்லை. சனி-ஞாயிறு நாள்களில் தவறாது ஓஜாய் செல்வது வழக்கம்.


நான் பணியாற்றிவந்த நிறுவனம் தயாரித்த படமொன்றில் நடித்தவர் ஜேம்ஸ் டீன். அந்த நடிகரைப் பற்றி நீங்கள் அறிந்து கொண்டிருக்கிறீர்களா என்று தெரியாது. இந்த நூற்றாண்டின் சிறந்த நடிகர் என்று சிலர் கூறுகிறார்கள். இரண்டுநாள் முன்பு அவர்-ஜேம்ஸ் டீன் காலமாகிவிட்டார், ஒரு கார் விபத்தில்.

நான் ஜேம்ஸ் டீன் பற்றித் தங்களுக்கு எழுதுவது குறித்து வியப்படையக் கூடும். அதற்கு ஒரு காரணம் உண்டு. இந்த ஜேம்ஸ் டீன் போலவே முத்துக் கறுப்பன் அவர்களும் இரண்டு நாள் முன்பு ஒரு விபத்தில் காலமாகிவிட்டார்.

ஐயா-முத்துக்கறுப்பன் தமது டைரியில் குறிப்பிட்டுள்ளபடி தங்களது முகவரியைக் கண்டு, அவர் தங்களைப் பற்றி கடைசி நாளில் என்னிடம் சொன்னபடி இதை எழுதுகிறேன்.

"ஈடனின் கிழக்கு" என்ற ஜேம்ஸ் டீனின் படத்தைப் பார்த்து விட்டு முத்துக்கறுப்பன் "இந்தப் படத்துக்குப் பிறகு இந்த டீன் சினிமாவில் நடிக்கக்கூடாது" என்று சொன்னது எனக்கு ஒருவகையில் வியப்பைத் தரவில்லை. இவ்வாறு அவர் சொன்னதைப் போல் இப்படி பகிரங்கமாகக் கூறமுடியாவிட்டாலுங்கூட, காரணமில்லாமலேயே எனக்கும் அதே அபிப்ராயம் இருந்தது. வேறொன்றும் அவர் கூறியது உண்டு. "இந்த ஜேம்ஸ் டீன் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆள்" என்பதுதான் அது. எனக்கு மிகுந்த வியப்பை அளித்த வாசகம். ஏனெனில் இதே போன்று ஸ்டியோவில் ஒருநாள் ஜேம்ஸ் டீனும் இதைக்

**கடிதம் ஆங்கிலத்தில் தானிருக்கும். நாலுபேர் முன்பு பார்த்தால், இசகு பிசகான கேள்விகளைத் தவிர்க்க முடியாது. ஆங்கிலத்தில் பெயர்ச் சொற்களைத் தவிர மற்றவை சிரமத்தைக் கொடுக்கின்றன.**



கூறியிருக்கிறார். ஒரு பிரமிப்பான நிலையில் எனக்கு இந்த இருவரையும் அறிமுகம் செய்துவைப்பது நல்லதெனத் தோன்றியது. அவ்வாறு நடந்து ஒருமணி நேரம் அவர்கள் முத்துக்கறுப்பனும் ஜேம்ஸ் டீனும்-சுமார் ஒரு மணிநேரம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தனர். அதன் பிறகு கடைசிவரை இருவரும் பேசிக்கொள்ளவோ பார்த்துக் கொள்ளவோ இல்லை. ஜேம்ஸ் டீன் விபத்தில் உயிர் துறந்தபோது, "அசுரன்" என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அந்தப் படம் இன்னும் வெளிவரவில்லை.

ஒஜாய் கிராமத்தில் இருக்கும் போது, வேறு சிலவற்றையும் முத்துக்கறுப்பன் கூறியிருக்கிறார். அவை நான் கேட்ட சில கேள்விகளுக்குப் பதிலாக அமைந்தன. ஆனாலும் ஜேம்ஸ் டீனிடம் என்ன பேசினார் என்கிற விவரம் தெரியவில்லை.

இந்த ஜேம்ஸ் டீன் வான்வெளியில் மிதந்து கொண்டிருக்கிற மனிதன் இனி நடிக்க வேண்டியது கிடையாது.

வானவெளியில் கலத்தல், நட்சத்திரங்களைப் பார்த்தல் எல்லாம் எனது அளவிற்கு அப்பாற்பட்ட விஷயம் என்று சொல்லவேண்டும். அதைப்பற்றியும் சிறிது சொன்னார்.

"இதையெல்லாம் புரிந்து கொண்டுதான் ஆகவேண்டும் என்பது கிடையாது. அப்படிப்பட்ட விஷயங்களாக சில இருந்து கொண்டுதானிருக்கும். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் பிரதேசத்தில் ஒரு ஞானியால் இது பற்றித் தெளிவாகச் சொல்ல முடிந்திருக்கிறது. சமீபத்தில் ருஷ்யக் கவிஞன் ஒருவனும் இதுபற்றிக் கொஞ்சம் பாடிவிட்டுச் செத்துப்போனான். எப்போதாவது யாராவது எங்கோ அவ்வாறு ஆகிக்கொண்டுதான் இருக்கின்றனர். இதற்கெல்லாம் அந்த நாடு - இந்தப் பிரதேசம் என்று கிடையாது அல்லவா?"

மேற்படி விவரங்கள் எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் அலெக்கின்னஸ் என்ற பிரிட்டிஷ் நடிகர் "இந்தக் காரில் பயணம் செய்யாதீர்கள்" என்று ஜேம்ஸ் டீனிடம் சொன்னது மட்டும் பத்திரிகை மூலமாகப் பலருக்குத் தெரிந்திருக்கிறது.

கார் விபத்தில் ஜேம்ஸ் டீன் காலமாகிவிட்டார். இதை முத்துக்கறுப்பனிடம் தெரிவித்தபோது, அவர் என்னிடம் சொன்னதுதான் நான் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுத மூல காரணம். அவர் கூறியது-

"நான் எங்க ஊர் ஆண்டிப் பிள்ளையிடம் ஆறு ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு பாண்டிச்சேரி புறப்பட்டுச்சென்றேன். இதுநாள் வரை அதைப் பற்றிய நினைவு இல்லாமலேயே இருந்துவிட்டேன். என்ன காரணமென்று தெரியவில்லை. இப்போது ஜேம்ஸ் டீன் பற்றி நீங்கள் சொன்னது அதை நினைவூட்டுகிறது. நான் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். அதற்குரிய நாள் இது" என்று கூறி அவரது டைரியை என்னிடம் தந்து "நான் வெளியே போகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றவர்தாம். விபத்தில் காலமானது பின்னர் தெரிந்தது.

ஐயா-முத்துக்கறுப்பன் அவர்கள் தமது டைரியில் குறிப்பிட்ட முகவரிக்கு இதை நான் எழுதுகிறேன். இக்கடிதம் கிடைத்தவுடன் பதில் எழுதுங்கள். இங்கே ஒரு ஜோடி ஆடை உள்ளது. தவிர வேட்டி என்று முத்துக்கறுப்பன் அவர்களால் அழைக்கப்பட்ட இரு ஆடைகளும் உள்ளன. அந்த வேட்டியை இடுப்பில் சுற்றிக்கொண்டு ஒஜாய் கிராமத்தில் நடந்து வந்ததை என்பிள்ளைகள் முதலில் அதிசயத்துடன் பார்த்து பின்னர் பழகிவிட்டனர். அவற்றை எல்லாம் தங்களுக்கு அனுப்பிவிடலாமா என்பதை அருள்கூர்ந்து தெரிவியுங்கள்.

வேறு எதையும் எழுத எனக்குத் தெரியவில்லை".

❑❑❑

"அட! நம்ம சிவசங்கர அண்ணாச்சி மகனா!" என்று ஒருகண நினைவில் ஆழ்ந்தார் ஆண்டிப்பிள்ளை. கடிதத்தில் கூறப்பட்ட பழையகால விஷயங்கள் ஞாபகத்தில் இல்லாது போகவும், ஒரு கணம் கடுங்கோபம் ஏற்பட்டது. இருந்திருந்து எழுவெடுப்பான் கிழிஞ்ச வேட்டியைத் தானா இங்க அனுப்பணும்! பூசை செய்யவா?"

முனகிக் கொண்டபோது, "என்ன அண்ணாச்சி-கடிதத்துக்கு பதில் அனுப்பனுமில்லையா?" என்று நண்பர் விசாரித்தார். ஆனால் அதற்கான அஞ்சல் தலையின் விலையைக் கணக்கிட்டுப் பார்த்தால் கதி கலங்கிற்று.

எனவே கடிதத்தைச் சுருட்டி மடக்கியவாறே நண்பரிடம் விடைபெற்று செண்பகராமன்புதூர் சாலையில் மெதுவாக நடக்க ஆரம்பித்தார். கிட்டத்தட்ட ஊர் எல்லையில் அதைக் கிழித்து வீசி எறிந்தார். ★

## அன்பு

அன்பு மட்டுமே தீர்வு-
அன்பு மட்டுமே மருந்து-
அன்பு மட்டுமே உயிர்த்தன்மை
புன்னகை மட்டுமே போதும்-
சருகுகளையும் மலர்களாக்கும் சக்தி
அதற்கு மட்டுமே உண்டு!

- வெ. இறையன்பு

# கடலூர் மாவட்டம்:
# சுதந்திரப் போராட்ட வீரர்கள்

இந்திய சுதந்திரத்திருநாள் பொன்விழா கொண்டாடிவரும் நாம் - நாடு சுதந்திரம் பெறப் பாடுபட்ட தியாகிகளை நினைவுகூர்ந்து பாராட்டும் கடமை உடையவர்களாக இருக்கிறோம். சுதந்திரப்போரில் ஈடுபட்டவர்கள் தமிழகத்தில் உள்ள அத்தனை மாவட்டங்களிலும் இருக்கிறார்கள்; அல்லது இருந்து புகழ் நிறுத்தி மறைந்துவிட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளை அறிவிக்கும் பகுதியே இது. அவ்வகையில் முதன்முதலில் இப்பகுதியில் இடம் பெறுவோர் கடலூர் மாவட்டச் சுதந்திரப் போராட்ட வீரர்கள்:

**அமரர் திரு.எம்.வி.சுதர்சனம் நாயுடு**

தந்தை : வரதராஜுலு நாயுடு
தாயார் : பங்கஜம் அம்மாள்
தோற்றம் : 13-5-1895
முகவரி : சுதர்சனம் வீதி, மஞ்சக்குப்பம்



தமிழ் நாட்டு முதுபெரும் தியாகிகளில் ஒருவர். ரத்தினம், வைரம் விற்ற செல்வர். நாட்டுப் பற்றால் வீட்டை மறந்து பொருள் ஈட்டல் மறந்து காந்தி வழி நின்று பணிபுரிந்தவர். வீரத்திருவிழிப் பார்வை! வைரம் பாய்ந்து, இளகிய நெஞ்சம்! நாலு முழம் அரை வேட்டி! மேலுக்கோர் சிறுதுண்டு! கதர் அன்றிக் கரம் தொடாது! அழகிய நரைத் தாடி! வேத முனிவர்களை நினைவுபடுத்தும் திருஉருவம்.

1916-ல் விடுதலைக் களத்தில் காலடி வைத்தார். 1920,21-ல் ''கிலாபத்'' இயக்கத்தில் 15 மாதங்கள் தண்டனை; ரூ.20 அபராதம் (கட்டத்தவறினால்) மேலும் சிறை வாசம். தண்டனையை ஏற்றுக் கடலூர் மத்திய சிறையில் இருந்து 28-2-1922-ல் விடுதலையானார்.

1930-ல் உப்புப் போர்; கடலூரில் கைதாகி 13-5-1930-ல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆறுமாத தண்டனையும் ரூ.250 அபராதமும், கட்டத்தவறினால் 6 வார தண்டனையும் சேர்த்து விதிக்கப்பெற்று 25-5-1930 வரை கடலூர் மத்திய சிறையிலும், 12-11-1930 வரை சென்னை மத்திய சிறையிலும், 24-12-1930 வரை பெல்லாரி சிறையிலும் வைத்து விடுவிக்கப்பட்டார். 1932-ல் ஜவுளிக்கடை, கள்ளுக்கடை மறியலில் கடலூரில் கைதாகி ஒன்பது மாத தண்டனை விதிக்கப்பட்டுசென்னைச் சிறையில் இருந்தார். 1942-ல் ஆகஸ்டுப் புரட்சியில் 12-9-1942-ல் கைது செய்யப்பட்டு பாதுகாப்புக் கைதியாக 30-9-1943 வரை தஞ்சை சிறையிலும், 7-12-1944 வரை வேலூர் சிறையிலுமாக இரண்டு ஆண்டுகளும், மூன்று மாதங்களும் இருந்து விடுதலையானார்.

தென்னார்க்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார். 1956-61-ல் சென்னை மேல்சபை உறுப்பினராக இருந்தார். செல்வங்களைத் தியாகம் செய்து தியாகங்களைச் செல்வங்களாகப் பெற்று முதிர்ந்த வயதில் தள்ளாமையுடன் வாழ்ந்தார்.

புதுடில்லியில், பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம் தாமிரப்பத்திர விருது நேரில் பெற்றார். ஓய்வூதியம் மாதம் ரூ.200 பெற்றுவந்தார்.

இத்தகைய தியாகி எம்.வி.சுதர்சனம் அவர்கள் 22.3.1978-ல் இயற்கை எய்தினார்.

★★★

**அமரர்திரு.ரா.முருகப்படையாட்சி**

தந்தை : ராமுப் படையாட்சி
மனைவி : அஞ்சலையம்மாள்
தோற்றம் : 1873



சுதந்திர இயக்கத்தில் 1921-ல் பற்றுக்கொண்டார். 1927-ல் சென்னை நீல் சிலை சத்தியாக்கிரகத்தில் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு ஒரு மாதம் தண்டனையும், 1932-ல் மறியல் போராட்டங்களில் கைதாகி ஆறு மாத தண்டனையும், விதிக்கப்பட்டு சென்னை கடலூர், திருச்சி, சிறைகளில் இருந்தார். தியாகி அஞ்சலை அம்மாளின் கணவரான திரு.ரா.முருகப்படையாட்சி அவர்கள் 22-6-1971-ல் அமரரானார்.

★★★

**அமரர் திருமதி மு. அஞ்சலையம்மாள்**

கணவர் : ரா.முருகப்படையாட்சி
தாயார் : அம்மாக்கண்ணு அம்மாள்
தோற்றம் : 1890
முகவரி : 38, காந்தி பார்க் வீதி, கடலூர்-3.



கல்வியில் குறைந்து - அறிவிலும் துணிவிலும், அனுபவத்திலும் முதிர்ந்த இந்த அஞ்சலையம்மாள், தென்னார்க்காடு மாவட்டத்தின் வேலு நாச்சியாவார். 1921-ல் இந்திய சுதந்திரப் போர் அரங்கில் இறங்கினார். 1927-ல் நீலன் சிலையகற்றும் போரில் ஒரு ஆண்டு தண்டனை - சென்னையில் 1931-ல் உப்புக் காய்ச்சும் போராட்டத்தில் சிறைத்தண்டனை-கடலூரில்.

1933-ல் மறியல் போரில் மூன்று மாத தண்டனை - கடலூரில். 1940-ல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் முதலில் 6 மாதம், 1941-ல் மீண்டும் சிறை; 1943-ல் 8 மாதம் 2 வாரம் தண்டனையும் அளிக்கப்பட்டது. ஆக மொத்தம் ஏழு போராட்டங்களில் பங்கேற்று நான்கு ஆண்டு ஐந்தரை மாதங்கள் சிறைத்தண்டனை பெற்று கடலூர், திருச்சி, வேலூர், பெல்லாரி சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்.

தமிழ்நாட்டில் முதன்முதல் சத்யாக்கிரகத்தில் சிறை புகுந்த பெண்கள் எனக்கூறும் பெருமைக்குரியவர்களில் ஒருவர் இந்த அஞ்சலையம்மாள்.

திருமதி அஞ்சலையம்மாள் அவர்கள் ஜில்லா போர்டு உறுப்பினராகவும், சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கடலூரில் அஞ்சலையம்மாளைத் தெரியாத தேசபக்தர் இருக்கமாட்டார். குள்ளமான. ஆனால் பருமனான உருவம். நிறைய மஞ்சள் பூசி, பெரிய குங்குமப் பொட்டு வைத்து மங்களக் களைபொலியும் முகம். மாறாத புன்முறுவல். தடித்த கதர்ச்சேலை. நிமிர்ந்த நன்னடை; நேர் கொண்ட பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியின் மணம் வீசும் பேச்சு. இவரைப் பார்க்க கிராமப் பெண்கள் கூட்டம், படை படையாக வரும். மெல்லிய குரலில், கிராமிய நடையில் இனிமையாகப் பேசுவார். இவர் பேச்சில் பெண்கள் ஊக்குவிக்கப்பட்டு தேசபக்தி கொண்டவர்களாகி விடுவர். எந்த இடத்திலும், எந்த நிலையிலும் எந்த அதிகாரி முன்னரும் கலங்காது நின்று போராடும் வீராங்கனையாவார். இவருடைய கணவர் முருகப் படையாட்சியும் தீவிர தேசபக்தத் தியாகி. எளிய கிராம விவசாயி. அஞ்சாமையும், கடமையும் இயல்பாகக் கொண்டவர். இவர்கள் மகளுக்கு "லீலாவதி" என்ற இனிய பெயரைக் காந்தி மகான் வைத்தார். இந்தப் பெண் வார்தா ஆசிரமத்தில் இருந்தவர்.

முருகப் படையாட்சி 1927 வரை குடிப்பழக்கம் உள்ளவராக இருந்தார். சூதாட்டத்திலும் ஈடுபடுவோர். இவர் 1927-ல் காந்திஜி கெடில நதிக்கரையில் பேசியதைக் கேட்டு அன்றே குடியையும், சூதையும் இனித் தொடுவதில்லை என்று பிரமாணம் செய்து புது மனிதராக மாறி சத்யாக்கிரகியானார்.

அஞ்சலையம்மாள் குடும்பம் முழுதுமே தேச விடுதலையில் ஈடுபட்டுப் பாடுபட்ட தியாகக் குடும்பம். அந்த அம்மை கருவுற்றிருக்கும்போதே சிறை புகுந்தார். பேறு காலத்திற்கு விடுதலை தரவும் வீடுவந்து ஆண் குழந்தை பெற்று அவனுக்கு ஜெயவீரன் என்ற பெயருமிட்டு, மீண்டும் கைக்குழந்தையுடன் சிறைக்குள் வந்தார்.

லீலாவதி ஒன்பது வயதுப் பெண்ணாகத் தாயுடன் நீல்சிலை சத்யாக்கிரகத்தில் போருக்கு இறங்கிவிட்டாள். இந்தச் சிறுமிக்கு 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

கள்ளுக்கடை இருக்குமிடமெல்லாம் அச்சிட்ட, குடியை கைவிடத் தூண்டும் துண்டறிக்கை வழங்கிக்கொண்டே அஞ்சலையம்மாள் மறியல் செய்வார்.

சென்னையில் தடைவிதிக்கப்பட்ட காங்கிரஸ் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கி ஒரு பெண்கள் படையுடன் அஞ்சலையம்மாள் கைதானார். இந்த லீலாவதியின் கணவர் ஜமதக்னி ஒரு தியாகி. மிகச் சிறந்த அறிவாளி. இந்திப்பண்டிதர். தமிழ்நாட்டின் விடுதலைச் சரித்திரத்தில் இந்தக் குடும்பம் தனது பெரும்பணிகளால் ஒரு முக்கிய இடம் பெறுவதாகும்.

தேச விடுதலை இயக்கத்தில் தன்னலம் மறந்து பாடுபட்ட இந்தக் குடும்பத்தைப் பயங்கர வறுமை வாட்டி வதைத்தது. இவர்களின் வீடு கடனால் ஏலத்திற்கு வந்து விட்டது. ஒரு புண்ணியவான் கடனை அடைத்து வீட்டைக் காப்பாற்றிக் கொடுத்தார். தியாக வேள்வியில் புடமிடப்பட்டுப் பிரகாசிக்கும் இந்த வரலாற்றுக் குடும்பத்து மகனானவனும் குழந்தைப் பருவத்தில் சிறையில் பால்குடித்துத் தேசபக்தி உடம்பில் ஊறிவளர்ந்தவனுமான ஜெயவீரன் இன்று நம்மிடையில் இருக்கிறான்.

திருமதி அஞ்சலையம்மாள் அவர்கள் 20.2.1961-ல் அமரரானார்.

★★★

## அமரர் திரு.எஸ்.ஏ. தெய்வநாயக ஐயா

தந்தை : ஆராவமுது ஐயா
முகவரி : பாடலீஸ்வரன் கோவில் வீதி,
திருப்பாதிரிப்புலியூர்.




புகழ் பெற்ற ஐயா அவர்கள் சிறுவந்தாட்டில் பிறந்தார். பண்ணுருட்டியில் தேசீய இயக்கத்தில் கலந்து வாழ்ந்தார். ஆங்கிலம், தமிழ் நன்கு தெரிந்தவர். 1921-ல் சுதந்திரப் புரட்சியில் ஈடுபட்டார். 1921-ல் ஒத்துழையாமை இயக்கத்தில் ஆறு மாதங்களும், 1930-ல் உப்புப் போராட்டத்தில் ஒன்பது மாதங்களும், 1932-ல் அன்னியத் துணிக்கடை மறியல் போராட்டங்களில் சென்னையில் மூன்றாவது சர்வாதிகாரியாக இருந்து போராட்டத்தை நடத்தியதில் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு மூன்று மாதங்கள் தண்டனை விதிக்கப்பட்டும் 1942-ல் ஆகஸ்டு புரட்சியில் 1943 அக்டோபர் முதல் தேதி கைது செய்யப்பட்டுப் பாதுகாப்புக் கைதியாக 1944 டிசம்பர் 7-ம் தேதி வரை வைகைப்பட்டு சிறைத் தண்டனையையும் சேர்த்து மூன்று ஆண்டு, 8 மாதம் ஆறு நாட்கள் சென்னை, திருச்சி, கடலூர், தஞ்சை, வேலூர், அலிபுரம் சிறைகளில் இருந்தார்.

1946-52 சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். தென்னார்க்காடு ஜில்லா போர்டு துணைத் தலைவராக இருந்தார். தென்னார்க்காடு மாவட்ட காங்கிரஸ் தலைவராக திரு.கே.எஸ்.வி.ரெட்டியார் இருந்தபொழுது பல ஆண்டுகள் செயலாளராகப் பணிபுரிந்தார். கட்சி நிர்வாகப் பணியில் ஒப்பில்லாத திறமைசாலி. புரட்சிக் கனலின் வீச்சை இவர் பேச்சில் காணலாம்.

★★★

## அமரர் திரு.நயினியப்பப் பிள்ளை

தந்தை : தேவநாயகம் பிள்ளை
தோற்றம் : 1896. ஊர் : சிதம்பரம்



தமிழ்நாடே அறிந்த சிறந்த தேசபக்தர். தென்னார்க்காடு மாவட்டத்தில் இவர் போகாத; சொற்பொழிவு செய்யாத கிராமமே கிடையாது. மெலிந்த உருவம். எஃகுப் போன்றே நெஞ்சம். எளிமையும், இனிமையும் கொண்ட மேடைப்பேச்சு. சுதந்திர வெறி.

# புன்னகையே பொன்னகை !

- கவிஞர் கா.வேழவேந்தன்




பொன்னகை மின்னும்; காண்போர்
பூரிப்பால் நகைப்ப துண்டா?
புன்னகை மலர்கள் கண்டால்
பொலிவோடு சிரிக்கின் றோம்நாம்!
'அன்னியம்' தன்னைவி ரட்டி
'அன்பு'க்கே பாலம் கட்டும்
'புன்னகை' இருக்கும்போது
'பொன்னகை' தேடு வானேன்?



விலங்கெலாம் சிரிப்ப துண்டா?
விழுமிய மனிதன் நித்தம்
கலகலவெனச்சி ரித்தால்
காணும்நோய் அண்டா தாமே!
உலகத்துத் துன்பம் என்னும்
'ஓநா'யை விரட்டு கின்ற
நலம்சேர்க்கும் - 'காவல் வேலி'
நயமான சிரிப்பே யன்றோ?

பூக்கின்ற மலரோ ஓர்நாள்
புன்னகை யோடு வாழ்ந்து,
காக்கின்ற தேனைத் தந்து,
கன்னிக்கும் மகிழ்ச்சி தந்து,
ஆக்கங்கள் சேர்க்கும் என்றால்
ஆண்டாண்டாய் வாழும் நாமும்
தீக்கனல் சினத்தைத் தீய்க்கும்
சிரிப்பாலே 'இன்பம்' காண்போம்!



நிலையிலும் கலங்காது போராடும் ஊக்கம். இந்த மாவட்டத்தில் சுதந்திரக் கனலை வளர்த்த 'தியாகஜோதிகளில்' தனிப்புகழ் பெற்ற ஒருவர். வாழ்வைத் தியாக வேள்வியாக்கிய இவர் 1928-ல் மதுக்கடை மறியலில் 9 மாதங்களும், 1930 உப்புப் போரில் ஒரு ஆண்டும் 1932-ல் ஒத்துழையாமைப் போரில் ஆறு மாதங்களும், தண்டனைகள் பெற்று, கடலூர், மதுரை, சென்னை, அலிபுரம், திருச்சி சிறைகளில் இருந்துள்ளார். ரிமாண்டு பலமுறை. மனைவி குஞ்சம்மாள் மாதம் ரூ.100 ஒய்வு ஊதியம் பெறுகிறார்.

திரு.நயினியப்பப் பிள்ளை அவர்கள் 23.4.1959-ல் இயற்கை எய்தினார்.

> **யா**ர் எந்தக் கருத்தைச் சொன்னாலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுவது என்றால், மனிதன் வளர்ச்சி பெறவே முடியாது; ஆகவே, யார் சொன்னாலும் கேட்டுக்கொண்டு, அறிவைக்கொண்டு அதுபற்றிச் சிந்தித்து, நமக்குச் 'சரி' என்று பட்டதை ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க முயற்சி செய்யுங்கள்!
>
> - தந்தை பெரியார்

**அமரரர் திரு.ஜெ.வடிவேல் பத்தர்**

தந்தை : ஜெகந்நாதப் பத்தர்

மனைவி : நாகம்மாள்

ஊர் : மஞ்சக்குப்பம்



**இ**வரும் பழம்பெரும் தியாகிகளில் ஒருவர். 1920-ல் விடுதலைப் போரில் இறங்கினார். 1930-ல் உப்புப் போராட்டத்தில் ஆறு மாதங்களும், 1932-ல் மறியல் போராட்டங்களில் ஆறு மாதங்களும் தண்டிக்கப்பட்டார். 1941 தனிநபர் இயக்கத்தில் யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்துடனே பாத யாத்திரையாக இந்திய நாட்டின் வடபகுதிகளிளெல்லாம் சுற்றி வந்தார்.

1942-ல் ஆகஸ்டு புரட்சியில் 1-10-1943-ல் கைதாகி 7-12-1944 வரை பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டார். பெல்லாரி, அலிபுரம், திருச்சி, சென்னை, வேலூர், தஞ்சை சிறைகளில் இரண்டு ஆண்டு இரண்டு மாதங்கள் கழித்துள்ளார். திரு.ஜெ.வடிவேல்பத்தர் அவர்கள், அண்மையில்தான் மறைந்தார்.

# நல்ல தமிழ் அறிந்திடுவோம் !

| | |
|---|---|
| Aback | திகைப்புற்று, வியப்புற்று |
| Abdication | துறத்தல், துறவு |
| Abhor | வெறு; தள்ளு; ஒதுக்கு |
| Abjection | இழிநிலை; இழிதகவு |
| Ablation | நீக்கம்; தேய்மானம் |
| Ablaze | கொழுந்துவிட்டு எரிகின்ற; சுடர்விடுகின்ற |
| Ablush | நாணமுற்று; நாணி |
| Above mentioned | மேற்குறிப்பிட்ட |
| Abovesaid | மேற்கூறிய |
| Absentee Land Lord | செல்லா நிலக்கிழார் |
| Absolute authority | முழு அதிகாரம் பெற்ற |
| Abstentation | தவிர்த்திருத்தல், நடுநிலை தாங்குதல் |
| Academic Qualification | கல்வித் தகுதி |
| Accite | சான்று காட்டு |
| Accord priority | முந்துரிமை அளி |
| Accordingly | அவ்வண்ணமே; அதன்படி |
| Accountability | கணக்குப் பொறுப்பு; கணக்குக் காட்டும் பொறுப்பு; பொறுப்புடைமை |
| Account Payee | கணக்காளரே தொகை பெறுபவர்; கணக்குடையவர், கணக்குரியவர், கணக்குடைய தொகைப் பெறுநர் |
| Account slip | கணக்குச் சீட்டு |
| Accrescent | மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கிற |
| Acedia | கவனமின்மை; மறைப்பு |
| Achromatic | வண்ணம் இல்லாத; நிறம் காட்டாத |
| Acid oil | சோப்பு எண்ணெய் |
| Acisimeter | அமிலமானி; காடிமானி |
| Acoustic | ஒசை ஆய்வியல் துறை; செவிப்புலன் இயைபு |
| Acquiscence | தடைச் சொல்லின்றி உடன்படுதல் |
| Acrimonious | காரசாரமான; கடுமையான |
| Acromatic (Acromatical) | வாய்மொழியான; எழுத்தில் வராததான |
| Acted in service | பணியிலிருந்தார் |
| Acting in good faith | நன்னம்பிக்கையுடன் செயலாற்றுதல் |
| Acting service | மாற்றாள் பணி |
| Active consideration | தீவிர கவனித்தல்; தீவிர கருதுபாட்டில் |
| Active ingredients | செயல் திறன்; ஆக்கக் கூறுகள் |
| Accupuncture | நுண்துளை (குத்தூசி) மருத்துவம் |
| Add back | பிற்சேர்க்கை |
| Addict | வழக்கமாக்கு; பழக்கத்தில் தோய்; கெட்ட பழக்கத்திற்கு அடிமை; தீராப் பழக்கம் |
| Addiction | தீய பழக்கத்திற்கு அடிமையாதல் |
| Additional Post | கூடுதல் பதவியிடம் |
| Addressograph | முகவரி வரைதல் |
| Adherence of due dates | உரிய நாளைக் கடைப்பிடித்தல், உரிய நாளில் |
| Adhoc Payment | தற்காலிகப்பணக் கொடுப்பு, குறிப்பிட்ட நோக்கத்திற்கான பணக்கொடுப்பு |
| Adjure | ஆணை வழிப்படுத்து |
| Adjustment by transfer | மாற்றிச் சரிக்கட்டல் |
| Adjustment entries | சரிக்கட்டுப் பதிவுகள் |
| Administrative Tribunal | நிருவாகத் தீர்ப்பாயம் |
| Adult Literacy | முதியோர் எழுத்தறிவு |
| Adultery | ஒழுக்கக் கேடு; கூடா ஒழுக்கம் |
| Advance Kar | முன்கார் பருவம் |
| Advancement | உயர்வு; மேம்பாடு; முன்னேற்றம் |
| Adverse effect | எதிர் விளைவு |
| Aegis | சார்பு; ஆதரவு |
| Aesthetic arts | கவின் கலை |
| Affection | பாசம்; உள்ளன்பு; பற்றாசை |
| Afflict | அல்லற்படுத்து; துயருறுத்து |
| Affray | கலவரம்; அமைதி குலை |
| Afore hand | முன்னதாக |
| Afore mentioned | மேற்கூறிய |
| Afore thought | முன் கருதப்பட்ட, முற்சிந்தனை, முற்கருத்து |
| After all | மொத்தத்தில் எப்படியிருந்தாலும் |
| Agate | வழி தவறி |
| Age group | அகவைப் பிரிவு |
| Ageing | முதுமைப்படுதல்; முதிர்ச்சி |

- தமிழ் வளர்ச்சித்துறை தொகுப்பிலிருந்து...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார்கள். முதலிலே அறிவித்திருந்தால் ஏற்கெனவே இந்தக் குழு கூடி, எந்தெந்த அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்பது இந்த மாமன்றத்திலேகூட வைக்கப்பட்டு இருக்க முடியும்.

அரசு எல்லாவற்றிலும் தாமதமாக இருக்கிறது என்று குறை சொல்கிறவர்கள், அவர்கள் எப்படி தாமதமாக இருந்தார்கள் என்பதை மாத்திரம் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தெந்தக் கட்சிகள் வரவில்லை என்றெல்லாம் சொல்லி நான் குறிப்பிட்டு, எந்தக்கட்சியையும் சுட்டிக்காட்டி, குறைசொல்ல விரும்பவில்லை. விரும்பாத காரணத்தால் இந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு முதலமைச்சர் விட்டுவிட்டாரே என்பதை உணர்ந்து பார்த்து அந்தக் கட்சிகளுடைய தலைவர்கள் உடனடியாக அந்தப் பெயர்களை, நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாப் பெயர்களும் எம்.எல்.ஏ.பெயர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று இல்லை. ஒரு கட்சிக்கு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி இருப்பாரேயானால் அந்தக் கட்சியிலுள்ள எம்.எல்.ஏக்கள் அல்லாதவர்கள்கூட, ஆனால் பஞ்சாயத்திலோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ அல்லது உள்ளாட்சி மன்றங்கள் எதிலும் இடம் பெறாதவர்களாக இருந்து, பொதுவாக இந்த நிலையை ஆராயக்கூடியவர்கள் அதிலே அனுபவம் பெற்றவர்கள், அவர்களுடைய பெயர்களை அதிலே இணைத்தால்-இப்போது எம்.எல்.ஏ.க்கள் பெயர்களைக் கொடுத்திருந்தால் அவர்கள்கூட மாற்றிக்கொள்ளலாம், இந்தக் குழு கூடுவதற்கு முன்பாக அந்த வகையிலே இந்தக்குழு அமைந்து என்னென்ன அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்ற முடிவை எடுக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### ஒரு குறிக்கோளை ஒரு லட்சியத்தை அடைய சாத்விகமான அணுகுமுறை தேவை

இங்கே நம்முடைய உறுப்பினர்-குறிப்பாக கிருஷ்ணசாமி போன்றவர்கள் பேசும்போது-சமத்துவம் இல்லா ஒரு சூழ்நிலை-சுதந்திர இந்தியாவில் பொன்விழா கொண்டாடும் நேரத்திலேகூட இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி வேதனையைத் தெரிவித்துக் கொண்டார்கள். அந்த வேதனை இந்த மாமன்றத்தில் இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும், எல்லா கட்சித்தலைவர்களுக்கும் இருக்கின்றது.

ஒரு குறிக்கோளை, ஒரு இலட்சியத்தை அடைய வேண்டும் என்கிறபோது, அதற்கு, சில அணுகுமுறைகள் இருக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அந்த அணுகுமுறையிலே, அதிகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் முரட்டுத்தனமாக, மூர்க்கத்தனமாக, ஆர்வக்கோளாறு காரணமாக அவசரம் காட்டினால், அந்த அணுகுமுறை நிச்சயமாக வெற்றியைத் தராது.

அந்த அணுகுமுறையை, சாத்வீகமாக, அதேநேரத்தில் உறுதியோடு-மெல்ல மெல்ல, நிதானமாக, அதேநேரத்தில் நெஞ்சழுத்தத்தோடு அந்தக் காரியத்தை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சித்தலைவர்களும் நிறைவேற்றியாக வேண்டும். அதிலே மாறுபாடான கருத்து இந்த அரசுக்கு இல்லை. இந்த அரசை நடத்திச் செல்கின்ற என்னைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே நான் எந்த அளவிற்குத் தொடர்புடையவன்-எந்த அளவிற்கு அவர்களுடைய நன்மை தீமைகளில் எனக்கு அக்கறை உண்டு என்பதை மாமன்றத்திலே இருக்கின்ற யாரும் அறியாதவர்கள் அல்ல.

கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே என்னைப் பாராட்டினார்; ஒரு துணைவேந்தரை அவருடைய சமுதாயத்திலிருந்து நியமித்துவிட்டோம் என்பதற்காகப் பாராட்டினார். இன்றல்ல; இன்றைக்குத் துணைவேந்தர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது மாத்திரமல்ல; தமிழ்நாடு தேர்வாணைக் கமிஷனின் தலைவரும், இந்த ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல; என்னுடைய அந்தரங்கச் செயலாளர்களிலே, மூத்தவராக இருக்கின்ற அதிகாரியும், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

### எல்லா மட்டத்திலும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதே இவ்வாட்சியின் இலட்சியம்

இன்னும் சொல்லப்போனால், சென்னை உயர்நீதிமன்றத்தின் நூற்றாண்டுக்கால வரலாற்றில் முதன்முதலாக ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நீதிபதி அமர்ந்ததும், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலேதான் என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது, ஒரு டி.ஜி.பி.யாக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் வரவேண்டுமென்று, திரு.துரை அவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்! அதையெல்லாம் நண்பர் கிருஷ்ணசாமி மறந்திருக்கமாட்டார். இருந்தாலும்கூட இன்றைக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்; பாராட்டு தெரிவித்தார்.

தெரிவித்துவிட்டு, இன்னமும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற சில வேதனைகளைச் சுட்டிக் காட்டினார். அதை அவர் மாத்திரமல்ல; எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? இந்திய தேசிய லீக் கட்சிக்குத் தெரியாதா? பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தெரியாதா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா?எல்லாக்கட்சிகளுக்கும் தெரிந்த விஷயம்தான்-எல்லாரும் வேதனைப்படுகின்ற விஷயந்தான் இது -

நான் ஒரு புள்ளி விவரம் எடுக்கச் சொன்னேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற - சற்றொப்ப 58 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் ஆயிரம் கிராமங்களிலாவது டீக்கடைகளில் இரண்டு டம்ப்ளர்களை வைத்து, டீ வழங்குகின்ற அந்தக் கொடிய பழக்கம் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காகத் தான் அண்மையிலே அரசாங்கத்தின் சார்பாக வெளியிடப்பட்ட விளம்பரங்களை நீங்கள் கண்டிருக்கக்கூடும். அவர் குறிப்பிட்டதைப் போல, வேலை வாய்ப்புகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள், வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக, அவர் (கிருஷ்ணசாமி) உள்ளிட்ட ஒரு குழு, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் தலைமையில் இன்றைக்கு அமைக்கப்பட்டு அந்த ஆய்வும் நடைபெற்று வருகின்றது. காலியிடங்களை 'நிரப்புவதற்கு ஆட்கள் இருந்தால், அதிலே எந்தவிதமான தயக்கமும் இருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. ஆட்கள் இருந்தும் நிரப்பப்படாமல் இருந்தால் என்ன காரணம் என்பதை அறிந்து, அதனை நிரப்புவதற்கான வாய்ப்புக் கூறுகளை இந்த அரசாங்கம் உருவாக்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையிலே வெளியிடப்பட்ட விளம்பரத்தில்; 'கிராமப்புறங்களில் உள்ள ஒருசில கடைகளில் அங்குவரும் அனைவரையும் சமமாக நடத்துவதில்லை என்று புகார்கள் வந்துள்ளன. கடைகளுக்கு வரும் அனைவரையும் சமத்துவத்துடன் நடத்த வேண்டுமென்றும், அனைவருக்கும் அனைத்து வசதிகளும் ஏற்றத்தாழ்வின்றி தரப்பட வேண்டுமென்றும், அனைவரையும் சமமாக நடத்தாத உரிமையாளர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அரசு எச்சரிக்கின்றது. கோவையில் அதுபோல் சமத்துவத்தைக் கடைப்பிடிக்காத சில கடைகளின் உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதலின், எல்லாக்கடைகளின் உரிமையாளர்களும் அரசின் மேலே கூறப்பட்ட கருத்தைக் கவனத்திலே கொண்டு தங்கள் கடைகளுக்கு வரும் அனைத்து மக்களையும் சமத்துவமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடைகளுக்கு வரும் மக்களைச் சமத்துவமாக நடத்தவில்லை என்றால், இதுகுறித்த புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அரசுக்கோ கொடுக்கலாம். அப்படி புகார் கொடுக்காமல் நேரடியாகவே சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு செயல்பட்டால், அவர்கள் மீதும் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கோயில்களில் சமத்துவத்தை நிலைநிறுத்தவே சமபந்தி விருந்து - சமத்துவம் தழைத்தோங்கவே மனிதச்சங்கிலி நிகழ்ச்சிகள்**

அரசே இதற்கு ஒத்துழைக்கும்போது, அரசே இதற்கு ஆணைகள் பிறப்பித்து, இந்த விதிகளை மீறுகிறவர்கள்-சமத்துவத்திற்கு எதிராக நடக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்படும்போது, அவரவர்களும் தங்கள் கைகளிலே சட்டத்தைக்கையிலே எடுத்துக் கொள்ளும்போது, சமூக விரோதிகள் சில பேர் சேர்ந்து-ஒரு துக்கம் கடைப்பிடிக்கின்ற நேரத்திலேகூட-உங்களுக்குத் தெரியும். என்னுடைய இனிய நண்பர், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மறைந்தபோது அந்தத் துக்கத்திலேகூட சென்னை மாநகரத்திலே என்னென்ன நடைபெற்றன என்பது உங்களுக்குத் தெரியும்; எத்தனைக் கடைகள் சூறையாடப்பட்டன; எத்தனைக் கடைகளிலேயிருந்து நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன, எத்தனைப் பேர் அன்றைக்கு வன்முறைக்கு ஆளானர்கள்-எல்லாம் அந்தக் கட்சிக்காரர்கள் செய்தார்கள் என்று நான் சொல்லமாட்டேன்.

ஆனால் சமூக விரோதிகள் அதைப் பயன்படுத்திக் கொண்டு-இந்த நேரம் பார்த்துத் திருடலாம், கொள்ளையடிக்கலாம் என்று வருவதைப் போல - ஒரு நல்ல நோக்கத்தோடு செய்யப்படுகின்ற காரியங்களில் சமூக விரோதிகள் நுழைந்து, இதுதான் நேரம், இந்த டீக்கடையிலே போய் எத்தனை கிளாஸ்களைத் திருடலாம், எத்தனை ரூபாயைத் திருடலாம், எத்தனை உண்டியலை உடைக்கலாம் என்று சில பேர் முற்படுவார்களேயானால், அது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதைப் போலவேதான், கோயில் நுழைவு-சில இடங்களில் இன்றைக்கும் தமிழ்நாட்டில் சில இடங்களில்-கோயில்களில் சமத்துவம் இல்லை. அந்தச் சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகத்தான் எல்லா ஆலயங்களிலும் சமபந்தி விருந்து நடைபெற வேண்டுமென்று அரசின் சார்பிலே சொல்லப்பட்டு, அறநிலையத்துறை அமைச்சரும், அந்தத் துறையின் அதிகாரிகளும் மற்றும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஒத்துழைத்து, ஏன் ஆன்மீகவாதிகளும்கூட ஒத்துழைக்க முன்வந்து-மடாதிபதிகள்.ஆதீனகர்த்தர்கள் எல்லாம் கூட ஒத்துழைக்க முன்வந்து சமபந்தி விருந்துகள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோயில்களிலே நடைபெற்றிருப்பதை நீங்கள் மறந்திருக்க முடியாது.

மனிதச் சங்கிலி அணிவகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் சமத்துவம் தழைத்தோங்க வேண்டுமென்ற குறிக்கோளாடுதான் நடைபெறுகின்றன. மனதைத் திருத்த வேண்டும், மனப்பக்குவத்தை உருவாக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் இவைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

ஆனால் நான் ஒரு செய்தி பார்த்தேன். கோயம்புத்தூரிலே ஒரு ஊரிலே ஒரு கோயிலுக்கு ஐநூறு பேரை அழைத்துக் கொண்டு நான் நுழைவேன் என்று நண்பர் கிருஷ்ணசாமி அறிவிக்கின்ற நேரத்தில் இன்னொரு சாராரை அது ஆத்திரப்படுத்தி அதன் காரணமாக ஆலயபிரவேசம் நடந்தது என்று அகமகிழ்ச்சி அடைவதைவிட ஆலயப் பிரவேசம் என்ற

பெயரால் இருசாராரும் அடித்துக் கொண்டு இத்தனை பேர் செத்தார்கள் என்ற அந்தக் கணக்கைப் பார்க்க நான் தயாராக இல்லை. அது மிகப்பெரும் வேதனை.

அந்த வேதனை வெள்ளத்திலே நாமெல்லாம் மிதக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த அணுகுமுறையிலே மாற்றம் வேண்டுமென்றும், அதே நேரத்தில் ஊரிலே பெரியவர்களாக இருப்பவர்கள் - நான்கூடக் கேள்விப்பட்டேன்; கோவையைப் பொறுத்தவரையில், அந்த ஊரிலே இருப்பவர்கள் எல்லாம் ஒன்றுகூடி, நம்முடைய அமைச்சர் பழனிச்சாமி அவர்கள் முன்னிலையிலே ஒரு முடிவெடுத்து, அந்த மலைக்கோவிலில் எல்லோரும் சமபந்தி விருந்தை விரைவிலே ஒருநாள் குறித்து நடத்துவதென்று அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த முடிவு மலைக்கோவிலிலே மாத்திரமல்லாமல், மாநில முழுதுமுள்ள எல்லாக் கோவில்களிலும், பெரியவர்களால் நடத்தப்படுமானால் நம்மைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்கமுடியாது.

எனவேதான், நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். சுட்டிக்காட்டக் கூடிய, சுயமரியாதைக்கு இழுக்குத்தேடக்கூடிய, சமத்துவத்திற்கு, சமதர்மத்திற்கு மாறான காரியங்கள் நடைபெற்றாலுங்கூட, அதை மாற்றுவதற்கு நாம் மேற்கொள்கின்ற அணுகுமுறை அண்ணாவைப் பின்பற்றி, அவர்களுடைய கொள்கைகளை உள்ளத்திலே ஏந்திய காரணத்தினால் நான் முதலமைச்சராக நின்று கொண்டிருக்கிறேன்.

**36 ஆண்டுகளுக்கு முன்பு நான் உங்களைச் சந்தித்தேன்**

நேற்றைக்குக் கூட பிரிட்டிஷ் ராணியிடம் நான் பேசிக்கொண்டிருந்தபோது, "36 ஆண்டு காலத்திற்கு முன்பு உங்களை நான் சந்தித்தேன்'' என்று சொன்னேன். பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது-நேற்றைக்கு இங்கே வந்த பிரிட்டிஷ் ராணி அன்றைக்கும் வந்தார்கள். ராஜாஜி மண்டபத்திலே முதலமைச்சர் காமராஜ் விருந்தளித்தார். அப்போது எங்களையெல்லாம் அவர் ராணிக்கு அறிமுகப்படுத்தினார்.

பெருந்தலைவர் எங்களையெல்லாம் ராணியாருக்கு அறிமுகப்படுத்தினார்கள். அப்போது அவருடன் வந்த அவருடைய கணவர்கூடக் கேட்டார், "நீங்கள் திராவிட நாடு கேட்கிறீர்களாமே?" என்று! 1961ஆம் ஆண்டு அது. ''ஆமாம் அது எங்களுடைய ரைட்'' என்று அப்போது கூறினேன். அது திராவிட நாடு கேட்டுக் கொண்டிருந்த காலம்.

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்; அப்போது

## "எல்லா மட்டத்திலும் சமத்துவம் நிலைநாட்டப்படும்!"

சரியானதாக இருக்கவேண்டும். உத்தமர் காந்தியடிகள் இந்திய விடுதலையைப் பற்றிச் சொல்லும்போது இந்திய நாட்டின் விடுதலை நமது குறிக்கோளாக இருந்தாலும், அதற்கான அணுகுமுறை அனைவரும் பாராட்டத்தக்க அளவிற்கு, ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிற்கு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார் என்பதை மறந்து விடக்கூடாது.

**எதை வேண்டுமானாலும் விவாதிக்கலாம்; என்னிடம் நேரில்வந்து பேசலாம்**


ஒருவர் இறந்தாலும் சமுதாயத்திற்குச் சேதம்தான். பத்து பேர் இறந்தாலும், சமுதாயத்திற்கு சேதம்தான். எனவே நூறு பேர், இருநூறு பேர் சாகக்கூடிய அளவிற்கு, தொடர்ந்து சாதிக்கலவரங்கள் ஏற்படுகின்ற அளவிற்கு அணுகுமுறைகள் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எதை வேண்டுமானாலும் விவாதிக்கலாம்; நேரில் வந்து பேசலாம். என்னைவிட ஒரு மலிவான முதலமைச்சர் உங்களுக்கு யார் கிடைக்கப் போகிறார்கள்? என்னைவிட-வந்து சந்தித்துப் பேசக்கூடிய ஒரு முதலமைச்சர் உங்களுக்கு வேறு யார் கிடைக்கப் போகிறார்கள்? கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே யார் அப்படி கிடைத்தார்கள்? எனவே எதையும் பேசலாம்; வந்து பேசி விவாதித்து, அதைப்பற்றி முடிவெடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் நான் ஒன்றும் பெரிய குடும்பத்திலேயிருந்து வந்த ஒரு ஆள் அல்ல. மிக மிகச் சாதாரணமான - சாமான்யமான குடும்பத்திலே பிறந்து-பெரியாரைப் பின்பற்றி, ஹைகமிஷனர் என்னிடம் "36 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எம்.எல்.ஏ.வாக இருந்தீர்களா? என்று கேட்டார்; நான் ''ஆமாம்'' என்றேன். ''இப்போது நீங்கள் முதலமைச்சராக ஆகிவிட்டீர்களா?" என்றார்; அதற்கும் "ஆமாம்" என்றேன். அப்போது அவர் சொன்னார். "நான் ஒரு கதை சொல்கிறேன்; நீங்கள் இங்கே எம்.எல்.ஏ.வாக இருந்தபோது 1961-இல் எங்கள் ராணியார் வந்தபோது, என்னுடைய தந்தைதான் ஹைகமிஷனராக இங்கே இருந்தார்" என்று அவருடைய தந்தை ஹைகமிஷனராக இருந்த கதையை அவர் சொன்னார்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அன்றைக்கு நானோ, பேராசிரியரோ, மற்றவர்களோ எம்.எல்.ஏ.க்களாக இருந்தோம். அப்போது நாங்கள் கருதவில்லை - முதலமைச்சராகவோ, அமைச்சர்களாகவோ வரப்போகிறோமென்று கருதவில்லை. எனவேதான் அந்தச் சாதாரண நிலையிலே தான் இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கும் சாதாரணமாக எல்லோரையும் பார்க்கக்கூடிய வகையில், 'எல்லோருடனும் விவாதிக்கக்கூடிய வகையிலும், இருக்கின்ற ஒரு முதலமைச்சரை நீங்கள் பெற்றிருக்கும்போது-இதைமீறிக் காரியங்களை செய்தால்தான் என்னுடைய கவனத்திற்கு வருமென்று நீங்கள் யாரும் கருதவேண்டாம். என்னை அவர்கள் பார்த்தாலே போதும் புரிந்துகொள்வேன்-என்னவென்று! - அதற்காக அடித்துப் புரிந்துகொள்ள வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ★

# எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை:

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஒன்றியத்தில் சாலூர் ஊராட்சி உள்ளது. தற்சமயம் எங்கள் பகுதிக்குத் தமிழ்நாடு அரசுப் பேருந்து குடந்தை கோட்டம் 111 என்ற பேருந்து - சிவகங்கையிலிருந்து சோழபுரம், நாலுகோட்டை, சிலுவினிப்பட்டி,



கீழச்சாவலூர், மேலச்சாலூர், கூட்டுறவுப்பட்டி வழியாகக் காலை 5.30 மணிக்கும், மாலை 5.30 மணிக்கும் 2 தடவை மட்டுமே ஒக்கப்பட்டி சென்றுவருகிறது. எங்கள் பகுதியில் பல கிராமங்கள் உள்ளன. சுமார் 10 ஆயிரம் மக்கள் தொகையினர் வசிக்கின்றனர். தற்சமயம் வந்துசெல்லும் பேருந்து, மக்களின் போக்குவரத்துக்குப் போதுமானதாக இல்லை. இதனால் பள்ளி சென்று படிக்கும் குழந்தைகளின் கல்வி மிகவும் பாதிப்படைகிறது. எனவே, தாங்கள் எங்கள் பகுதிக்கு இன்னும் 4 முறை கூடுதலாகப் பேருந்து வந்துசெல்ல ஆவண செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

செ. தங்கையா
ஊராட்சிமன்றத் தலைவர்
சாலூர், சிவகங்கை மாவட்டம்

தீர்வு:

தற்போது சிவகங்கையிலிருந்து ஒக்கப்பட்டிக்கு எங்களது நகரப் பேருந்து ஒன்று பல்முனை வழித்தடத் திட்டத்தின்கீழ் 4 நடைகள் இயங்கி வருகிறது. எனவே, கோரிக்கைப்படி ஒக்கப்பட்டிக்கு மேலும் கூடுதலாக 4 நடைகள் இயக்கும்போது மற்ற வழித்தடங்களின் நடைகள் குறைக்கப்பட்டுப் புகார்கள் வருமாதலால் கூடுதல் நடைகள் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்
(கும்பகோணம், கோட்டம் 2) லிமிடெட், காரைக்குடி.

பிரச்சினை:

எங்கள் ஊர், பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள துங்கபுரம் ஆகும்.

1. துங்கபுரம் ஊராட்சிக் கட்டடத்திற்கு மின் இணைப்பு இல்லாது இருப்பது பெரும் குறையாக உள்ளது. இக்கட்டடத்திற்கு உடன் மின் இணைப்புக் கிடைக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2. துங்கபுரம் ஊராட்சியில் குடும்பநல மையம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் 1972ல் கட்டப்பட்டு உள்ளது, மிகவும் பழுதுபட்டு உள்ளது. இதைப் பழுதுபார்க்க வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

3. துங்கபுரம் கிராமத்தில் பிரைமரி சென்டர் (அரசு முதற்படி நல மையம்) உள்ளது. இதில் ஒரே ஒரு மருத்துவர் மட்டும்தான் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இவர் உடல் நலம் மற்றும் சொந்த விடுப்பிலிருக்கும்போது இம்மையம் செயல்படாது உள்ளது. எனவே, மாற்று மருத்துவர் ஒருவரை நியமித்து, பிரைமரி சென்டர் 24 மணி நேரமும் செயல்படச் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவலிங்கம்
துங்கபுரம்,
திருவள்ளுவர் மாவட்டம்

தீர்வு:

துங்கபுரம் ஊராட்சிக் கட்டடத்திற்கு மின் இணைப்புக் கொடுக்க, துங்கபுரம் ஊராட்சித் தலைவர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. துங்கபுரம் ஊராட்சியில் உள்ள குடும்பநல மையம் பழுதுபட்டு இருப்பதை ஒன்றியப் பொறியாளர், மூலம் மதிப்பீடு தயார் செய்து மேற்படி கட்டடத்தைப் பழுதுநீக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. துங்கபுரம் கிராமத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் சுகாதார மருத்துவத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, கூடுதல் மருத்துவரை நியமனம் செய்யக்கோரி மாவட்ட உடல்நல அலுவலருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பா. ஜெகநாதன்,
ஆணையர்,
வேப்பூர் ஊராட்சி ஒன்றியம்

பிரச்சினை:

சென்னை மாவட்டத் தேவநேயப் பாவாணர் நூலகத்தைத் தலைமை நூலகமாகக் கொண்டு இயங்கும் நூலகத்தின் சீர்கேடுகள், ஆட்சி மாற்றம் முடிந்து எட்டு மாதங்கள் ஆகியும், இன்னும் சீரடையவில்லை.

பல மாவட்ட நூலக அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன. 16 மூன்றாம் நிலைப் பணியிடங்கள் இரண்டு ஆண்டுகளாகக் கல்வித்

தகுதியுள்ள ஊழியர்கள் இருந்தும் நிரப்பப்படவில்லை. இதனால் மாணவர் குறிப்பெடுக்க வரும் பகுதிக்கு ஊழியர் இல்லாததால் புத்தகங்கள் திருடுபோக வழிவகுக்கிறது. இரவு 8 மணி வரை செயல்பட வேண்டிய மாணவர் குறிப்பெடுக்கும் பகுதி மாலை 5 மணியோடு மின்விளக்கு வசதி இல்லை என்ற காரணத்தால் மூடப்படுகிறது. ஆனால் மாலை 5.45 மணி அளவில் மூடவேண்டிய இயக்ககக் கண்காணிப்பாளர் அலுவலகம் இரவு 10 மணிவரை மின்விளக்கு வசதியோடு திறந்து காணப்படுகிறது.

கண்காணிப்பாளரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள் பதவி உயர்வும், பணி மாற்றங்களும். அவரின் கசப்பான பார்வை பட்டவர்கள் சொல்லொண்ணாத துன்பமும், வேதனையும் அனுபவித்து வருகிறார்கள். மேலே உள்ள இயக்குநர் இவற்றை எல்லாம் கண்டும் காணாதது போல் இருப்பதுடன் கண்காணிப்பாளரின் கைப்பொம்மையாக இருந்து வருகிறார்.

இன்னொரு வேதனையான செய்தி என்னவென்றால் நடமாடும் நூலகம் நடமாட்டமின்றி அமைதியாக நின்று கிடக்கிறது. அதன் ஓட்டுநர்கள் நூலக இயக்குநரின் குடும்ப டிரைவர்களாகச் செயல்படுகிறார்கள்.

பல கிளை நூலகங்கள் திறக்கப்படுவதே இல்லை. விசாரித்துப் பார்த்ததில் ஊழியர் இல்லாததால் திறப்பதில்லை என்கிறார்கள். ஊழியர்கள் இருக்கிற நூலகங்களும் சரியாகத் திறக்கப்படுவதில்லை. அதே நேரத்தில் நல்ல நூல்களைப் பார்ப்பதே அரிதாக உள்ளது. இருக்கின்ற நூல்களையும் ஊழியர்கள் வாசகர்களுக்குப் படிக்கக் கொடுப்பதில்லை; ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை நேரங்களில் பல நூலகங்கள் திறக்கப்படுவதே இல்லை.

எனவே, நூலகங்கள் தான் ''எதிர்காலத்தை உருவாக்கும் நல்ல நண்பன்'' என்கிற கூற்றுக்கு ஏற்ப, மக்களின் கோடிக்கணக்கான வரிப்பணம் வீணாகாமல் பார்த்துக்கொள்வது நமது எல்லோருடைய கடமை. 'தமிழரசு' இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமா?

நன்றி.

ஒரு வாசகர்
சென்னை84.

**தீர்வு:**

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் மாவட்ட நூலக அலுவலர் பணியிடம் நிரப்பப்பட்டு உள்ளது. மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் நூலகங்களில் பணியாற்ற மூன்றாம் நிலை நூலகர்கள் பணியிடங்கள் அரசின் தடை ஆணைக் காரணமாக நிரப்படாமலிருந்து, தற்போது உரிய ஆணை பெறப்பட்டு அவைகள் நிரப்பப்பட்டு வருகின்றன.

மாவட்ட மைய நூலக மாணவர் பகுதியில் மின்விளக்கு வசதி உள்ளதெனினும் பணியாளர் பற்றாக்குறையினால் மட்டும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

நடமாடும் இயங்கு நூலகங்கள் தற்போது ஒழுங்காக இயங்கிவருகின்றன.

நூலகப் பொறுப்பாளர்கள் விடுப்பெடுக்கும் காலங்களில் மட்டும் நூல் இரவல் பகுதி மூடியும், தினசரி பத்திரிகை பகுதி பகுதிநேர ஊழியர்களைக் கொண்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது.

நூலகங்களுக்கு வழங்கப்படும் அனைத்து நூல்களும் உடனுக்குடன் வாசகர் பயன்பாட்டிற்காகப் புத்தக அடுக்குகளில் வைக்கப்பட்டு விடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர், சென்னை

**பிரச்சினை:**

எங்கள் ஊர் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், மண்டல மாணிக்கம் கிராமம் ஆகும். இப்பகுதியில் வேறு தொழிற்சாலைகள் இல்லாத குறையைப் போக்கும்வண்ணம், கள்ளச் சாராயத் தொழிற்சாலைகள் வ. மூலக்கரைப்பட்டி, மு.புரம், புதூர், சிலிப்பி, புளியங்குளம் ஆகிய ஊர்களில் காவல் துறையினரின் ஆதரவோடு அமோகமாக உற்பத்தி செய்யப்பட்டு மண்டல மாணிக்கத்தில் சுமார் 10 விற்பனை நிலையங்கள் மூலம் இப்பகுதிகளுக்கெல்லாம் சப்ளை செய்யப்படுகின்றது. மண்டலமாணிக்கம் காவல் நிலையத்திற்குப் பின்புறம் உள்ள தெருவில் அமோக விற்பனை செய்யப்படுகிறது.

ஊர்ப் பொதுமக்கள்
மண்டல மாணிக்கம்

**தீர்வு:**

மண்டலமாணிக்கம் காவல் நிலையம் பின்புறம் உள்ள தெருவில் எந்தவிதச் சாராய விற்பனையும் கிடையாது. மேலும் மண்டலமாணிக்கம் கிராமத்தில் பட்டைச் சாராயமோ மற்ற மதுபானங்களோ கிடையாது. வ.மூலக்கரைப்பட்டி, சிலுப்பி, இளந்தைக்குளம், புளியங்குளம், வடுகபட்டி ஆகிய ஊர்களில் காவல்துறையினரால் அவ்வப்போது திடீர் சோதனை செய்யப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டு வருகிறது. சாராய உற்பத்தியை ஒழிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறை கண்காணிப்பாளர்
இராமநாதபுரம்

**பிரச்சினை:**

பாப்பிரெட்டிபட்டி நகரம் சேலம் திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் சாமியாபுரம் கூட்டுரோட்டில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளே தள்ளி உள்ளது. சேலத்தில் இருந்து அரூர், திருப்பத்தூர் செல்லும் பெரும்பாலான தனியார் பேருந்துகளும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலத்தை சேர்ந்த 6 பேருந்துகளும் பாப்பிரெட்டிப்பட்டி வந்து செல்ல

அனுமதி வாங்கியுள்ளன. ஆனால் பேருந்துகள் பாப்பிரெட்டிப்பட்டிக்கு வந்து செல்வதில்லை. இரவு நேரங்களில் கூட சாமியாபுரம் கூட்டுரோட்டிலேயே பொதுமக்களை இறக்கிவிட்டுச்சென்றுவிடுகிறார்கள். இதனால் நாங்கள் மிகவும் சிரமப்படுகிறோம்.



பாப்பிரெட்டிபட்டி ஒரு வட்டத் தலைநகரமாகும். ஆனால் இங்கு பல்வேறு அரசு அலுவலகங்களும், பல கல்வி நிறுவனங்களும் இங்கு உள்ளது. அதனால் இவ்வூருக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்துசெல்கிறார்கள். அவர்கள் வந்து செல்லப் போதிய பஸ் வசதி இல்லை.

ஆதலால் அய்யா அவர்கள் எங்கள் ஊருக்கு வழித்தடம் உள்ள பேருந்துகள் அனைத்தும் ஒழுங்காக வந்து செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

ப. புகழேந்தி,
தலைவர், நகர இளைஞர் பேரவை,
பாப்பிரெட்டிபட்டி அஞ்சல்
தர்மபுரி மாவட்டம்

**தீர்வு:**

சேலத்திலிருந்து அரூர் மார்க்கமாக இயக்கப்படும் எங்களது பேருந்துகளில் சேலம்அரூர் மார்க்க வழித்தடப் பேருந்திற்கும் சேலம் திருப்பத்தூர் வழித்தடத்தில் இரண்டு பேருந்திற்கு மட்டும் பாப்பிரெட்டிப்பட்டி சென்று திரும்ப அனுமதி உள்ளது.

இந்தப் பேருந்துகள் தொடர்ந்து பாப்பிரெட்டிப்பட்டி சென்று வருமாறு இயக்க (மொத்தம் 12 நடைகள்) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலாண் இயக்குநர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்.

**பிரச்சினை:**

எங்கள் ஊர் அய்யூர். இதில் அய்யூர், தெற்கு நத்தம், வடக்குப்பட்டி, காலனி, காங்குழி, கல்லம்பள்ளம் ஆகிய பகுதிகளில் சுமார் 3200க்கும் அதிகமான மிகவும் பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் வசித்து வருகிறோம்.

தற்போது செயங்கொண்டம் - கொடுக்கூர் ஒரு பஸ் மட்டும் ஓடுகிறது. அதுவும் முறையான நேரத்தில் வருவது கூட கிடையாது. மேலும் பஸ் விடக் கோரியதில் காலையில் ஒரு தடவை, மாலையில் ஒரு தடவை பள்ளிப் பிள்ளைகளுக்காகச் சிறப்புப் பேருந்து விட்டார்கள். இந்தப் பேருந்து என்றைக்காவது ஒருநாள் மட்டுமே வரும். அதுவும் குறிப்பிட்ட நேரத்திற்கு வராது.

இதற்கெல்லாம் காரணம் எங்கள் ஊருக்கு உள்ள சாலை சீராக இல்லாததே. மேலும் அய்யூர் தெற்கு நத்தம் சாலை, பெய்துமுடிந்த பெருமழை காரணமாகத் துண்டிப்பு ஏற்பட்டது. தற்சமயம் வரை சீரமைக்கப்படவில்லை. ஆகவே எங்களுக்குச் சரியான சாலை வசதி செய்துகொடுத்து கூடுதல் பேருந்துவிட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கிராமப் பொதுமக்கள்
அய்யூர்-காங்குழி

**தீர்வு:**

1. தற்போது செயங்கொண்டம் - கொடுக்கூர் தடத்தில் பேருந்துகள் முறையாகக் கீழ்காணும் நேரத்தில் இயங்கி வருகின்றன.

| | | | புறப்படும் இடம் | சேருமிடம் |
|---|---|---|---|---|
| காலை | 6.00 | மணி | செயங்கொண்டம் | கொடுக்கூர் |
| | 7.00 | மணி | ... | ... |
| | 9.00 | மணி | ... | ... |
| | 11.00 | மணி | ... | ... |
| மாலை | 2.00 | பி.ப. | ... | ... |
| | 4.00 | பிப | ... | ... |
| இரவு | 6.30 | பி.ப. | ... | ... |
| | 10.00 | பி.ப. | ... | ... |

2. மேலும் அய்யூர் தெற்குநத்தம் சாலையைச் சீர்செய்ய மன்றங்களின் தீர்மானங்கள் பெற்று உரிய நடவடிக்கைகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

ந. மருதநாயகம்
ஆணையர்
ஊராட்சி ஒன்றியம்
ஆண்டிமடம்.

**பிரச்சினை:**

மேலகுப்பம் பாகாயம் தடம் எண்.2பி என்ற ஒரு பேருந்து மட்டும் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு நாளைக்கு 7 முறை மேலகுப்பம் வந்து செல்கின்றது. ஆனாலும் பேருந்தில் கூட்டம் அதிகமாக உள்ளது. எனவே மேல்குப்பம் வாலாசா வழி ஆர்க்காடு தடங்களில் ஓர் அரசு பேருந்து விட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

1988ஆம் ஆண்டு முதல் தனியார் பேருந்து (மல்லிகா பஸ் சர்வீஸ்) ஆற்காடு அருங்குன்றம் விஷாரம் வழியாக மேலகுப்பம் வரை புழக்கத்தில் இருந்தது. ஒரு சில ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது. இதை மீண்டும் மேற்கண்ட தடங்களில் இயக்கவும், வேலூரிலிருந்து ரங்காபுரம் வழியாகச் செங்காநத்தம் வரை தினம் மூன்று முறை வரும் அரசுப் பேருந்தை 70 மேலகுப்பம் வரை நீடித்து இயங்கச் செய்யவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

பெ. விநாயகமூர்த்தி
பொதுச்செயலாளர்
"உதவும் நெஞ்சங்கள்"
சமூக நல சேவை மேலகுப்பம் கிராமம் அஞ்சல்,
இரத்தினகிரி வழி, வாலாசா தாலுகா
வேலூர் மாவட்டம்.

**தீர்வு:**

மேலகுப்பம் கிராமத்திற்குத் தற்பொழுது பாகாயத்திலிருந்து நகரத் தடம் 2பி/ஏ மூலம் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதுவே தற்பொழுது உள்ள போக்குவரத்து நெரிசலுக்குப் போதுமானதாக உள்ளது.

அடுத்து மேலகுப்பம் ஆர்க்காடு தடத்தில் ஏற்கெனவே இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட மினி பேருந்து மீண்டும் கடந்த 25.6.97 முதல் இயக்கப்பட்டு வருகின்றது.

பொது மேலாளர் (இயக்கம்)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(விழுப்புரம் கோட்டம்2)

**பிரச்சினை:**

எங்களூர் இத்தலார் கிராமத்திற்குப் பழையதும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டதுமாக இரு குடிநீர் திட்டங்கள் உள்ளன. ஆனால், குடிநீர் ஆதாரம் நன்றாக இருந்து குடிநீர் விநியோகம் சரியாகப் பராமரிக்கப்படாததால் குடிநீருக்காக மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். இதற்குக் காரணம் அடிக்கடி குடிநீர்க் குழாய்களில் பழுது ஏற்படுவதே. அவ்விதம் பழுது ஏற்படும் சமயங்களில் குழாய்களைச் சரிசெய்து குடிநீர் விநியோகத்தைச் சீர்செய்ய இத்தலார் பேரூராட்சியில் ஒரு நிரந்தரக் குடிநீர்க்குழாய் பழுதுபார்க்கும் ஊழியர் (பிளம்பர்) நியமிக்கப் பட்டிருக்கவில்லை. இத்தலார் பேரூராட்சியில் உள்ள இருபதிற்கும் மேற்பட்ட கிராமங்களில் பொதுமக்கள் தங்களால் முடிந்த அளவு குடிநீர் குழாய்களைப் பழுதுபார்த்துக் குடிநீர் விநியோகத்தைச் சீராகப் பராமரிக்க முயற்சி மேற்கொண்டாலும் ஒரு பயிற்சி பெற்ற குழாய் பழுதுபார்ப்பவர் இல்லாத காரணத்தால் குழாய்கள் அடிக்கடி பழுதடைவதைத் தவிர்க்க முடிவதில்லை.

இத்தலார் பேரூராட்சியில் ஒரு நிரந்தரப் பணியாளரை (பிளம்பர்) வேலைக்கு அமர்த்த வேண்டிய பொழுது, பேரூராட்சிக்குப் போதிய வருமானம் இல்லை எனவும் ஊழியரை அமர்த்த அரசாங்க அனுமதி தேவை எனவும் கூறப்படுகிறது. என்வே, தயவுசெய்து இத்தலார் பேரூராட்சிக்கு நிரந்தரமாக ஒரு குடிநீர்க் குழாய் பழுது பார்க்கும் ஊழியரை நியமித்து மக்கள் குறைதீர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
நுகர்வோர் பாதுகாப்புக்குழு,
இத்தலார், நீலகிரி.

**தீர்வு:**

இத்தலார் பேரூராட்சியில் ஒரு நிரந்தரக் குடிநீர் உதவியாளரை நியமனம் செய்ய இத்தலார் பேரூராட்சி மன்றத்தின் தீர்மானம் பெற்றுத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கு.வெ. பழனிசாமி
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

**பிரச்சினை:**

சேலம் மாவட்டத்திலும், இராஜாஜி மாவட்டத்திலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள போயர் மற்றும் ஒட்டர் சாதியினரில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கோவில் நிலங்களிலும், அரசு புறம்போக்கு நிலங்களிலும், வாடகை வீடுகளிலும் குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு இலவச வீட்டு மனைகள் கிடைக்க ஆவன செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக தலித்போயர் முன்னேற்ற சம்மேளனம்
சேலம் மாவட்டக் குழு

**தீர்வு:**

மிகவும் பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் தற்போது மிகவும் பிற்பட்ட இனத்தவர்களுக்கு நில ஆர்ஜிதம் மற்றும் தனியார் பேச்சுவார்த்தை மூலம் நிலம் பெற்று, இலவச வீட்டுமனை வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, சேலம் மாவட்டத்தில் வீடில்லாமல் உள்ள மிகவும் பிற்பட்ட இனத்தவர்களான போயர் மற்றும் ஒட்டர் ஆகியோர் உரிய படிவத்தில் விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட ஆதிதிராவிட நல தனி வட்டாட்சியர்களிடமோ, அல்லது சேலம் மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரிடமோ விண்ணப்பம் செய்தால், மேற்படி விண்ணப்பத்தின் மீது விசாரணை செய்து நில ஆர்ஜிதம் மூலமாகவோ அல்லது தனியார் பேச்சுவார்த்தை மூலமோ நிலம் பெற்றுத் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

ம. கருணாகரன்
மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் (பொ)
சேலம்.

**பிரச்சினை:**

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம், ஏழூர் ஊராட்சியில் உள்ளது எங்கள் ஊர். இங்கு தாழ்த்தப்பட்ட அருந்ததியர் வகுப்பைச் சார்ந்த சுமார் 500 மக்கள் வசித்து வருகின்றோம். எங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லை. பல ஆண்டுகளாகக் குடிநீர்ப் பிரச்சினை

இருந்து கொண்டிருக்கிறது. 1994-95ம் ஆண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தேக்கத் தொட்டி வேப்பம்பட்டியில் கட்டித்தரப்பட்டுள்ளது. இதற்கான ஆழ்த்துளைக்கிணறு, வேப்பம் பட்டியிலிருந்து பெரிய மணலி செல்லும் சாலையோரமாக 1 பர்லாங் தொலைவில் தோண்டப்பட்டுள்ளது. இங்கிருந்து நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் கொண்டுசெல்ல மேற்படி வேலைகள் நடைபெறுவதை வேப்பம்பட்டி புதூர் மக்கள், எங்களுக்கு அரசாங்க நீர்த்தேக்கத்தொட்டி கட்டி குடிநீர் வழங்கவேண்டும். அருந்ததியர்களுக்குத் தண்ணீர் கொண்டுசெல்ல விடமாட்டோம் என்று தடுத்துவிட்டனர்.

இதைச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேரடியாகவும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவித்தும், எந்தவொரு பலனுமில்லை. வேறு ஆழ்த்துளைக் கிணறு வேண்டி கேட்டும் முயற்சி பலிக்கவில்லை. இன்றுவரை குடிநீர்ப் பிரச்சினை தீரவில்லை. இன்றைய சூழ்நிலையில் இங்கு கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டி வெயிலில் காய்ந்து வெடிப்பு ஏற்பட்டு இடிந்துவிடும் நிலையில் உள்ளது. எனவே எங்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுத்து உதவுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஊர்ப் பொதுமக்கள்
அருந்ததியர் காலனி
வேப்பம்பட்டி,
நாமக்கல் மாவட்டம்

**தீர்வு:**

புதுச்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 'வேப்பம்பட்டி' அருந்ததியர் காலனிக்கு மேல்நிலைத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய்கள் பணிகள் மட்டும் முடிவடைந்துள்ளது. வேப்பம்பட்டி புதூர் மக்களின் ஆட்சேபனையில் நீரேற்றும் குழாய்ப் பணிகள் இதுவரை துவக்கப்படவில்லை. காரணம் ஆழ்துளைக் கிணறு வேப்பம்பட்டிபுதூர் கிராமத்திற்கு அருகில் உள்ளது. தற்போது வேப்பம்பட்டி புதூருக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளது. வேப்பம்புதூர் வேலைகள் முடிவு பெற்றவுடன் இரண்டு ஊர்களுக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரோல்கும்லென் புஹ்றில்
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்

**பிரச்சினை:**

ஆத்தூர் மோட்டார் வெஹிக்கில் இன்ஸ்பெக்டர் ஏத்தாப்பூருக்கு உரிய நேரத்தில் தனியார் பேருந்துகள் சரியாகச் செல்வதாகத் தகவல் தெரிவித்துள்ளார். ஆனால் வெளியூரிலிருந்து ஏத்தாப்பூர் வரும் பொதுமக்களுக்கு, பஸ் போகுமா எனத் தெரிவதில்லை. ஆகையால் பேருந்தின் இடது பக்கக் கண்ணாடி முகப்பில் ஏத்தாப்பூர் செல்ல ஆத்தூரில் புறப்படும் நேரம், சேலத்தில் புறப்படும் நேரம் என எழுதி, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஒய்.எஸ். கணபதி மற்றும் ஊர்மக்கள்
ஏத்தாப்பூர்.

**தீர்வு:**

மனுவில் கோரியபடி ஏத்தாப்பூர் சென்று வரும் அனைத்துப் பேருந்துகளிலும் ஆத்தூர் மற்றும் சேலத்திலிருந்து புறப்படும் காலப் பட்டியலை இடது பக்கம் எழுதுமாறு அனைத்து உரிமையாளர்களும் அறிவுறுத்தப்பட்டார்கள் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம். தியாகராஜன்,
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்,
சேலம்.

# "தொழில் துறையில் தமிழ்நாடு மீண்டும் முதலிடம் பெறும்!"

*- மாண்புமிகு முதல்வர் உறுதி*

சென்னை கிண்டியில் உள்ள தொழிற்பயிற்சி மையத்தில், உலோக வார்ப்புத் தொழில்களுக்கான கணினி உதவியுடன்-வடிவமைப்பு, உருவ அமைப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19.10.97 அன்று அடிக்கல் நாட்டி வாழ்த்துரையாற்றினார்.

மத்திய தொழில்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் - மாண்புமிகு ரயில்வே துறை அமைச்சர் திரு.ராம்விலாஸ் பஸ்வான், மத்திய பெட்ரோலியத்துறை இணை அமைச்சர் திரு.டி.ஆர்.பாலு, திரு.அசோக் பாரதி, ஐ.ஏ.எஸ்., சைதை கா.கிட்டு, எம்.எல்.ஏ., திரு. தாமோதரன், எம்.சி., ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மையத்திற்கான அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் - "தமிழகத்தில் பெருகிவரும் தொழில் வளர்ச்சிக்கு இம்மையம் பெரிதும் உதவியாக இருக்கும். காமராசர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட தொழில் வளர்ச்சியில், இடைப்பட்ட காலத்தில் தொய்வு ஏற்பட்டது. தொழில்துறையின் பொற்காலம் என்று கூறும் அளவிற்கு இப்போது தான் தமிழகத்தில் பல பெரிய தொழிற்சாலைகள் உருவாகிவருகின்றன. தொழில் துறையில், நாட்டில், மீண்டும் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறும்" என்று குறிப்பிட்டார்.

# இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்


## கருத்தரங்கம் : நிகழ்ச்சிக் குறிப்பு

இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் என்னும் பொருள் பற்றி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் இணைந்து இரண்டு நாள் கருத்தரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன.

அக் கருத்தரங்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழித் துறையில் (மெரினா வளாகம் திருவள்ளுவர் சிலை எதிரில்) 13, 14.10.97 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையின் தலைவர் முனைவர் பொற்கோ அவர்கள் 13.10.97 அன்று கருத்தரங்கைத் தொடங்கி வைத்து அரியதொரு உரை நிகழ்த்தினார். இதழியல் ஆய்வின் தேவை பற்றியும் அண்மைக் காலம் வரையில் அத்துறையில் வெளிவந்துள்ள பயனுள்ள ஆய்வுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

நான்கு அமர்வுகளாக அமைந்த இரு நாள் கருத்தரங்கிற்கு முறையே முனைவர் இ. சுந்தரமூர்த்தி, முனைவர் இரா. குமரவேலன், முனைவர் இரா. இளவரசு, முனைவர் பொற்கோ ஆகியோர் தலைமையேற்று அமர்வுகளைச் சிறப்பித்தனர். விடுதலைக்கு முந்தைய காலகட்டத்தில் அரசியல், சமுதாயம், இலக்கியம் ஆகிய துறைகளில் உண்மையான இன, மொழி, நாட்டுணர்வோடு அரும் பணியாற்றிய இதழ்களில் குறிப் பிடத்தக்க இதழ்கள் சில தெரிந் தெடுக்கப்பட்டு ஆய்வுக்குரிய தலைப்புகளாகக் கொள்ளப்பட்டன.



ஆய்வார்வமும் உழைப்பும் நிறைந்த பேராசிரியர்கள் பலரும் ஆய்வாளர்கள் சிலருமாக உரிய கட்டுரைகளைப் படித்தனர்.

சுதேசமித்திரன், விவேகசிந்தாமணி, செந்தமிழ், தமிழர் நேசன், இந்துஸ்தான், தமிழ்நாடு, நவசக்தி, தமிழ்ப் பொழில், லோகோபகாரி, குடிஅரசு, விமோசனம், மணிக்கொடி, செந்தமிழ்ச் செல்வி, தினமணி, காந்தி, சுதந்திரச் சங்கு ஆகிய இதழ்கள் தலைப்புகளாக அமைந்தன. 'இந்திய விடுதலையும் இதழ்களும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை படிக்கப்பட்டது.

14.10.97 அன்று மாலை குமுதம் ஆசிரியர் திரு. மாலன் அவர்கள் கருத்தரங்க நிறைவுரை ஆற்றினார். இதழியலின் நெடிய வரலாற்றை நினைவுகூர்ந்த அவர், திரு.வி.க.வின் இதழியல் பணிகளைப் போற்றினார். பல அரிய தகவல்களை உள்ளடக்கியதாக மாலனுடைய நிறைவுரை அமைந்தது.

இரண்டு நாட்களும் எண்ணிக்கையில் பலராகப் பார்வையாளர்கள் வந்திருந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடந்த கால வரலாற்றை அரசியல், சமுதாயம், இலக்கியம் சார்ந்த கிடைத்தற்கு அரிய செய்திகளை இரண்டு நாட்களில், நான்கு அமர்வுகளில் பெற முடிந்ததைப் பெரும் பயனாக எண்ணி மகிழ்ந்தனர் பார்வையாளர்கள்.

இந்திய விடுதலையின் பொன்விழா ஆண்டில் விடுதலை சார்ந்த நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கம் எல்லா நிலைகளிலும் நிறைவாக அமைந்தது குறிப்பிடத் தக்கதாகும். அங்கே படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் ஒன்றான முனைவர் நா.செயப்பிரகாசு அவர்கள் எழுதிய 'குடியரசு' இதழ் குறித்த கட்டுரையே இவ்விதழில் இந்தப் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது; மற்ற கட்டுரைகள் தொடர்ந்து வெளியிடப்படும். ★

இந்திய விடுதலைக்கு
முந்தைய தமிழ் இதழ்கள் :

# 'குடி அரசு'

## முனைவர். நா. செயப்பிரகாசு

சம காலத்துச் சமுதாய மக்களைத் தொடர்புபடுத்தித் தோழமை கொள்ளச் செய்வன இதழ்கள். அவை கருத்துத் தெளிவுக்கும், ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கும் உதவியாயிருந்து உறு துணையாவன. ஒற்றுமையைச் சிதைக்கும் சீரழிக்கும் அறியாமையை அகற்ற அரும் பாடுபடுவன. முன்னேற்றப் பாதையின் முட்டுக்கட்டைகளான, சாதி, சமய, சாத்திரச் சடங்குகளையும், சங்கடங்களையும்-தவிர்த்து விலக்கவும் தகர்த்து எறியவும் தக்க கருவிகளாவன. இதமான அணுகுமுறைகளால், இறுக்கமான சூழ்நிலைகளையும், இணங்கி வரச் செய்வன; இரங்கி இளகி வரச் செய்வன. இலக்கிய நலன்களுக்கும், நயங்களுக்கும் மேலும் இனிமை செய்வன; சேர்ப்பன. புதிய புதிய உத்திகளையும் உயர்திறங்களையும் அறிமுகப்படுத்தி இலக்கிய ஆர்வலர் களுக்கும், ஆய்வாளர்களுக்கும் நிறைவூட்டுவன. புதிய புதிய படைப் பாளர்களையும், பகுத்தறிவாளர் களையும், பயன் விளைக்கச் செய்வன. இத்தகு, இதழ்ப் பணிகளில், இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு ஒரு புனிதப் போரையே நடத்திக் கொண்டிருந்தன. அதிலும் அன்று நாட்டிலிருந்த, அன்னிய (மோகம்) ஆர்வம் - பெண்ணடிமை - சாதி சமய சாத்திரப் பிணக்குகள், பிளவுகள், நாடு, மொழி, இன, உணர்வுகளில்லா நயவஞ்சகப் போக்குகள், கள் வெறி, போலிக் கல்வி, உரிமைப் பறிப்பும் உரிமைப் பகிர்வில் உண்மையில்லாமை - தேர்தல் என்ற பெயரில் நடந்த தில்லுமுல்லுகள் - மொழி, கலை இலக்கியச் சிதைவுகள் - புராண இதிகாசப் பொய்க் கதைகளின் பொய்ம்மைத் தத்துவங்கள் - போலி வழிகாட்டுதல்கள் என அனைத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. திசைமாறிச் செல்லும் மக்களை, திசை மாற்றிச் செலுத்தும் மாக்களிடமிருந்து மீட்டுக் காத்து - நெறிப்படுத்தவும், சரிப்படுத்தவும் வேண்டியிருந்தது. உண்மை வாழ்வுக்கும் உயர்ந்த வாழ்வுக்கும் வேண்டிய நல்லறிவு, நன்முயற்சிகளைச் செய்ய வேண்டியிருந்தது.



தமிழ் - தமிழினம் - தமிழ்நாடு - என்ற மூன்று நிலைகளிலும் உண்மை, உரிமை, சமத்துவம் என்ற மூன்று நெறிகளுக்காகப் பாடுபட்ட - இன்றியமையாத - இதழ்களில் குறிப்பிடப்பட வேண்டியது குடி அரசும் ஆகும்.

### அமைப்பும் அறிமுகமும்:

ஈ.வே. இராமசாமி நாயக்கரையும், வா.மு. தங்க பெருமாள் பிள்ளையையும் ஆசிரியராகக் கொண்ட 'குடியரசு' வாரப்பதிப்பாக குரோதன ஆண்டு சித்திரை முதல் (2.5.1925) ஞாயிறுதோறும் ஈரோட்டிலிருந்து வெளிவரும் இதழாகத் தோன்றியது. பதிவு எண்.2041. மொத்தப் பக்கங்கள் 8. தனிப்பிரதி விலை அணா ஒன்று. பின்னாளில் பதிவு எண் 4900 இல் மொத்தம் 16 பக்கங்களைக் கொண்டதாகக் குடியரசு வளர்ந்தது. பதிப்புகள் மாலை என்றும் மலர் என்றும் பகுக்கப்பட்டுப் பக்க எண்கள் தமிழ் எண்களிலேயே குறிக்கப்பட்டுள்ளதும், குறிப்பிடப்படவேண்டிய தனிச் சிறப்பாகும். வருட சந்தா மூன்று ரூபாய்.

குடி அரசு இதழின் தொடக்க கால இதழ்களில் அமைந்திருந்த தலைப்புப் பகுதியும் படமும் கருத்துக் களஞ்சியமாக விளங்குகிறது. மேற்பகுதியில் 'எல்லோரும் ஓர்குலம், ஓர் இனம்... சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் பாரதியின் பாடல் வரிகள் அமைந்துள்ளன. இடதுபுறம் அருவியும், ஆற்றங்கரையும் மாடுகள் மேயும் காட்சியும், இயற்கைச் சூழல் தியானம் செய்யும் திருவுருவும் காட்சியளிக்கின்றன. வலதுபுறம் ஊர்கூடித் தேர் இழுக்கும் காட்சியும், சிலுவைக் குறியிட்ட ஆலயமும், பிறையும், கோயிலும் காட்சியளிக்கின்றன.

மையப் பகுதியில் ஒரு வட்டத்திற்குள் பாரத தேவியும், வலது புற வட்டத்திற்குள் நெசவாளியின் படமும் உள்ளன. இவ்விரண்டு வட்டங்களையும் இணைக்கும், அரைவட்ட வானவில் வளைவுக்குள் குடி அரசு எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.



இதன் அடிப்பகுதி நான்காகப் பகுக்கப்பட்டுள்ளது. பகுப்புக் கோடுகளாக, கம்பு, கரும்பு, கேழ்வரகுப் பயிர்கள் அமைந்திருப்பது அருமை. முதற் பகுப்பில் உழவு செய்வானும், இரண்டாம் பகுதியில், நூல் நூற்பாரும், மூன்றாம் பகுப்பில் தச்சு வேலை செய்வாரும், நான்காம் பகுப்பில் மூட்டை தூக்கும் உழைப்பாளியும், தொழிலாளியும் இடம் பெற்றுள்ளனர்.

அடுத்து வரும் அடிப் பகுதியில் இதழின் மாலை, மலர், வரிசை எண்கள், தமிழ் ஆங்கில ஆண்டு மாத நாள் கிழமைக் குறியீடுகளும், குறிப்புகளும் உள்ளன.

பின்னர் வந்த ஏடுகளில், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்..; ஒழுக்கமுடைமை குடிமை...; "வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலதூங் கோடா தெனின்'' என்னும் குறட்பாக்கள் குறிக்கப்பட்டுள்ளன.


முதலில் வந்த ஏடுகளின் முன் பக்கத்தில், "தமிழ் மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய உழைக்கும் பத்திரிகை இது. ஆகையால் இதனை ஆதரிக்க வேண்டுவது உங்கள் முதற்கடன் ஆகும். உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்'' காரியஸ்தர்; குடி அரசு காரியாலயம் என்ற அறிவிப்பும், அழைப்பும், இடம் பெற்றுள்ளது. காலப் போக்கில் முன் பக்கத்தில் விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. பிற்காலத்தில் காலத்தின் இயல்புக்கும் எதிர்பார்ப்புக்கும், தேவைக்கும் தெளிவுக்குமான கருத்துகள் இடம் பெற்றுள்ள கவிதைகள் எழில் சேர்க்கின்றன; எழுச்சியூட்டுகின்றன.

குடி அரசு இதழின் குறிக்கோளை அதன் ஆசிரியர் ஈ.வே.ரா. மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். மற்றவர்கள் வாயிலாகவும், சொற்பொழிவிலும், வாழ்த்துரையிலும் அது விளக்கப் பெற்றுள்ளமையும் காணலாம்.

குடியரசு இதழ் அலுவலகத் திறப்புவிழாவில் வரவேற்புரையாற்றும்போது ஈ.வெ.ரா. ''இப்பத்திரிகையை ஆரம்பிக்கும் நோக்கம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் இன்னும், மற்ற விஷயங்களையும் ஜனங்களிடையுணர்த்துவதற்கேயாம். ஏனைய பத்திரிகைகள் பல இருந்தும் அவைகள் தங்களது மனச்சாட்சிக்குத் தோன்றிய உண்மையான அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சுகின்றன. அவைகளைப்

## 'குடிஅரசில்'
## அண்ணாவும், கலைஞரும்

'குடி அரசு' தமிழரின் தன்னுரிமைப் போர் வாளாக விளங்கிய தத்துவ இதழ். நாடு, மொழி, இனம் இந்த மூன்றையும் மூச்சாகக் கொண்ட இந்த இதழில் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் எழுதிய எழுத்தோவியங்கள் கடந்த 50 ஆண்டுத் தமிழர் வரலாற்றுக்கு உந்து விசையாய் அமைந்தன என்பது குறிப்பிடத் தக்கது.



போலல்லாமல், பொது ஜனங்களுக்கு விஷயங்களை, உள்ளவற்றை உள்ளபடி, தைரியமாகத் தெரிவிக்க வேண்டுமென்பதே எமது நோக்கம். இப்பத்திரிகாலயத்தைத் திறப்பதற்கு ஈசன் அருளால், சுவாமிகள் போன்ற (திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்) பெரியார் கிடைத்தது அரிதேயாகும். இறைவன் அருளாலும், சுவாமிகளது அருளாலும் பத்திரிகை என்றும் நிலைபெற்று மற்றப் பத்திரிகைகளிடமுள்ள குறையாதுமின்றிச் செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசிர்வதிக்கும்படி சுவாமிகளை வேண்டுகிறேன், எனக் கூறுவதிலிருந்து அவரது இதழ் நோக்கமும் தொடக்ககால இயல்பும் தெரிய வருகின்றன (2.5.1925, ப.10)

''... உயர்வு தாழ்வு என்ற ஆணவம் மிகுந்து கிடக்கின்றது. பணக்காரராக இருப்பினும், அன்பு என்பது ஒருவருக்கொருவர் மிகுந்திருக்க வேண்டும். சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவ வேண்டும். குடி அரசின் கருத்தும் இதுவே என, நான் அறிந்து கொண்டேன்" (ப.10) என்னும் சுவாமிகளின் சொற்பொழிவுப் பகுதியும் குடி அரசில், இடம் பெற்றுள்ளது, இங்கு குறிக்கத்தக்கது.

1.11.1925 குடி அரசு இதழ் பக்கம் 6,7 பகுதிகளில், 'நமது பத்திரிகை' என்ற பாடலிலும், முதல் இதழ் தலையங்கச் செய்தி மேற்கோளிலும் 'குடி அரசு' இதழின் குறிக்கோள்கள் மீண்டும் வலியுறுத்தப் பட்டுள்ளன.

நமது பத்திரிகை

"அனைத்துயிர் ஒன் றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப் பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும் தானே" என்பதும்,

குடியரசு...'' நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும், தமிழர்களாகிய, தீண்டாதார் முதலியோருடைய முன்னேற்றத்துக்கென்று உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது... சிறிதுங் கள்ளங் கபடமின்றி, யாருடைய விருப்பு, வெறுப்பையும் பொருட்படுத்தாது தனது ஆத்மாவையே படம் பிடித்தாற்போல் தைரியமாய் வெளிப்படுத்தித் தொண்டு செய்து வந்திருக்கிறது - வரவும் உத்தேசித்திருக்கிறது.

உண்மையில், குடி அரசுக்கு எந்த பிராமணனிடத்திலும் குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதையும் உறுதியாகச் சொல்லுவோம். ஆனால் பிராமணன் உயர்ந்தவனென எண்ணிக் கொண்டிருப்பதிலும், மற்றவர்கள், தீண்டாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள், இழிவான மிருக உரிமைக்கும், பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்திடத்திலும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியிலிருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாகவேயிருக்க வேண்டும், என்று எண்ணிக் கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும், செய்யும் கொடுமையான நிகழ்ச்சிகளிடத்திலுந்தான், குடி அரசுக்கு வெறுப்பு இருப்பதுடன், அதை அடியோடே களைந்தெறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது" - என்பதும்,

''மக்களுக்குள் தன்மதிப்பும், சமத்துவமும், சகோதரத்துவமும், ஓங்கி வளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின்மயமாதல் வேண்டும். உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே, நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணும், உண்மையறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும் சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும். அதைப்பற்றியே 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற் சென்றிடித்தற் பொருட்டு எனும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கைக் கடைப்பிடித்து, நண்பரேயாயினுமாகுக. அவர் தம் சொல்லும், செயலும், தேச விடுதலைக்கும் கேடு சூழ்வதாமின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்' என நமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாக'' குடியரசின் முதலாவது இதழ் தலையங்கத்திலும், (1.11.25 ப.7) பின்னரும் குறிப்பிட்டுள்ளதும் குடி அரசு இதழின் குறிக்கோளையும், கோட்பாடுகளையும் மிகமிகத் தெளிவாகக் கூறுகின்றன.

இக்குறிக்கோள்களை, எட்டும் வகையிலும், கோட்பாடுகளைக் கொண்டதாயும், குடி அரசு தொடர்ந்து தொய்வில்லாமல் தொண்டாற்றியதையும், வெற்றி கண்டதையும் - கொண்டதையும், அதற்குக் கிடைத்த வாழ்த்துக்களின் வழி. உணரப்படுகின்றன.

குறிப்பாக 1.5.1932 குடி அரசு இதழில், 'எட்டாவது ஆண்டின் குடியரசு' என்னும் தலைப்பில், விரித்தல், பாவல் - ஆக்கியோன், புதுவை பாரதிதாசன் என்ற குறிப்புகளுடன் வெளிவந்துள்ள வாழ்த்துப்பா இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

"ஏழாண்டி னின்றுநீ எட்டாம் ஆண்டின்
எழிற்பீடம் ஏறிவிட்டாய் வெல்க வெல்க!
பாழாண்ட படிவிட்டே அறிவியக்கப்

படியேற்றிப் படியேற்றி நாங்கள் கொண்ட
வாழாத நிலை நீக்கி வாழ்நிலைக்கு
வரச் செய்யப் பணியாற்றும் நன்மை தன்னில்
சூழ்கின்ற குடி அரசே! வெல்க உன்றன்
எட்டாண்டின் எழிற்பீடம் வெற்றி கொள்க!
ஏறிநின்ற உனதுநிலை ஏற்றம். கொள்க
வெட்டாத கத்தியை வீசாக் கையால்
வெடுக்கென்று தூக்கிஎமை வீழ்த்தப்பார்க்கும்
முட்டாள்கள் வைதிகர்கள் குருக்கள் சூழ்ச்சி
முறையழிய நடமாடி நாட்டு. மக்கள்
கட்டோடு சமத்துவத்தைத் தாவும் இன்பக்
கருத்தளிப்பாய்குடி அரசே வெல்க நன்றே,
ஏழ்ஆண்டும் உன்நிலையும் உறையும் வாளும்
எட்டாவதாண்டுதான் உனது வீச்சு
கூழ் ஆண்டே கூழ் ஆண்டே என்று கூவும்
கொடும் ஏழ்மைத் தன்மையினை நீக்க வேண்டும்
வீழ்நிலையில், நாட்டினரை வீழ்த்தும் தீய
வெம்பணக்காரத் தன்மை தொலைய வேண்டும்
சூழ்கின்ற பகுத்தறிவின் இயக்கங் கண்ட
தூய குடி அரசே என்றும் வாழி!"

இதேபோன்று 1932 சித்திரை இதழில் ப.12 இல் இடம் பெற்றுள்ள தமிழ் மகளின் 'குடியரசு வாழ்க' என்ற பகுதியிலும் குடி அரசு இதழின் நோக்கம், தொண்டு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. "கடந்த ஏழாண்டு காலமாக நமது குடி அரசு ஆற்றியிருக்கும் பணிகள் அனந்தம் என்பதை எதிரிகளும் ஒப்புக்கொண்டே தீர வேண்டும். சொல்கிறபடி நடத்திக் காட்டுவதில் குடி அரசுக்கு, இணையான, மேலான பத்திரிகைகள் நாமறிந்த பத்திரிகைகள் எதுவுமில்லை. சுயமரியைதைக்கும், உண்மையான உலக விடுதலைக்கும், பெண்கள் நலத்திற்கும், இளைஞர்களுக்கும் நமது குடியரசு ஆற்றி வந்திருப்பது போன்று வேறெந்தப் பத்திரிகையும் நடந்துகொள்ளவில்லை. தனக்கு உண்மை எனத் தோன்றியதை எவர் தயவுக்கும் தாட்சண்யத்திற்கும் பயப்படாமல் வீரமாகக் கூறிவந்திருப்பதில் குடி அரசே முதன்மைஸ்தானம் வகிக்கிறது. மதம், மூடப்பழக்க வழக்கங்கள், தீண்டாமை, சாதி, தேர்த்திருவிழா முதலியவற்றை ஒழிக்கவும் குடியரசு செய்திருக்கும் தொண்டு அளப்பரியனவாகும்".

மேற்சொன்ன செய்திகளால் குடி அரசு இதழின் நோக்கங்கள் மட்டுமல்லாமல், அக்காலத் தமிழ் நடை, சமுதாயச் சூழல், மற்ற இதழ்களின் நிலை போன்ற பல செய்திகள் அறியப் பெறுகின்றன.

### தலையங்கம்

ஒரு இதழின், உள்ளத் துடிப்பின், உயிர்த் துடிப்பின் உண்மைக் குரலாக அமைவது, அதன் தலையங்கப் பகுதியாகும். நடந்தன பற்றிய கருத்துக்களும், நடக்க வேண்டியன பற்றிய கருத்துக்களும், வெளிப்படுவன இப்பகுதியின் வாயிலாகத் தான். ஒரு இதழின் தனித்தன்மை, தலையங்கத்தின் வழியாகத்தான் முடிவு செய்யப்படும். தன் கருத்தாகவும், பிற சொற்பொழிவுகளின் மேற்கோள்களாகவும், திறனாய்வுகளாகவும், மொழியாக்கங்களாகவும், பல நிலைகளில், குடி அரசுவின் தலையங்கங்கள் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. சமுதாய அக்கறையும், அஞ்சாத நடுவுநிலையும், முறையாக ஆற்றுப்படுத்தும் போக்கும் அவற்றில் வெளிப்படுகின்றன.

1. நமது அரசியல் நிலை (17.5.25)
2. உடுமலைப்பேட்டை தாலூகா அரசியல் மாநாடு - வி. கல்யாணசுந்தர முதலியார் சொற்பொழிவு (18.5.25)

   திராவிடா இன்னுமா தீபாவளி, (1946 அக்.12)
3. இந்துக்களின் கொடிய வழக்கம் (7.6.25)
4. தமிழ்நாடு (14.6.25)
5. நிர்மாணத் திட்டம் (5.7.25)
6. சத்தியாக்கிரகம் (28.6.25)
7. சென்னைத் தேர்தல் (19.7.25)
8. சுதேசமித்திரனின் மதுவிலக்குப் பிரசாரம் (26.7.25)
9. ஒரு கோடி ரூபாயும், இருபத்தோரு நாள் உண்ணாவிரதமும், முப்பதினாயிரம் பேர் சிறைவாசமும் (9.8.25)
10. சீர்திருத்தத்தின் முக்கியம் (இந்தியன் சோஷியல் ரிபார்மர்)
11. மதுபானம்
12. தமிழர் மகாநாடு - தீண்டாமை
13. போர்
14. சுயராஜ்யம் (15.11.25)
15. எது தேசத்துரோகம்
16. இதுதானா சுயராஜ்யம் (13.7.46)
17. சி.ஆர்.
18. மதமும், மனித சமதர்மமும் (பெரியார் பேச்சு 27.7.46)
19. வங்காளக் கலவரம் (24.8.46)
20. நமக்கு வேண்டியது சுயராஜ்யமா - சமதர்ம ராஜ்யமா (31.8.46); ஆலயப் பிரவேசம் (1946 நவ.)
21. எல்லோர்க்கும் கல்வி (28.9.46) என்பன குடியரசு இதழில் வெளியான சில தலையங்கத் தலைப்புகள்.

(அடுத்த இதழில் முடியும்)

# இதய நோயாளிகளுக்கு...

## கரோனரி ஆஞ்சியோகிராம்

டாக்டர். சு. அர்த்தநாரி

கரோனரி ஆஞ்சியோகிராம் என்ற பரிசோதனை இன்று இருதய நோயாளிகளுக்கு மிக முக்கியமான பரிசோதனையாகக் கருதப்பட்டு வருகிறது. இருதயத்திற்கு இரத்தத்தை எடுத்து செல்லும் இரத்தக்குழாய்கள் இரண்டு. அது இடது கரோனரி இரத்தக் குழாய். வலது இரத்தக் குழாய் என்று அழைக்கப்படுகிறது. இடது அன்டிரியர் டிசன்டிங் என்றும் இடது சர்க்கம் பிளக்ஸ் என்றும் பிரிகிறது. இந்த இடது இரத்தக்குழாய் அடைப்பினால் இருதயம் மிகவும் பாதிக்கப்பட்டு திடீர் மரணம் ஏற்படலாம். இடது கரோனரி இரத்தக்குழாய்


இடது கரோனரி இரத்தக் குழாய்




பிரிவதற்கு முன்பு அடைப்பு ஏற்பட்டால் திடீர் மரணம் நிச்சயம். இது விதவையாக்கும் இரத்தக்குழாய் என்று அழைக்கப்படுகிறது. வலது இரத்தக் குழாய் அடைப்பினால் இருதயம் பாதிப்பு ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படலாம். இந்த மாரடைப்பு உடனே சிகிச்சை அளித்தால் உயிருக்கு ஆபத்தில்லை.

இந்த கரோனரி இரத்தக் குழாய் அடைப்பு. அத்திரோஸ் குளேரோஸிஸ் என்ற தமனி இறுக்கநோயினால் ஏற்படுகிறது. அதாவது, நாம் உண்ணும் உணவில் பூரிதமான கொழுப்பு (Saturated Fats), பூரிதமடையாத கொழுப்பு (Unsaturated Fats) என்ற கெட்ட கொழுப்புக்களும் உண்டு. இதில் இந்த கெட்ட கொழுப்புக்கள் இரத்தக்குழாய்களின் உட்சுவர்கள் மீது படிந்து பாதித்து, நாளாக நாளாக அடைப்பினை ஏற்படுத்தும். இந்த அடைப்பில் 50%, 60% அடைப்பு என்றும் உள்ளது.

மார்பு வலி, மாரடைப்பு ஆகிய இரண்டுக்கும் காரணமான கரோனரி இரத்தக்குழாய் அடைப்பினை கண்டறிய மிகச்சிறந்த பரிசோதனை தான் கரோனரி ஆஞ்சியோ கிராம் என்ற மிக நவீன பரிசோதனை. இரத்தக்குழாய் அடைப்பினைக் கண்டறிய மற்ற சோதனைகளான T.M.T. என்ற பயிற்சி இ.சி.ஜி.



வலது கரோனரி 100 சதவீத அமைப்பு

சோதனையில் மாற்றங்களை வைத்து கரோனரி இரத்தக்குழாய் அடைப்பு இருக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது.

3000 ஆஞ்சியோகிராம் கடந்த இருபது ஆண்டுகளில் செய்யப்பட்டது. இந்த அனுபவத்தின் மூலம் கூட கரோனரி இரத்தக்குழாய் அடைப்பினை உறுதியாகக் கூற முடியவில்லை. ஆகையால், கரோனரி ஆஞ்சியோகிராமினால் தான் இரத்தக்குழாய் அடைப்பினை துல்லியமாக கண்டறிய முடியும் என்று உறுதியாகக் கூறலாம்.

கரோனரி ஆஞ்சியோகிராம் பரிசோதனை 1959ஆம் ஆண்டு ஜோனைஸ் (Sones)

என்பவரால் முதன்முதலில் செய்யப்பட்டது. அதன்பிறகு இது உலகம் முழுவதும் பரவியது. நமது சென்னையில் மட்டும் ஆண்டுக்கு சுமார் 10,000 கரோனரி ஆஞ்சியோகிராம் செய்யப்படுகிறது. இருதய நோயாளிகளுக்கு குறிப்பாக மார்புவலி, மாரடைப்பு உள்ளவர்களுக்கு T.M.T. பரிசோதனையில் மாற்றம் இருந்தால், இது மிகவும் அவசியமாகும். விமான ஓட்டுநர்கள் இந்தச் சோதனையைச் செய்ய வேண்டியது மிக அவசியமாகும்.

பைபாஸ் அறுவைச் சிகிச்சைக்கு முன்பு கரோனரி ஆஞ்சியோகிராம் மிகவும் முக்கியம். ஆஞ்சியோகிராம் இல்லாமல் பைபாஸ் சர்ஜரி செய்யமுடியாது.

கரோனரி ஆஞ்சியோ கிராம் இருதய உள்ளாராய்வுக் கூடம் என்று அழைக்கப்படும் கேத் லேப்பில்தான் செய்யப்படும். இன்று, இந்த கேத்லேப் அமைக்க ஆகும் செலவு நான்கு கோடி ரூபாய் ஆகும். இந்தச் சோதனைக்கூடத்தில் இரத்தக் குழாயில் செலுத்தும் கத்திட்டர் என்ற பிளாஸ்டிக் குழாய் நடுவில் துவாரம் இருக்கும்.

இந்தத் துவாரம் மூலம்தான் காண்டிராஸ்ட் என்னும் அயோடின் கலந்த திரவம் செலுத்தப்படும். ஏனெனில் இந்தத் திரவம் எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் பளிச்சென்று தெரிந்துவிடும். மேலும் இந்த கத்திட்டர் என்ற குழாய் மூலம் இரத்தக் குழாயில் அல்லது அதன் வாயிலில் செலுத்தினால் இரத்தத்தோடு கலந்து இரத்த ஓட்டத்தையும், இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக்குழாயையும் நன்றாக டி.வி.படத்தில் காண முடியும். இதை சினிமா படக்கேமரா மூலம் படம் எடுக்கலாம் அல்லது கணிப்பொறி தட்டுக்களில் பதிவு

இந்திய அரசியல் சட்டத்தின் படிகளில் சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் மத்திய அமைச்சர்கள் கையெழுத்திடும் காட்சி (24.1.1950)




செய்யலாம்.

நமது வலது தொடையில் அதாவது கீழ் வயிறும் தொடையும் சேரும் இடத்துக்குக் கீழ் வரும் இரத்தக் குழாயினை தொட்டுப் பார்த்த பிறகு அதன் துடிப்பினைக் கண்டு அறிந்து அந்த இடத்தில் வலிதெரியாமல் இருக்க மறத்துப்போகும் ஊசியைப் போட்டு, ஊசியை அந்த இரத்தக்குழாயில் செலுத்தி, சீத் என்ற பிளாஸ்டிக் டியூப்பை செலுத்தி அதன் மூலம் கரோனரி கத்திட்டரை உள்ளே செலுத்தி, கான்டிராஸ்ட் மருந்தினை உட்செலுத்த வேண்டும். இதைப் பல கோணங்களில் படம் பிடிக்க வேண்டும்.

இடது கரோனரி இரத்தக்குழாய்க்கு இடது கரோனரி கத்தீட்டரும், வலது கரோனரி இரத்தக்குழாய்க்கு வலது கரோனரி கத்தீட்டரும் செலுத்திப் படம் பிடிக்கவேண்டும். இருதயத்தின் வலிமையைக் கண்டறிய பிக் டெய்ல் குழாய் மூலம் இருதயத்தின் இடது குழாயையும் படம் பிடிக்க வேண்டும். இதற்குத்தான் இடது அறை ஆஞ்சியோகிராம் என்று பெயர்.

இந்த கரோனரி ஆஞ்சியோ கிராம் செய்ய பலதரப்பட்ட பொருட்கள் தேவை. இதற்கு கத்தீட்டர் குழாய்கள். கான்டிராஸ்ட் என்ற மருந்து.(இந்த கான்டிராஸ்ட் மருந்துகளில்கூட பல வகைகள் உள்ளன). அயோடின் மருந்து, அயோடினில்லாத ஒம்னிபேக் மருந்து (இது விலை உயர்ந்தது). டைலேட்டர் என்ற பிளாஸ்டிக் குழாய் போன்றவை தேவை. ஆராய்ச்சிக்கூடம் வாடகை மற்றும் மேற்சொன்ன மருந்துகளின் விலையைக் கூட்டினால் ரூபாய் எட்டாயிரம் வரை ஆகலாம். மேலும் இந்தச்



வலது கரோனரி இரத்தக் குழாய்

சோதனையைச் செய்யும் இருதய வல்லுநரின் கட்டணத்தையும் சேர்த்தால் இந்த கரோனரி ஆஞ்சியோ கிராம் சோதனை செய்ய ரூபாய் பத்தாயிரம் வரை செலவாகும்.

இந்தச் சோதனையால் எந்த ஆபத்தும் இல்லை. பிறந்த குழந்தையில் இருந்து பெரிய வயோதிகர் வரைக்கும், 85 வயது உள்ளவர்களும் இதைச் செய்து கொள்ளலாம். இதை அனுபவம் மிக்க இருதய வல்லுநரால் மட்டுமே செய்யமுடியும். பொதுவாக டாக்டர்களுக்கு ஆஞ்சியோகிராம் பற்றித்தெரியாததால் இந்தச் சோதனை தேவையில்லை எனவும் கூறிவிடும் சூழல் உள்ளது. சிலர் இந்த சோதனை பற்றி நோயாளிகளுக்குத் தவறான தகவல்களைக் கூறிவருவதால், நோயாளிகள் தயங்கி, இதனைத் தவிர்த்து வருகிறார்கள்.

முக்கிய மூன்று கரோனரி இரத்தக் குழாய்களின் அடைப்புகள், இடது இரத்தக் குழாயில் உள்ள ஆரம்ப அடைப்பு ஆகியவற்றால் திடீர் மரணம் ஏற்படுவதால், இதைத் தவிர்க்க ஒரே வழி கரோனரி ஆஞ்சியோகிராம். அதன்பிறகு பைபாஸ் அல்லது ஆஞ்சியோ பிளாஸ்டி என்ற சிகிச்சை என்ற உண்மையை யாராலும் மறுக்க முடியாது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



